சுதேசமித்திரன்

ஒரு புராதன வைத்தியம்

இவ்விதமாகவே நல்ல செய்தி
கள் பரவுகின்றன. உட்வார்ட்ஸ்
கிரைப் வாட்டர் குழந்தைகளை
நன்கு [illegible] ஆகாக்கிறது :

WOODWARD'S
GRIPE WATER
keeps baby well

1-WW 111-111 W. WOODWARD LTD. LONDON, ...LAND

ஏப்ரல் 9உ வெளி வரும்

பக்ஷிராஜாவின்

பவளக்கொடி

மஹாலிங்கம்...ராஜகுமாரீ...வரதன்..ஸரோஜினி
கிருஷ்ணன்...மதுரம்... லலிதா...பத்மினி நடித்தது

டைரக்ஷன்... ஸ்ரீராமுலு நாயுடு..
நாராயணன் கம்பெனி வெளியீடு

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

பொருளடக்கம்

		பக்கம்
எதிர்பாராத தனப்பிராப்தி	'ராவ்'	5
பெண்மை அழகு	லட்சுமி அம்மாள்	7
தேர்த்தட்டு வார்த்தை	வாரன்	9
சொப்பன வாழ்க்கை (தொடர் கதை)	'ஆர்வி'	11
நீலக் கண்ணாடி	விந்தியா	19
கலா மண்டபம்	சாண்டில்யன்	23
விதி வசம்	ஹரிசரண்	27
ரமாவைக் கேளுங்கள்	குங்குமம்	30
பெரிய புராணம்	பி. ஸ்ரீ.	33
காசி மூட்டை	பொனனி	35
நாமொன்று நினைக்க	மகாலிங்க சாஸ்திரி	39
குடும்ப வைத்தியம்	குச்சா மாமா	45
விமலாவின் தம்பி (சிறுவர் கதை)	மாமு	47

"மித்திரன்" வாரப்பதிப்பில் தோனறும், பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் முற்றிலும் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.



வாழிய செந்தமிழ்! **சுதேசமித்திரன்** வாழ்க நற்றமிழர்!
வாரப்பதிப்பு

Vol. XX] ஸர்வதாரிஹு பங்குனிமீ 14உ ★ 1949-ஹு மார்ச்மீ 27உ No. 8

அட்லாண்டிக் ஒப்பந்தம்

சென்ற வாரம் பிரகடனமான அட்லாண்டிக் ஒப்பந்தம் உலக சரித்திரத்தில் அடுத்தபடியாக உள்ள நிகழ்ச்சிகளை விசேஷமாகத் துரிதப்படுத்தும். உலகில் சமாதானமும், சந்துஷ்டியும் நிலைக்க இவ்வொப்பந்தம் உண்மையில் உதவக்கூடுமா? இதன் விவரத்தையும், இது உருவாகியுள்ள நிலைமையையும் சிந்தித்துப் பார்ப்பவர்கள் அவ்வளவாக நம்பிக்கை கொள்ள இடமில்லை இது குறித்து ரஷ்யப் பத்திரிகை வெளியிட்டிருக்கும் அபிப்ராயத்தையும் கவனிக்க வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சங்கத்தின் லட்சியத்தை ஒட்டியே இந்த ஒப்பந்தமும் அமைந்திருப்பதாக இதன் முகவுரை பறையடிக்கிறது. எல்லா தேசங்களும் கலந்துகொள்ளக்கூடிய ஒரு கூட்டுப் பாதுகாப்பு முறையை அமைத்து அதன் மூலம் உலகில் நிலையான சமாதானம் ஏற்படச் செய்வதே அச்சங்கத்தின் அடிப்படையான நோக்கம். இரண்டு கொடிய யுத்தங்களால் ஏற்பட்ட உணர்வின் விளைவு அந்த ஸ்தாபனம். ஐரோப்பிய நாடுகள் பலவும் ஏற்கனவே ஆதிக்கவிஸ்தரிப்புபோட்டியில் முனைந்து கட்சி கட்டி வந்ததன் பலன்தான் அவ்விரு பயங்கர யுத்தங்களும். இனி அந்தக் கேடான முறைக்கு இடந்தருவதில்லை; அதற்குப் பதிலாக உலக சமாதானத்தைக் காக்கும் வேலையை சர்வ தேசங்களின் கூட்டுப் பொறுப்பாக்குவது என்ற நோக்கத்துடனேயே ஐக்கிய நாடுகள் சங்கம் உருவாயிற்று.

எனினும் தற்போதைய அட்லாண்டிக் ஒப்பந்தத்தின் அடிப்படை என்ன? ஏற்கெனவே உலகை யுத்த படுகுழியில் கொண்டு போய் வீழ்த்திய கட்சி கட்டும் முறையைப் பகிரங்கமாக உயிர்ப்பிப்பதுதான். ஐக்கிய நாடுகள் சங்கம் தனது நோக்கத்தை நிறைவேற்றத் தவறிவிட்டது; எனவேதான் அட்லாண்டிக் ஒப்பந்தம் அவசியமாகிறது என்று பிரிட்டிஷ் அந்நிய மந்திரி பெவின் கூறுகிறார். அவர் கூற்றில் முற்பகுதி உண்மையே. ஆனால், அச்சங்கத்தின் முயற்சி பலிக்கவில்லையென்றால் அதற்கு யார் பொறுப்பாளிகள்? அதில் செல்வாக்குள்ள வல்லரசுகளின் ஓயாப் பூசலே அதற்குக் காரணமல்லவா? உண்மையில் அவைகளிடை மாத்சரியம் வரை மிஞ்சி இப்போது அபாயகரமான கட்டத்தை எட்டிவிட்டதென்பதற்கு ஒரு பட்ட வர்த்தனமான அறிகுறியே தற்போதைய ஒப்பந்தம்.

அமெரிக்க-பிரிட்டிஷ் கோஷ்டியைச்சேர்ந்த நாடுகள் பலவும் இவ்வொப்பந்தத்தில் கையெழுத்திடவிருக்கின்றன. இவற்றில் ஏதாவதொன்று தாக்கப்படுமானால், மற்ற நாடுகள் அனைத்தும் ராணுவம் உள்பட எல்லா வழிகளிலும் அதற்கு உதவி செய்யும் என்பதே இதிலுள்ள முக்கிய ஷரத்து. தற்காப்புக்காகவே இந்த ஏற்பாடு என்று விளம்பரம செய்யப்படுகிறது. ஆனால், ஆங்கிலோ-அமெரிக்க கோஷ்டிக்கும் ரஷ்யாவுக்கும் முற்றிக்கொண்டிருக்கும் பிணக்கை கவனித்து வருபவர்களுக்கு இதன் மர்மம் எளிதில் புலனாகும். ராணுவ அடிப்படையில் வட அமெரிக்க நாடுகளுக்கும், மேற்கு ஐரோப்பிய தேசங்களுக்கும் ஏற்படும் இக்கூட்டுறவுக்கு அமெரிக்காவே மூலகர்த்தா என்பது பகிரங்கம். ரஷ்ய ஆதிக்கம் பரவவொட்டாமல் செய்வதில் அமெரிக்க சர்க்கார் காட்டிவரும் அக்கரையில் ஒளிவு மறைவில்லை.

ஆனால், அமெரிக்கா தன் நோக்கத்தையொட்டி இவ்வாறு பகிரங்கமாகக் கட்சி கட்டுகையில் ரஷ்யா இதைப் பார்த்துக்கொண்டு வாளாவிருக்குமா? தனக்கு எதிராக திரளும் பலங்கண்டு அந்நாடு ஒடுங்கிவிடலாமெனச் சொல்வோருண்டு. ஆனால், சோவியத் நடவடிக்கைகளில் அக்கருத்துக்குச் சிறிதும் ஆதாரங்காணவில்லை. அதற்கு மாறாக ரஷ்யாவும் ஆங்கிலோ-அமெரிக்க கோஷ்டிக்கெதிராகக் கட்சி கட்டும் வேலையில் இன்னும் தீவிரமாக இறங்கி முஸ்தீப்பு செய்துகொண்டு வருவதாகவே தோற்றுகிறது. சமீபத்தில் அங்கு ஏற்பட்ட மந்திரி சபை மாறுதல் குறிப்பதும் அதுவே. இதே சமயத்தில் மாஸ்கோ தூண்டுதலின்பேரில், பல நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் தேச சர்க்கார் ரஷ்யாவுடன் யுத்தம் தொடுத்தால் தாங்கள் ரஷ்யாவையே ஆதரிக்கப் போவதாகப் பகிரங்கமாக அறிவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

—அடுத்தபக்கம்

சென்ற 20-ந் தேதி புதிய டில்லி லேடி இர்வின் காலேஜில் பண்டித நேரு பட்ட மளிப்புப் பிரசங்கத்தைச் செய்தபோது எடுத்த படம். மாணவிகள், ஆசிரியைகள் முதலியோருடன் நேரு நிற்கிறார்.

அட்லாண்டிக் ஒப்பந்தம் ஏற்கெனவே ஆங்கிலோ-அமெரிக்க கோஷ்டிக்கும், ரஷ்யாவுக்கும் உள்ள மாச்சரியத்தை வளர்த்து ஸ்திரப்படுத்திவிடக்கூடும். அவ்வளவுக்கவ்வளவு உலகில் யுத்த பீதி பெருகுவது இயற்கையே. ரஷ்ய ஆதிக்கத்திலுள்ள ஜெர்மன் பிரதேசத்தின் வழியாக பெர்லினுக்குச் செல்லும் ஒரு அமெரிக்க விமானம் தாக்கப்பட்டாலும், அது இவ்வொப்பந்தப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டிய நிகழ்ச்சியே என்று அமெரிக்க அந்நிய மந்திரி கூறுகிறார். உண்மையில் நடவடிக்கை எடுப்பது நிகழ்ச்சியின் தன்மையைப் பொறுத்ததென அவர் கூறியிருந்த போதிலும், ஒரு அற்ப சம்பவமும் மற்றொரு கொடிய யுத்தத்துக்குக் காரணமாகிவிடலாமென்று எங்கும் அச்சம் தோன்றுவது சகஜம்.

ஒரு நாட்டில் நடக்கும் புரட்சி நடவடிக்கைகள் வெளியார் உதவியுடன் கூடியதாயிருந்தால் அவற்றை ஒடுக்க இவ்வொப்பந்தப்படி அந்நாட்டுக்கு மற்ற நாடுகள் உதவி செய்யும் என்றும் அமெரிக்க மந்திரி கூறுகிறார். ஆனால், அப்புரட்சி நடவடிக்கைகளுக்கு வெளி உதவியுண்டா, இல்லையா என்பதை யார் நிர்ணயிப்பது? ஆனால் இவ்வொப்பந்தத்தில் குறித்த ராணுவக் கூட்டுறவு நடவடிக்கை ஐரோப்பா, வட அமெரிக்கா, அல்ஜீரியா ஆகிய பிரதேசங்களிலும், வட அட்லாண்டிக் சமுத்திரத்திலும் ஏற்படும் கைகலப்புகள் சம்பந்தப்பட்டவரைதான் செல்லும் என்று திட்டமாக வரையறுக்கப்பட்டிருக்கிறது. எனவே, இதனால் உடனடியாகத் தங்களுக்கு ஒன்றும் பாதகமில்லையென்று மற்ற பிராந்திய மக்கள் எண்ணலாமாயினும், வேறு வழிகளில் மற்ற கண்டங்களிலுள்ளவர்களுக்குப் பாதகம் நேரக்கூடும். இவ்வொப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிரான்ஸ், ஹாலந்து, பெல்ஜியம் போன்ற நாடுகள் ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் காலனிகள் என்ற பெயரில் அங்குள்ள மக்களை உறிஞ்சி வருகின்றன. தற்போதைய ஒப்பந்தத்துக்குத் தேவையான முஸ்தீப்பில் அவை முனைவது அடிமையாயுள்ள அம்மக்களுக்கு இன்னும் அனர்த்தமாக முடியுமோ என்று அஞ்சக் காரணமுண்டு.

ஜனநாயகம் நிலைபெறச் செய்வதும் தங்கள் முக்கிய நோக்கங்களில் ஒன்று என்று இவ்வொப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கும் நாடுகள் கோஷிக்கின்றன. அந்த ஜனநாயக உரிமை ஐரோப்பிய மக்களுக்கு மட்டுந்தானா? அதே உரிமைக்காக இன்று போராடி வரும் இந்தோனேசியர், இந்தோ சீனர் போன்ற மக்களின் கதியென்ன? ஒருபுறம் ஜனநாயகத்தைப் பகிரங்கமாக வதைத்துக்கொண்டு, அதே சமயத்தில் அந்தலட்சியத்தை நிலை நிறுத்துவதுதான் தங்கள் லட்சியமெல்லாம் என்று தம்பட்டமடிப்போரின் பேச்சை யார்தான் நம்பமுடியும்?

எதிர்பாராத தனப்பிராப்தி

ராவ்

எதிர்பார்க்காமல் திடீரென்று செல்வம் நம்மைத் தேடி வருமா? இதைப்பற்றிச் சிந்தையைச் செலுத்தி முயற்சியில் ஈடுபடு முன்பாக, ஜாதக ரீதியாக இத்தகைய தனப்பிராப்திக்கு இடமிருக்கிறதா இல்லையாவென்பதைக் கவனிக்கவேண்டும். போட்டிப்பந்தயங்களிலும், சூதாட்டம் போன்ற இனங்களிலும் அநேகர் தங்களுடைய பணத்தை வீணாக்குகிறார்கள். இதற்குக் காரணம் உண்டு. சூதாட்டம்போன்றவைகளில் ஈடுபட்டுச் சுலபமாக லாபம் பெற வேண்டுமென்ற உணர்ச்சி ஒவ்வொருவரிடமும் உள்ளூர ஊறிக்கிடக்கிறது. இது இயற்கை.

இப்போதெல்லாம் கூடிய விரைவில் பணக்காரர்களாக ஆகிவிட வேண்டுமென்ற ஒரு வேகம் எல்லோரிடத்திலும் ஏற்படக் காண்கிறோம் தர்ம புத்திரர், நளன் போன்றவர்களே இந்தப் பந்தய சபலத்திலிருந்து விடுபட முடியவில்லையென்றால் சாமான்யமானவர்களைப்பற்றிச் சொல்வானேன்?

செல்வ விஷயத்தைப்பற்றி நிலைமை எப்படியிருக்கிறதென்பதை ஜாதகத்தைக் கூர்ந்து கவனித்துக்கொண்டால் எதிர்பாராமல் தனப்பிராப்திக்கு வழி உண்டா இல்லையாவென்பதைஅறிந்து கொள்ளலாம். இதற்கான அறிகுறியை முக்கியமாக 8-வது வீட்டைக்கொண்டு சொல்லலாம். ஆகவே பணத்தை வீணாக்காமல் உரிய காலம் வருமளவும் காத்திருப்பது நல்லது சிறந்த ஜோதிடரின் உதவியைக்கொண்டு. எதிர்பாராத தனப் பிராப்திக்கு இடமிருக்கிறதாவென்பதைத் தெரிந்துகொள்வதோடு எந்த வருஷத்தில் இம்மாதிரியான அதிருஷ்டம் ஏற்படும் என்பதையும் அறிந்துகொள்ளவேண்டும். சம்பந்தப்பட்ட வருஷத்தில் கீழ்க்கண்ட கிரகசேர்க்கைகள் இருக்கவேண்டும்.

சூரியன்—சனி, அல்லது சனி—உரானஸ், அல்லது சூரியன்-உரானஸ், அல்லது செவ்வாய்—உரானஸ், இவர்களுக்கிடையே அம்சபரிவர்த்தனை இருக்கவேண்டும். கிரகமண்டலத்தில் ஆட்சி புரிபவர்கள் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன் குரு, சுக்கிரன், சனி ஆகிய 7 பேர்களே என்பது விதி. ஆனால் ராகுவும், கேதுவும் ஆட்சி புரிபவர்கள் அல்ல இது நெடுநாளாக அனுஷ்டானத்திலிருந்து வரும் விஷயம் தற்காலத்தில் மேற்கொண்டு இரு கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அக்கிரகங்கள் உரானஸ், நெப்டியூன் எனப்படும் ராகு, கேது ஆகிய இரு கிரகங்களைப் போலவே மேற்படி இரண்டு கிரகங்களும் ஆட்சி புரிபவையன்று கும்பம் மேஷம், மிதுனம் ஆகிய இடங்களில் உரானஸ் இருந்தால் நல்ல ஸ்தானத்திலிருப்பதாகக் கருதப்படுகிறது அதே போல மீனம் கடகம் ஆகியவிடங்களிலிருந்தால் நன்கு இடம் பெற்றிருப்பதாக அபிப்பிராயம் இன்று உரானஸ் மிதுனத்தில் சுமார் 3½ டிகிரியும் நெப்டியூன் கன்யாராசியில் 21·5 டிகிரியிலும் இருக்கின்றன. உரானஸ், மனோதிடத்தை உறுதிப்படுத்தி, கடுமையாக வேலை செய்யும வலுவைக் கொடுக்கும். இக்கிரக விசேஷத்தால், ஜாதகர்கள் சுயேச்சை உணர்வுடன், சம்பிரதாயங்களையெல்லாம் தகர்த்துக்கொண்டு, கட்டுப்பாடுகள் போன்ற விதிகளை மீறும்படி செய்யும் சக்தி பெறுவர். உரானஸ், எப்பொழுதும் வாழ்க்கையின் விசித்திரமான அனுபவ அம்சங்களில் இணைந்து இயங்கும். இதனால் நூதனமான அனுபவங்களேற்படும் எதிர்பாராத விளைவுகளை உண்டுபண்ணுவதும் இக்கிரகத்தின் செயலே.

நெப்டியூனின் போக்கை நிதானிப்பது சிரமம். இதன் தன்மையை திட்டமாக என்னவென்று சொல்வதற்கில்லை. மனோதர்ம உணர்ச்சி பாவ விஷயங்களை எழும்படி செய்யும் கிரகமிது. கனவுகள், அந்தராத்மாவின் குரல், தீர்க்கதரிசனம், ஸங்கீதம், கலை ஆகிய இனங்களுடன் இணைந்துநிற்கும் கிரகமிது மனது. புலன்கள், உணர்ச்சிகள் இவற்றில் ஆட்சிபுரியும் கிரகமும் இதுவே இவர்களைப் பாபக்கிரகங்கள் பார்க்கக்கூடாது. அதிருஷ்டம் ஏற்படக்கூடும் என்று நிர்ணயிக்கப்பட்ட மாதத்தில் சந்திரனுக்கு எதிராக கெடுதலான யோகம் இருக்கக்கூடாது. 7½ நாட்டான் என்று சொல்லும் சனியின் சுற்றுகூட அப்போதிருப்பது சரியல்லவென்று கருதப்படுகிறது. போட்டியோ, ஹேஷ்யமோ முதலியன நடக்கும் தினத்தில் சந்திரன் 5-வது வீட்டுக்குடைய கிரகத்துக்கு நல்ல வீட்சண்யத்திலிருக்கவேண்டும். இவ்வளவும் பிரஸ்தாப தினத்தன்று கூடுமானால் எதிர்பாராத தனப் பிராப்திக்குச் சந்தேகமே கிடையாது.

ஸ்திரீதனம், லாட்டரி, பூர்வீக ஸொத்து, உயில்கள் முதலியவற்றிலிருந்தெல்லாமெதிர்பாராதவிதமாகப் பணம் வருவதற்கு 8 வது வீடு மிகவும் முக்கியமாகும். இந்த இடத்தில் சுபக்கிரகங்கள் இருந்தாலும் உச்சம் பெற்ற கிரகங்கள் இருந்தாலும் மேற்சொன்ன இனங்களில் அதிருஷ்டசாலிகளாக் விளங்குவர். இது ஒரு புறமிருக்கட்டும். 8-வது வீட்டுக்குடைய கிரகம் 8, 2. 5, 9. 10, 11 இடங்களில் இருந்து அக்கிரகத்தை சூரியன், சந்திரன், குரு, அல்லது சுக்கிரன் பார்க்கும் பட்சத்தில் எதிர்பாராத தனப்பிராப்தி சர்வ நிச்சயம். 8-வது வீட்டுக்குடைய கிரகத்தை ஒரு பாபக்கிரகம் பார்க்குமாயின் எதிர்பாராது ஸ்திரீ தனம் கிடைக்கும். இதில்லாமல் சுபக்கிரகத்தின் பார்வை இருக்குமானால் ஸ்திரீகளின் மூலமாக வரககூடிய தனம் குறையும்; அல்லது பிற்காலத்தில் சச்சரவுகளேற்படும்

8-வது வீட்டில் சந்திரன் அல்லது சுக்கிரன் இருக்கும் ஜாதகக்காரர்கள் உத்தியோகத்திலிருக்கும்பட்சத்தில் லஞ்சம் வாங்குவதில் கைதேர்ந்தவர்களாகி மறைமுகமாக ஏராளமாகப் பணம் சம்பாதிப்பார்கள்.

சந்திரனையோ அல்லது சுக்கிரனையோ சூரியன் உரானஸ் அல்லது செவ்வாய் பார்த்தாலும் சரி; இந்தக் கெடுதலான மூன்று கிரகங்களில் ஏதாவதொன்று சந்திரன் அல்லது சுக்கிரனுக்கு 45 டிகிரிக்குள்ளிருந்தாலும் சரி; சனி 9, 10 வது வீட்டில் இருந்தால் முக்கியமாக சர்க்கார் உத்தியோ

கத்திலுள்ளவர்கள் லஞ்சம் வாங்கியதற்காக வேலையிலிருந்து நீக்கப்படுவர்; அல்லது தண்டனைக்குள்ளாவர். சுக்கிரனிலிருந்து 8-வது வீட்டில் அசுபக் கிரகங்கள் உள்ள ஜாதகக்காரர்கள் வியாபாரிகளானால் நல்ல சுபிட்சத்தை அடைவார்கள் வியாபாரத்தில் எதிர்பாராத லாபத்தை அடைவதற்கான சந்தாப்பங்களேற்படும்.

சனியிலிருந்து 8-வது இடத்திலுள்ள கிரகம் உச்சமடைந்தோ அல்லது கேந்திர, திரிகோணம் பெற்றிருந்தோ இருக்கும்பட்சத்தில் எதிர்பாராத தனப பிராப்தி உண்டு

தனாதிபதியும் லக்னாதிபதியும சேர்ந்திருப்பது; அல்லது இவர்கள் பரஸ்பரம ஒருவருடைய வீட்டில் மற்றொருவர் இருப்பது: இருவருடைய பரஸ்பர வீட்சண்யம் இவற்றால் அனாயாசமாகத் தனயோகம் கிட்டும் எனலாம். இதனால் எதிர்பாராத தனலாபம் வருவதோடு சிரமமில்லாமல் பணம் சம்பாதிப்பதற்கான சந்தர்ப்பங்களும், ஏற்படும். செல்வ சுபிட்ச நிலைமைகளுக்கு இந்த அம்சமே சிறந்த அத்தாட்சி. வாழ்க்கையில் பணக்கஷ்டமேயிராது.

8-வது வீட்டுக்குடைய கிரகம் சூரியனாகவிருந்து, நல்ல பலத்தோடு நன்கு இடம் பெற்றிருந்தால் நல்ல உயர்தரக் குடும்பத்தில் விவாகம் நடக்கும். இந்த சம்பந்தத்திலிருந்து யதேஷ்டமான உதவி கிடைக்கும். 19, 38, 42 வயது கட்டங்கள் இத்துறையில் முக்கியமானவையாகும்.

8-வது வீட்டுககுடைய கிரகம பலவீன நிலையிலுள்ள சந்திரனாயின் லாட்டரியிலோ அல்லது ஸ்திரீ தனத்தின் மூலமோ லாபமிராது. ஆனால், நல்ல உத்தியோகம், சம்பாத்தியம், நல்ல ஆதரவு முதலியவையெல்லாம் கிட்டும். இந்த அனுகூலம் 20 வது வயதிலும், 24, 30, 36. 40, 44 வயதிலும் வாய்ப்பதாகும்.

புதன் 8-வது வீட்டுக்குடைய கிரகமாக அமைந்துவிட்டால் ஸ்திரீ தன விஷயத்தில் ஏமாற்றமே. அடிக்கடி பண முடை ஏற்படும். அசௌகரியங்களும் உண்டாகும். 8 வது வீட்டுக்குடைய புதன் தன்னுடைய வீட்டிலேயே பலத்தோடிருந்தால் எதிர்பாராத தனப்பிராப்தி உண்டு. 8-வது வீட்டில் சுக்கிரன் இருந்தாலும் சரி. சுக்கிரனே 8-வது வீட்டுக்குடையவனாயிருந்தாலும் சரி ஸ்திரீ தனம் வரும். மேற்படி ஸ்திரீயின் உறவினர்கள் மூலமாகவும் பண அனுகூலமேற்படும். பத்திரத்தின் மூலமாகவும் பணம் சேரும். இதை **'மிருத்யு பத்திரம்'** என்பர். சுபக்கிரக திருஷ்டியிருந்தால் இத்தகைய பயனை அனுபவிக்கலாம். அல்லது ஜனன சுக்கிர அம்சமிருந்தாலும் மேற்சொன்ன பலனேற்படும் 5-வது வீட்டுக்கிரகத்துக்குச் சந்திரன் நல்ல பார்வையில் இருக்கவேண்டும் அதாவது சந்திரன் 120 டிகிரிக்குள்ளாகவோ அல்லது 60 டிகிரிக்குள்ளாகவோயிருந்து வீட்சண்யம்பெற வேண்டும். இந்த கட்டத்திலேயே எதிர்பாராமல் லாட்டரியும் விழக்கூடும. ஜனனகால கிரக நிலைப்படி ஜாதகர்களுடைய சுக்கிர அம்சத்தில் சூரியனிருப்பதாக வைத்துக் கொளவோம் இந்த சூரியனை வருஷாந்த ஜாதகத்தில் குருவோ, சுக்கிரனோ பார்க்கவேண்டும் அப்போது அகஸ்மாத்தாகத் தனப் பிராப்தி ஏற்படும்,

சில அபூர்வமான இனங்களில் பலமான நஷ்டம ஏற்படுவதற்கும் இடமுண்டு. அகஸ்மாத்தாகப் பணம் சேருவதற்கான இந்த யோகம் 16, 24, 32, 40 48 வயதுகளில் ஏற்படுவதுண்டு.

8-வது வீட்டுக்குடைய கிரகம் செவ்வாயாகவிருந்தால் எதிர்பாராத தனலாபத்துக்கு இடமிராது. செவ்வாய் ரொமப பலமாகவிருந்தால் தொழில் பங்காளியிடமிருந்தோ அல்லது வாழ்க்கைத் துணைவரிடமிருந்தோ பூமி லாபமடையலாம் 8-வது வீட்டுச் செவ்வாய் செல்வ விஷயங்களில் அனுபவிப்பதற்குக் கிட்டாமற்போனாலும் பேராசை இருந்து வரும்படி செய்யும.

இந்த இடத்தில செவ்வாயிருப்பதால் மோட்டார், ஸைக்கிள் இவை காரணமாக திடீரென விபத்துக்களாகநேரலாம். இது ஒருவருடைய 30, 40-வது வயதில் நிகழலாம்.

8-வது வீட்டுக்குடைய கிரகம் குருவானால் சகல துறைகளிலும் அனுகூலமேற்படும. ஸ்திரீதனம் வருவதோடு உறவினர்கள், முதியவர்கள் இவர்கள் மூலமாகவும் செல்வம் வந்துசேரும இதற்கு 24, 36, 48, 50, 60-வது வயது உகந்த கட்டங்களாகும்.

சூரியன் 8-வது வீட்டுக்கிரகமாயிருக்கும்பட்சத்தில் ஸ்திரீதனம் வருமென்பதைக் கனவில் கூட எண்ணவேண்டியதில்லை. எந்தத் துறையிலிருந்தும் எதிர்பாராது செல்வம் வருமென்று எண்ண இடமிராது. இதில் வீணில் காலத்தை விரயம் செய்யவேண்டியதில்லை. மனைவி வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் ஏழ்மையான ஸ்திதியை அடைவார்கள். வாழ்க்கையில் மனதுக்குப்பிடித்தமான வாழ்க்கைத்துணைவியைப் பெறுவதும் சாத்தியமல்ல.

சனி 8-வது வீட்டுக்குடைய கிரகமாயிருப்பின் விவாகத் தொடர்பினால் செல்வத்தை எதிர்பார்க்கலாம். ஆயினும இந்தச் செல்வம் பயன்படுவதாயிராது. வாழ்க்கையிறுதி ஒரே துயரப்படலமாயிருக்கும்.

8-வது வீட்டில் உரானஸ் இருந்து அதற்குச சுபககிரகத்தின் திருஷ்டியிருக்குமானால் கல்யாணத்தில ஸ்திரீ தனம் வரும. 8-வது இடத்திலுள்ள உரானஸ் காரணமாக எதிர்பாராது ஆபரேஷன் செய்துகொள்ள நேரும். சண்டை பூசல்களில் இவர்களுக்கு நிலைமை சாதகமாயிராது. மாஜிஸ்திரேட்டுகள், போலீஸ் இத்துறையிலிருப்பவர்களால் மன நிம்மதியற்றுப்போகும் எதிர்பாராத தனப் பிராப்தி ஏற்படுமென்பதற்கான அறிகுறிகள் சொப்பன பூர்வமாகவும் தெரிய வரும். எனவே பிரத்யேகமான முறையில் பணம் சேரும்.

8-வது வீட்டில் நெப்டியூனிருந்தால் எதிர்பாராத தனப் பிராப்தி உண்டு. ஆனால், இத்தகைய கிரகத்தை 8-வது இடத்தில் உடையவர்கள் உஷாராயிருக்கவேண்டும். ஏனெனில் பக்கத்திலிருப்பவர்களின் சூழ்ச்சியால் பெரிய அளவில் திரவிய விரயமேற்படும். லாட்டரியில் செல்வம் வரககூடுமானாலும் இது தவறான வழியில் செலவாகிவிடும. அல்லது நஷ்டமேற்படும் மருந்தென்று விஷத்தைக்குடிக்கவும் கூடும். பிறர் கொடுககும் மருந்துகள் விஷயத்தில் ஜாககிரதையாயிருக்க வேண்டும.

லக்ன ஸ்புடத்துடன் சந்திரனின் ஸ்புடத்தைக் கூட்டி இந்த மொத்தத் தொகையிலிருந்து சூரியனின் ஸ்புடத்தைக் கழித்துப் பார்க்கையில் வித்தியாசம 7 8 டிகிரிக்குள்ளிருந்தால் ஒருவர் நிச்சயமாக பெரிய பணக்காரராயிருப்பார்.

———



20

பெண்களும் புதுமைக் கல்வியும்

★

'அடுப்பூதும் பெண்ணுக்குப் படிப்பு ஏதுக்கம்மா?—என்றாள் பாட்டி. ஆனால் அடுப்பு ஊதுவதையும் கல்வியாகச் சொல்லிக் கொடுக்கிறார்களாமே சில பள்ளிக்கூடங்களில்!' என்றாள் ஸரோஜா.

'சில பள்ளிக்கூடங்களில் மட்டுமா? எல்லாப்பெண் பள்ளிக்கூடங்களிலும் அடுப்பு ஊதும் கல்வியும் கற்பிக்கப்படும் என்று கல்வி மந்திரி சொல்லியிருக்கிறாரே சட்டசபையில்' என்றாள் கமலா.

'அடுப்பு ஊதக் கற்றுக்கொள்ளவும் பள்ளிக்கூடம் போகவேணுமா? என் பாட்டி ரஸம் வைத்தால் தேனாயிருக்குமே—எந்தப் பள்ளிக்கூடத்தில் படித்தாள்?'

ரஸம் தேனாகிவிட்டால் அது எப்படி ரஸமாயிருக்கமுடியும்? கலாசாலைப் பெண்கள் ரஸம் வைத்தால் அது சாம்பாராகும் என்பது எனக்கு நேரில் தெரியும்?

'ஆதாரக் கல்வி முறையைக் குறித்து ஆட்சேபம் செய்கிறவர்களும் இப்படியெல்லாம் குதர்க்க வாதம் செய்கிறார்கள் கல்வி தொழிலைச் சாதனமாகக் கொண்டு அமையுமென்றால், பாட்டியின் ரஸம் தேனாவதுபோல், தொழில் கல்வியாகுமா? அல்லது கலாசாலைப் பெண்ணின் ரஸம் சாம்பாராவதுபோல இரண்டும் கெட்டுப்போகுமா? — என்கிறார்கள்'' என்றேன்.

'இது இருக்கட்டும்-பெண் கல்வி புதிய முறையில் சரியாக அமைந்திருக்கிறதா? சமையல் செய்வதும் ராட்டை சுற்றுவதும் நூல் நூற்பதும் கல்வியின் முக்கிய அம்சங்கள் என்றால், கல்விச்சாலையைக் காட்டிலும் இல்லம் அல்லவா பெண்களுக்குத் தக்க பயிற்சிச்சாலை?' என்றாள் கமலா.

'சமையலும் நூல் நூற்பதும் ராட்டை உருட்டுவதும்தான் முக்கியமான கலைகளாகக் கற்பிக்கப்படுமென்று உனக்கு யார் சொன்னது? வீட்டுத்தொழிலைச் சாதனமாகக் கொண்டு பெண்களையும் வாழ்க்கைக்குத் தயாரிப்பதுதான் ஆதாரக்கல்வியின் நோக்கம் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறாரே கல்வி மந்திரியார்' என்றேன் நான்.

'புதியபெண் கல்வியைச் சமையல் கல்வியென்று சிலர் பரிகசிக்கிறார்களே!' என்றாள் ஸரோஜா.

''இதைச் சமயல்-கலவியென்று சொல்வது போலத்தான் ஆதாரக் கல்வியைத் தொழிற கல்வியென்று சொல்வதும், "ஆதாரக் கல்வி என்பது ஆதாரமே இல்லாத கல்விதான்!'' என்று அடியோடு பரிகசித்த காலம் மலையேறிப்போய்விட்டது இதைச் சரியான கல்வித் திட்டமென்று ஒப்புக்கொண்டு இதன் சீரமைப்பு முறையில் சிறந்த நற்பயன் விளைக்கும் நிர்மாண ஆலோசனைகளை வெளியிடுவதுதான் இனிமேல் அறிஞர்களான ஆண்களும் பெண்களும் செய்யவேண்டிய காரியம். பெண்களின் ஆதாரக் கல்விமுறையில் ஆதாரத் தொழிலாக வீட்டுத் தொழிலை அமைத்துக் கொள்வதில் தவறு என்ன?' என்றேன் நான்.

'சமைப்பதும் சாப்பிடுவதுங்கூடக் கல்வியாகிக் கௌரவிக்கப்படுகிறதே என்பது எனக்கு இன்னும் அதிசயமாயிருக்கிறது' என்றாள் கமலா

'சமயல், சாப்பாடு முதலிய வீட்டுக் காரியங்களில் நிபுணர்களாக இருந்த பாட்டிமார் கல்விமான்களாகக் கருதப்படவில்லை: ஆனால் தராசு வைத்துக்கொண்டு உப்பையும் புளியையும் காரத்தையும் நிறுத்துப்போட்டுச் சமையல் செய்யும் கலாசாலைப்பெண் வயிறார உண்டு நன்றாக வளரவும் தெரியாத இந்தப் பட்டதாரிப் பெண்—கலைமகளாக மதிக்கப்படும் காலம் வந்துகொண்டிருக்கிறது!' என்றாள் ஸரோஜா

நான் சொன்னேன்: 'பழைய தலைமுறைப் பெண்களுக்குத்தான் என்ன பிரமாதமாகத் தெரிந்துவிட்டது. சமையல் சாப்பாடுகள் விஷயமாய்? அரிசியைத் தீட்டித் தீட்டிச் சத்தையெல்லாம் போக்கிவிடுகிறார்கள் மல்லிகைப் பூவைப்போல் வெளுத்திருக்க வேணுமாம் சோறு. வடிப்பதிலும் சத்தான கஞ்சியெல்லாம் போய்விடுகிறது பெருச்சாளிக்கு; என்ன ஜீவகாருண்யம்! தாங்கள் சத்தில்லாத உணவைத் துறவிபோல் உட்கொண்டு பெருச்சாளியைக் கொழுக்க வைக்கும் தியாக புத்தியை என்னென்பது? ஆகவே சத்துள்ள உணவை எப்படித் தயாரிப்பது முதலான அடுப்புவேலை

களையும் கல்வியின் பகுதியாகத்தான் சொல்லிக்கொடுத்து ஆகவேணும். இதை ஓர் ஆதாரத் தொழிலாகக் கொண்டு நம்மக்கள் உணவு, உடம்பு, விவசாயம் முதலான விஷயங்களை ஏன் கற்பிக்கலாகாது? இதை வைத்துக்கொண்டே பூமி சாஸ்திரம், தேச சரித்திரம்கூடக் கற்பிக்க முயலலாமே'

'நீ சொல்லுகிறபடியே வைத்துக்கொண்டாலும், இந்தப் பயிற்சி போதுமா பெண்களுக்கு? பெண்கள் மூக்குக்கண்ணாடி போட்டுக்கொண்டு தங்கள் நேரத்தைச் சமையலுக்கும் சாப்பாட்டுக்கும் புஸ்தகங்களுக்கும் பங்கிட்டு வைத்தால் குடித்தனம் சரியாக நடந்துவிடுமா? பெண்கள் மணம் செய்துகொண்டு வாழ்க்கை நடத்தவேண்டாமா? அதற்கெல்லாம் புதிய கல்விமுறையில் இடம் இருக்கிறதா?' என்று கேட்டாள் ஸரோஜா.

'படிக்கிற பெண்களெல்லாம்—இனிமேல் எல்லாப் பெண்களும் படிக்கவேண்டியதுதானே—தாதிகள் வைத்துக் குழந்தைகளை வளர்க்க முடியுமா? இவர்கள் தலைவியராக மட்டும் வாழ்க்கை நடத்தமுடியுமா? தலைவன் அவ்வளவு சம்பாதித்தால் அல்லவா தலைவி சிசுபாலனத்திற்குத் தாதிகள் வைத்துப் பசுபாலனத்திற்கு வேலைக்காரர்கள் வைத்து வாழ்க்கை நடத்த முடியும்?' என்று கேட்டாள் கமலா.

ஸரோஜாவோ 'அப்படியானால் சமையலுக்கும் ஆள் வைத்துக் கொள்ளலாமே' என்றாள்.

நான் சொன்னேன்: 'சிசுபாலனமும் இல்லத் தொழிலாகவே கற்பிக்கப்படும். பெற்றவர்களெல்லாம் குழந்தைகளை வளர்க்கத் தெரிந்தவர்களா? குழந்தைவளர்ப்பைக்குறித்து விஞ்ஞானரீதியாக நமது பெண்களுக்கு என்ன தெரியும்? உடற்கூறு தெரியுமா, ஆரோக்கிய சாஸ்திரம் தெரியுமா? உளநூல் முறையில் குழந்தைவளர்ச்சியை அறிவார்களா? இவையெல்லாம் தெரிந்தால் அல்லவா பெற்றோரின் பொறுப்பை பெற்றோர் உணர்ந்துகொள்ள முடியும்? தங்கள் பொறுப்பை உணர்ந்து கொள்ளாத பெற்றோர்கள் அடக்குமுறையைக் கையாண்டார்கள்; அல்லது அசட்டு அன்பினால் குழந்தைகளைக் கெடுத்துவிட்டார்கள் இந்த நிலையில் இந்தப் புதிய ஆதாரப் பெண் கல்வி முறையில் சிசுபாலனம் முதலான கிளைகளோடு கூடிய இல்லத் தொழிலின் ஞானம் கிடைக்குமே. இந்த ஞானம் குடும்ப வாழ்க்கைக்கு மூலதனமாகப் பயன்படுமல்லவா?'

'நோயாளிகளுக்கு மருத்துவத்தாதியாக எப்படி உதவிசெய்வதென்பது கூடச் சொல்லிக்கொடுக்கப் போகிறார்களாமே. இனிமேல் மருத்துவத் தாதிகளாகவும் எத்தனையோ பெண்கள் ஆஸ்பத்திரிகளில் உத்தியோகம் பெறக்கூடும் என்றாள் ஸரோஜா.

'ஆமாம்; சமையல் தொழிலைக் கற்றுக்கொண்டு சமையல்காரி — உத்தியோகம் தேடுவதைக்காட்டிலும், சிசுபாலனம் கற்றுக்கொண்டு குழந்தைத் தாதி உத்தியோகம் தேடுவதைக்காட்டிலும், மருத்துவத்தாதி உத்தியோகம் தேடுவது பாதகம் இல்லையே' என்றாள் கமலா.

அதற்கு நான், 'மருத்துவத்தாதியின் தொழிலைக் கற்றுக்கொண்டவர்களெல்லாம் உத்தியோகம்தான் பார்க்கவேண்டுமா? ஆஸ்பத்திரிகளிலும் அந்த வேலை பெண்களுக்கு இசைந்ததுதான்; தங்கள் வீடுகளிலும் அப்படியே. சொந்த வீடுகளிலும் அக்கம் பக்கங்களிலும்நோயாளிகளுக்குப் பணி செயயக்கூடிய பெண்கள் இருந்தால் அந்த இடமே ஒரு சந்தோஷ நிலையம் ஆகிவிடாதா? மருத்துவத் தாதி-வேலை வீட்டுப்பணியும்தான், ஆஸ்பத்திரிகளில் நாட்டுப் பணியும்தான் இனிமேல் நாம் உத்தியோக மனப்பான்மையுடன் கல்வியை நோக்கலாகாது சுதந்திர இந்தியாவின் சுத்தரத்திருப்பணியென்ற மனப்பான்மையுடன்தான் எல்லா வேலைகளையும் செய்யவேண்டும்.

நீ சொல்வதைப் பார்த்தால், பெண்களுக்கு உயர்தரக் கல்வி அவசியமில்லை என்பதல்லவா புதுமைக் கல்வி முறையின் நோக்கம் என்று தோன்றுகிறது' என்றாள் ஸரோஜா

'அப்படி நினைத்துவிடக்கூடாதென்றே கல்வி மந்திரி ஜாக்கிரதையாக அரசாங்கத்தின் நோக்கம் அதுவல்ல என்று தெளிவுபடுத்தியிருக்கிறார் சபையிலே குடும்ப-விஞ்ஞானத்தில் பயிற்சிபெறும் பெண்கள் இஷ்டப்பட்டால் பல்கலைக் கழகத்திலும் பிரவேசிக்கலாம் என்பதை வற்புறுத்தியிருக்கிறார். வாழ்க்கைத் துணைவியாகிய மனைவிக்கு வாழ்க்கைத் துணையாக இருப்பதுதான் கல்வி யென்று கல்வி மந்திரி சொல்லவில்லை. பெண்களில் பெரும்பாலாருக்கும் பிற்கால வாழ்க்கைத் தொழிலுக்கு உதவியாக இருக்கும்படியே அமைந்திருக்கிறது. கல்வியின் சீரமைப்பு முறை என்கிறார் நீங்கள் பத்திரிகையில் ஜாக்கிரதையாகப் படித்துப் பார்க்கவில்லையா?' என்றேன் நான்

அப்போது பக்கத்து வீட்டுச்சிறுமியான காமு பாடிக்கொண்டுவந்தாள். பாரதி பாட்டுத்தான்; அதிலும் 'பெண்கள் விடுதலைக் கும்மி'தான். பாரதியார் தமது வீராவேசமும் சுதந்திர ஆவேசமும் தோன்றப் பாடியிருக்கும் அந்த விடுதலைக் கும்மியில்,

பட்டங்கள் ஆள்வதும்
சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள்
நடத்த வந்தோம்

என்ற பகுதியைத்தான் பாடிக்கொண்டு வந்தாள்

'இதற்கும் புதிய கல்வி முறை இடம் கொடுக்கத்தான் செய்யும். எனினும் பெண்களில் பெரும்பாலார்—ஏன், ஆண்களில் பெரும்பாலாரும் கூட—'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வது'மா நடத்தப் போகிறார்கள்? என்றேன் நான்

'குடித்தனக்கல்வியைக் கல்வியின் முக்கிய அம்சமாகக் கருதுவதால்,

உலக வாழ்க்கையின்
நுட்பங்கள் தேரவும்
ஓது பற்பல நூல்வகை கற்கவும்

ஆசைப்படுகிறாளே பாரதியாரின் புதுமைப்பெண், அதற்கு வழிதுறை இல்லாமல் போய்விடுமோ?...என்று தான் அஞ்சினேன் என்றாள் ஸரோஜா.

'அப்படி ஒன்றும் இல்லை. புதுமை கல்வி முறையிலும் சரோஜினியாகவோ, அனிபெஸன்டாகவோ வளர்ந்தோங்க வசதி இருக்கத்தான் செய்கிறது. பெண்களில் பெரும்பாலார் சுதந்திர இந்தியாவில் நல்வாழ்வு வாழ்ந்து நாட்டைப் புதுமையுறச் செய்யவும் வசதி இருக்கிறது' என்றேன்.



தேர்த்தட்டு வார்த்தை

குஞ்சரன்

வாரன்

19

பகைவன் யார்?

★

ஒருவன் தான் வளர்த்து வந்த நாயுடனே எப்பொழுதும் கொஞ்சி விளையாடிக்கொண்டிருந்தான். நாள் தவருமல் கவனமாக ஆகாரம் கொடுத்து அதை அடிக்கடி தழுவி முத்தமிடுவதும் வழக்கமாகி விட்டது. நாயில்லாமல் வெளிச் செல்வதே கிடையாது. எப்பொழுதாவது சென்றுவிட்டால் நாயைப் பற்றிய ஞாபகமாகவே அவனுக்கு இருக்கும். இவ்வாறு நாயுடனே காலங் கழித்து வந்தவனுக்குத் 'தன் பொழுது பயனில்லாமல் வீணுக கழிகிறது!' அதனுல் நாயைத் தன்னை விட்டு அடியோடு அகற்றிவிட வேண்டும்' என்ற சங்கல்பம் ஒரு நாள் திடீரென்று உண்டாயிற்று. உடனே நாயை வீட்டை விட்டு அடித்துத் துரத்திவிட்டான். துரத்தினுலும் நாய் அடிக்கடி அவன் வீட்டு வாசலையே நெருங்கிக்கொண்டிருந்தது. தன்னை வளர்த்த எஜமானன் வெளியில் செல்லும்பொழுதெல்லாம் தன்னைத் துரத்திய பிறகும் சில நாட்கள் அவனைப் பின் தொடரவே செய்தது. எல்லாருடைய நாய்களும் அப்படித்தான் செய்யும். அந்த நாயின் ஸ்தானத்தில்தான் நம்முடைய ஆசை இருக்கிறது. நாம் விட்டாலும் நெடு நாட்களாக (ஏன் அநேக ஜன்மங்கள்) நாம் அதைச் சீராட்டி வளர்த்திருப்பதால் அது நம்மை லேசில் விடுமா? என்று ராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஆசையைவிட முயன்றும் உடனே முடியாமல் வருந்தின சிஷ்யனுக்குப் பதில் சொன்னராம்.

அவ்வாறே எல்லாவற்றிலும் ஆசையை அடியோடு துறந்திருக்கும் ஞானியிடத்திலும் ஆசை, தானே அணுகாதிருப்பதில்லை. அவனை ஆசை அணுகினுல் அதற்கு இடங்கொடாது எவ்வாறு அகற்றிக்கொள்ளலாம்? என்பதைக் கண்ணன் அடுத்தபடியாகச் சொல்லுகிருர்.

துய்யாது தான்துறந்தான்
 துய்த்தபொருள் விட்டாலும்
மெய்யாரும் சங்கம்
 விடார்திருக்கும்—பெய்யவே
சென்று பரமாகும்
 சீருயிரைக் கண்டக்கால்
நின்றதுவும் நீங்கும் நெகிழ்ந்து.

(இ-ள்) துய்யாது துறந்தான்—(விஷயங்களை) அனுபவியாது துறந்தஞானி துய்த்த பொருள்தான் விட்டாலும்—முன்னே அனுபவித்த விஷயங்களைத்தான் கைவிட்டாலும், மெய் ஆரும் சங்கம் விடாது இருக்கும்—ரஸம் நிறைந்த அவ்வாசைதான் அவனைவிடாது பற்றி இருக்கும். பெய்யவே சென்று—நெருங்கிப் போய், பரம் ஆகும் சீர் உயிரை—மேன்மையான சிறந்த ஆத்மஸ்வரூபத்தை, கண்டக்கால்—பார்த்தால், நின்றதுவும்-எஞ்சி நின்ற ஆசையும், நெகிழ்ந்து—(நாளடைவில்) வலி குன்றி, நீங்கும்—அகன்றுவிடும்.

விஷயா விநிவர்த்தந்தே
 3
நிராஹாரஸ்ய தேஹிந:
ரஸவர்ஜம் ரஸோப்யஸ்ய
 3
பரம்த்ருஷ்ட்வா நிவர்த்ததே.

(இ-ள்) நிராஹாரஸ்ய—(இந்திரியங்களுக்கு) ஆகாரமான விஷயங்களைத் துறந்த தேஹிந:—புருஷனுக்கு ரஸவர்ஜம்-ஆசை நீங்கலாக விஷயா:—சப்தாதி விஷயங்கள், விநிவர்த்தந்தே-நிவர்த்தியாகின்றன. அஸ்ய—இந்த ஞானிக்கு ரஸோபி-அந்த ஆசையும் பரம்த்ருஷ்ட்வா—ஆத்மஸ்வரூபத்தைக் கண்டு, நிவர்த்தந்தே—நீங்குகின்றது.

பலனில் இச்சையை விட்டு சுகதுக்கம், வெற்றி தோல்வி லாப நஷ்டம் இவற்றைச் சமமாக எண்ணிக் கருமத்தைச் செய்யும்யோகி ஆசைக்கிடமான பொருள் போகம் அதிகாரங்களை வேண்டாமென்று துறப்பான். அவன் துறந்தாலும் அவை பற்றி வரும் ஆசை அந்த ஜன்மத்திலும் கழிந்த பல ஜன்மங்களிலும் அவனோடு கூடவே இருந்ததால், அது அவனை விடாது. அதை அவனே வளர்த்து அணைத்து அணைத்துப் பழகி இருக்கிறுனதலால் பூர்வ வாசனையால் அவனைவிடாது அண்டவே செய்யும். ஆத்ம தரிசனம் பெற்றல்தான் அடியோடு அகலும். அகற்றப் பார்த்தாலும் அடியோடு நீங்காமல் ஆத்மஸ்வரூபம் கிட்டும் வரை அடிக்கடி அண்டிக் கொண்டே இருக்கும். இந்திரியங்களின் மூலமாக அவன் மனதைப் பலவந்தமாய் இழுத்துக் கலங்கச் செய்யும்.

ஒவ்வொரு ஜீவாத்மாவும் தனக்கு அந்நியமாகப் பாவிக்கவேண்டிய கொடிய விரோதி ஆசை. தன்னை அண்டவொட்டாமல் வெகு தொலைவில் விலகியிருக்கவேண்டிய விரோதியும் ஆசையே. அக்கொடிய விரோதி மாயமாய்த் தனக்குப் பெருங்கேடுகள் விளைவித்து வருவதை அறியாமல் அவற்றை அனுகூலங்களாகவும், செய்யும் விரோதியை ஆப்த நண்பனுகவும் எண்ணிக்கூடவே வைத்து அன்பும் ஆதரவும் காட்டி நீண்ட காலம் பரிபாலித்த பின்பு ஒரு ஜீவாத்மா திடீரென்று 'ஆசையை விரோதி' என்றுணர்ந்து விலக்கப் பார்த்தால் சுலபமாக முடியுமா? ஆசையை விலக்குவதையே மோக்ஷத்திற்கு ஸாதனமாகப் புத்தர் உபதேசித்தார். அதையே மோக்ஷம் என்று நம்மாழ்வார் மிக அழுத்தமான வார்த்தைகளில் "அற்றது பற்று எனில். உற்றது வீடு உயிர்." என்று வெளியிட்டார். மேலும் மேலும் பிறப்பை உண்டாக்குவது! 'ஆசையாகிய வித்தே' என்று திருவள்ளுவர்

அவா என்ப எல்லா உயிர்க்கும் [எஞ்ஞான்றும்
தவாப் பிறப்பு ஈனும் வித்து.

[அவா—ஆசை எஞ்ஞான்றும்—எப்பொழுதும். தவா—கெடாத]

என்ற குறளில் வெளியிட்டார். ஒவ்வொருவரிடமும் அகத்திலே குடி கொண்டிருக்கும் கொடிய விரோதியாகிய ஆசையை மோக்ஷ இச்சையுடையவர் அவசியம் அடியோடு அகற்ற வேண்டும் என்று அநேகமாக உலகில் எல்லா மதங்களும் சொல்லுகின்றன. ஆனால் ஆசையை அகற்றுவது 'மனித சக்திக்கே அதீதமான காரியம்' என்ற மலைப்பையே உண்டாக்குகிறது பலருக்கு. 'அவ்விதம் மலைக்கவேண்டாதபடிக் கண்ணன் கீதையில் ஆசையை அகற்ற அதிசுலபமான வழியொன்றைக் காட்டியிருக்கிறார் பலனில் இச்சையின்றிக் கருமம் செய்தால் ஆத்ம ஸ்வரூப ஞானம் ஏற்படும் 'ஏற்பட்டால் விலக்க முடியாமல் விஷயங்கள் பற்றிவரும் ஆசை தன்னிடையே அகன்று திரும்பிவராது அடியோடு போயவிடும்' என்கிறார். இதை இந்தியாவிற்குமட்டுமின்றி உலகத்திலிருக்கும் எல்லா மதத்தினருக்கும் பொதுவாக 'கண்ணன் காட்டிய வழி' என்று சொல்வது சிறிதும் மிகையாகாது. ஆசையைக் கொடியநோய் என்று அறிந்து கொண்டுவிட்டால் அதை அகற்றத் தக்க ஔஷதத்தைக் கண்ணன் ஒவ்வொரு ஜீவனுக்கும் கீதைமூலம் கொடுத்துவிட்டார். அடுத்தபடியாக அக்கொடிய விரோதியாகிய நோய் எப்படி உண்டாகி படிப்படியாக விருத்தியடைந்து ஒருவனைக் கெடுக்கிறது என்பதைத் தெளிவாக விளக்குகிறார்.

புன்பொருளை உள்ளும் புமானுக்கு
அதிற்சங்கம்
பின்பதனால் காமமதில்
பின்வெகுளி—என்பதனால்
மோகமதில் பொன்றும்
மிருதியதில் புத்திஅழி
வாகுமதில் தான்நசிக்கு மாங்கு.

(இ-ள்) புன்பொருளை உள்ளும் புமானுக்கு—(இந்திரியங்களுக்கு ஆகாரமாகிற சப்தாதி) அற்ப விஷயங்களைச் சிந்திக்கின்ற புருஷனுக்கு. அதில் சங்கம்—அவற்றில் பற்று (உண்டாகிறது) பின்பு அதனால் காமம்—பிறகு பற்றினால் ஆசை (உண்டாகிறது) பின் அதில் வெகுளி—பிறகு அதில் கோபம் (உண்டாகிறது) என்பதனால் மோகம்—கோபத்தில் அறிவின்மை (உண்டாகிறது). அதில் மிருதி பொன்றும்—அதனால் ஞாபகம் கெடும். அதில் புத்தி அழிவாகும்—அதனால் புத்தி நாசம் உண்டாகும். அதில் தான் நசிக்கும்—அதனால் தானே கெட்டழிவான்.

4
த்யாயதோ விஷயாந் பும்ஸ:
3
ஸங்கஸ்தேஷூப ஜாயதே
3
ஸங்காத் ஸஞ்ஜாயதே காம:
4 4
காமாத் க்ரோதோபி ஜாயதே
4 4
க்ரோதாத் பவதி ஸம்மோஹ:
4
ஸம்மோஹாத் ஸ்ம்ருதிவிப்ரம:
4 3 3 4
ஸ்ம்ருதி ப்ரம்சாத் புத்திநாச:
3 3 4
புத்திநாசாத் ப்ரணச்யதி.

(இ-ள்) விஷயாந்-(சப்தாதி, விஷயங்களை. த்யாயத:—சிந்திக்கின்ற பும்ஸ—புருஷனுக்கு தேஷு—அவற்றில, ஸங்க ஜாயதே—பற்று உண்டாகிறது ஸங்காத்—அப்பற்றினால், காம:—ஆசை ஸஞ்ஜாயதே—உண்டாகின்றது, காமாத—ஆசையினால் க்ரோத-கோபம் அபிஜாயதே உண்டாகிறது க்ரோதாத்-கோபத்தினால. ஸம்மோஹ — அவிவேகம். பவதி—உண்டாகிறது ஸம்மோஹாத்—அவிவேகத்தால ஸ்ம்ருதி விப்ரம—நினைவு நழுவுதல் (உண்டாகிறது ஸ்ம்ருதிப்ரம்சாத்—நினைவு நழுவுதலினால புத்திநாச:—புத்திக்கேடு (உண்டாகிறது). புத்திநாசாத்-புத்திநாசத்தால், ப்ரணச்யதி—எல்லாம் கெடுகிறான்.

ஜீவாத்மாக்களுக்குப் பந்தத்தைக் கொடுக்கும் ஆசையை அநேக விதமான கேடுகளைத் தோற்றுவிக்கும் 'வேர்' என்றும, 'வித்து' என்றும் உருவகம செய்து பல பெரியோர்கள் பேசி இருக்கின்றனர் கீதா சாஸ்திரத்தை வெளியிட்ட கமலக் கண்ணனே அவ்வாசையும பிறிதொன்றை ஆதாரமாகப்பற்றியே தோன்றியிருப்பதை நம் கவனத்திற்குக்கொண்டுவருகிறார் நினைவின்மை மோஹம், கோபம் முதலிய தீய குணங்களைக்கொண்டு ஆசையை வேராகவோ வித்தாகவோ சொல்லலாம். ஆனால் கர்ம யோகத்தை மேற்கொள்ளும யோகிகள் ஆத்ம ஸ்வரூபம் கிட்டுவதற்கு முன் ஆசையால கெடாதிருக்க அதன் வரலாற்றை மேலும ஆழ்ந்து அறிய வேண்டும் அவர்களுக்கு உபயோகமாகும்பொருட்டு கண்ணன் இவ்விரண்டு சுலோகங்களில் வேண்டிய விவரங்களோடு ஆசையின் முன்னோர்களையும் பின்னோர்களையும் பற்றிச் சுருக்கமாகத தெளிவாக வெளியிட்டிருப்பதை ஒவ்வொருவரும் தம் வாழ்க்கை அனுபவத்தைக்கொண்டே உணரலாம்

தகாத பொருளை அடிக்கடி நினைத்தால் அந்நினைவின் காரணமாக அப்பொருளில் பிரியமுண்டாகிறது பிரியத்தை வளரவிட்டால் அதைத் தான் பெறவேண்டும்' என்ற ஆசை உண்டாகிறது ஆசையினால் பெற முடியாவிட்டாலும் பெற்ற பின் இழக்க நேர்ந்தாலும், இழக்க வேண்டிவருமோ என்று தோன்றினாலும் கோபம் தோன்றுகிறது கோபத்தினால், தனக்குரியது எது? உரிமையற்றது எது? வேண்டியவர் யார்? வேண்டாதவர் யார்? நன்மை செய்வது எது? தீமை செய்வது எது? என்று தெளிவாய் அறிந்துகொள்ள மாட்டாத அவிவேகம் பிறக்கிறது. அதனால் மறதி ஏற்படுகிறது மறதியால் புத்தி கெடுகிறது புத்திக் கேட்டிலிருந்து எல்லாக் கேடுகளுக்கும் உறைவிடமான பந்தம் (பிறப்பாகிற கட்டு) அல்லது நரகம் ஜீவாத்மாவுக்கு உண்டாகிறது இதனால் பிராப்தமான அல்லது உரிய பொருளை விட்டுப் பிறவற்றை அடிக்கடி சிந்தித்தலே ஜீவாத்மாவின் கேட்டிற்கு மூல காரணமாயிருப்பது வெளியாகிறது ஒவ்வொருவரும் தியானம் அல்லது சிந்தனைக்கு அப்ராப்தமான தமக்கு உரிமையில்லாதவற்றை விஷயமாக்காமலிருந்தால் பேராசைக்கும் அதன் விளைவுகளான பெருங்கேட்டிற்கும் உலகிலே இடமில்லாமல் போகும். மஹாத்மா விரும்பியபடி திருப்தியும் சமாதானமும் சுபிக்ஷமும் கொண்ட ராம ராஜ்யம் தோன்றும். சரித்திரத்தில் நன்மை செய்தவர்கள் என்றும், தீமை செய்தவர்கள் என்றும் எத்தனையோ அரச பரம்பரைகளைப் படிக்கிறோம். ஆனால் ஜீவ வர்க்கத்திற்கே கேடு செய்து வருகின்ற ஆத்ம விரோதி பரம்பரையைப்பற்றிப் படிக்கிறோமா? ஆலோசனைக்குத் தான் கொண்டு வருகிறோமா? கண்ணன் கீதையில் வெளியிட்ட ஜீவாத்மா விரோதியின் வம்சாவளி அடியிற்கண்டபடி நன்றாக எழுதப்பட்டு ஒவ்வொருவர் வீட்டிலும் சுவரில் கண்காணத் தொங்கினால நம்மை நல் வழிப்படுத்தி ராம ராஜ்யத்திற்கு ஏற்ற பிரஜைகளாக ஏன் மாற்றாது?

விரோதி பரம்பரை:—விஷய சிந்தனை பிரியம் ஆசை, கோபம், அவிவேகம நினைவின்மை, புத்திக் கேடு, பெருங்கேடு.

சொப்பன வாழ்க்கை

ஆர்வி

15

குமார் வெளிப் பார்வைக்குச் சற்றும் கலங்காதவன் மாதிரிதான் இருந்தான. ஆனால் மனசுக்குள் வேதனை பிடுங்கித் தின்றது படக்காட்சியில் மனம் பதியவில்லை. கிடடத்தட்ட சீதா, சுசீ, சுவாமி மூவரும் அதே நிலையில்தான் இருந்தனர். என்ன சிறுபிள்ளைத்தனம் இது? இதன் விளைவு என்னவாகும்? சுவாமிக்கு இருப்புக்கொள்ளவில்லை. தவியாய்த் தவித்தான்.

“என்னடா இது? இப்படிச் செய்துவிட்டாயே?” என்று குமாரின் காதருகில் முணு முணுத்தபடி இருந்தான். எதைப் பொறுத்துக்கொண்டாலும் இந்த முணு முணுப்பைக் குமாரினால் பொறுக்கவே முடியவில்லை.

“உன் காலில் விழுகிறேன் சற்றுப் பேசாமல் இரேன்” என்று மிகவும் தயவாய் பரிதாபகரமான முகத்துடன் வேண்டிக்கொண்டான் அவன்.

இரண்டு நிமிஷங்கள் கழித்து மறுபடியும் சுவாமி, “மன்னி என்னைப்பற்றி என்ன நினைப்பாள்? நானும் இதில் சம்பந்தப்பட்டவன் என்றுதானே! என்னடா பேசமாட்டேன் என்கிறாயே” என்றான்.

“எனக்கு எல்லாம் தெரியுமடா, பேசாமல் இரு நான் பார்த்துக்கொள்கிறேன் அதற்கெல்லாம் ஒரு வழி வைத்திருக்கிறேன்!” என்றான் குமார்.

என்ன வழி இருக்கிறது என்பது ஆண்டவனுக்குத் தான் தெரியுமேதவிர அவனுக்குத் தெரியாது சுவாமியின் முணு முணுப்பை அடக்க வேண்டுமே! சுவாமி மீண்டும் ஏதோ சொல்ல வந்தான். குமார் அவனைப் பேசவிடாமல், “கதையில் என்ன ‘சஸ்பென்ஸ்’ ஏற்படுத்திக்கொண்டே போகிறான், பார்த்தாயா” என்றான்

தான் செய்த குற்றம், அதன் பயங்கரத்தன்மை அவனை உள்ளூற மிரட்டிக்கொண்டே இருந்தது. இதன் பலனை என்னவோ அவன் அனுபவித்தே ஆக வேண்டும். அதற்கு அவன் தயாராகவே இருந்தான் பரீக்ஷையில் வாத்தியாருக்குத் தெரியாமல் அடுத்த பையனுடைய பேப்பரைக் கேட்டு வாங்கி காப்பி அடிப்பதற்கும் இதற்கும அவன சம்பந்தப்பட்டவரையில் வித்தியாசம் தெரியவில்லை. பையன்களுக்குத் தோன்றக்கூடியதெல்லாம காப்பி அடிப்பதுகூட ஒரு குற்றத்தில் சேர்நததில்லை. அதைச் செய்யத் தெரியாமல் செய்து மாட்டிக்கொண்டுவிடடால்தான் அது குற்றம். அந்த உணர்ச்சிதான் குமாரை வாடடியது. சீதா உட்கார்ந்திருந்த பக்கமே திரும்ப அவனுக்கு அச்சமாய் இருந்தது. சுவாமிககோ மன்னியின் கண்ணெதிரே தான் ஏதோ அதல பாதாளத்தில் விழுந்து கொண்டிருப்பதாய்த் தோன்றிற்று.

கடிதம் அவள் கையில் போய்ச் சேர்ந்துவிட்டது என்பது அவர்களுக்குத் தெரியும் ஆனால் இடை வேளையில் அவர்கள் வெளியே சென்ற பின்னர் என்ன நடந்தது? இதை அவர்களால் கற்பனைகூடச் செய்ய முடியவில்லை. கலக்கத்துக்குக் காரணமெல்லாம் சீதா இடம் மாறி உடகார்ந்திருப்பது தான். எத்தகைய கடுந்தண்டனைக்கும் உட்படுவது தான் தான் செய்த குற்றத்துக்குப் பரிகாரம் என்று குமார் தனக்குள் சொல்லிக்கொண்டான். ஆனால் அத்தனை கொடுமையான தண்டனை என்னவோ தனக்குக் கிடைக்கும்படி எதுவும் நேராது என்ற குருட்டுத் தைரியமும் அவனுக்கு எப்படியோ இருந்தது. அவனுடைய மனசுக்குள்ளே, “தப்பு, தப்பு, தப்பு இனிசெத்தாலும் இந்தமாதிரித் தவறுசெய்யவே மாட்டேன்” என்று யாரோ கூவுவதுபோல அவன் உணர்ந்தான்.

முன் கதை

★

பங்களூரில் தொழிற்சாலைஒன்றில் மானேஜராக இருக்கிறான் விசுவநாதன். பானுமதி என்ற யுவதியிடம் அவன் கொண்டிருந்த நட்பைச் சந்தேகித்து அவன் மனைவி சுசீலா அவனிடம் சச்சரவிட்டுக் கொண்டு சென்னையிலிருக்கும் தன் சகோதரன் வீட்டுக்கு வருகிறாள். மறுநாளே விசுவத்தின் சகோதரன்சுவாமியும் லீவு நாட்களைச்சென்னையில் கழிக்க வந்து சேருகிறான். இந்த நாட்களில் விசுவம்—பானுமதியின் நட்பு புதிய கட்டத்தை நெருங்குகிறது. சுசீலா வந்தது அவள் சகோதரன் மனைவிக்குப் பிடிக்கவில்லை. அதே சமயத்தில் சுசீலாவுக்கு எதிர் வீட்டிலிருக்கும் சீதா என்ற பெண்ணின் சினேகம் ஏற்படுகிறது. குமார், சுசீலா, சீதா மூவரும் ஒரு நாள் சினிமாக் காட்சிக்குச் செல்லுகிறார்கள். குமார். சீதாவிடம் யாருக்கும் தெரியாமல் ஒரு துண்டுக் கடிதத்தைக் கொடுக்கிறான். சீதா வேறு இடத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு விடுகிறாள். குமாரும், சுவாமியும், இதனால் மன அமைதி குலைந்து உட்கார்ந்திருக்கின்றனர்.

சினிமாவுக்கு வருமுன் எவ்வளவோ திட்டங்கள் போட்டு வைத்திருந்தான். அவ்வளவும் பொடிப் பொடியாகச் சிதறிப்போய்விட்டன. சீதா கையெடுத்து எதையோ கொடுப்பதுபோலவும் சுசீ கையை மறைவாக நீட்டி அதை வாங்கிக் கொள்வது போலவும் ஒருபிரமை அவன் கண்களுக்குத் தோன்றியது. கிறு கிறுவென்று அவனுக்குத் தலை சுற்ற வாரம்பித்தது. சீதா, சுசீ, சுவாமி, கொட்டகை ஏன் உலகமே சுற்றுவதுபோல இருந்தது. கண்களை இறுக மூடிக் கொண்டு சாய்ந்து விட்டான். கொட்டகையே சிரித்தது தன் நிலையைக் கண்டு. உலகமே சிரிப்பதுபோல இருந்தது அவனுக்கு. படம் முடியும் வரையில் அவன் உயிர் கூண்டில் இல்லை.

சுசீலா வெகு சாமத்தியமாக நடந்துகொண்டாள். சீதாவை மிகுந்த அன்புடன் அணைத்துக்கொண்டே கதையின் சுவாரஸ்யமான பகுதிகளைப் பற்றிப் பேசினாள். அவர்கள் வெளியில் பேசிக்கொண்டு வரும்போது சுவாமியிடம் மாட்டிககொள்ளாமல் தப்பிக்க குமார் ஹேமாவைத் தூக்கிகொண்டு பஸ் ஸ்டாண்டுக்கு முன்னதாக விரைந்தான். சுசீலா இதை ஒருவாறு புரிந்துகொண்டாள். சீதாவின் வாயினால் அவள் எதையும் கேட்க விரும்பவேயில்லை. என்றென்றும் இந்த ஒருவிஷயம் அவள் காதுகளுக்கு எட்டி மனசை நோகச்செய்துவிடாமல் இருககவேண்டுமே என்று அவள் கவலைபபட்டாள். படத்தில் இருந்த கதாநாயகனுக்கும் விசுவத்துக்கும் இருந்த உருத்தெரியாத ஒற்றுமையைப்போல விசுவத்துக்கும் ஆண் வர்க்கத்துக்குமே ஒரு சமமான ஒற்றுமை இருப்பதைக் கண்டாள். குமார் அந்த ஆண்வர்க்கத்தில் ஒருவன்தானே! கடைசீ வரையில் சீதா நடந்ததைப்பற்றி ஒருவார்த்தைகூடப் பேசவில்லை. இதுவே சுசீலாவுககு அவளிடம் பல மடங்கு அன்பை அதிகரிக்கச் செய்தது.

"உலகமே இப்படித்தான். அறியாமையினால் இன்னும் அது சிறு பிள்ளையாகத்தான் இருக்கிறது. என்றும் அது தன் சிறுபிள்ளைத்தனத்தை விடப்போவதில்லை. இதற்கெல்லாம் என்ன செய்வது?" என்று கதையைப்பற்றிப் பேசுவதுபோலச் சொன்னாள் சுசீலா. சீதா இதைப் பலமாக ஆமோதிப்பவள் போல வெறுமே தலையை வேகமாக ஆட்டிவைத்தாள்.

சீதாவின் வீட்டின்வாசலை நெருங்கியதும், "சீதா!" என்று அருகில் நெருங்கிக் கையைப் பிடித்துக் கொண்டு சுசீலா என்னவோ சொல்ல வந்தாள். 'எது நடந்திருந்தாலும் அதை இந்த க்ஷணமே என் நிமித்தம் மறந்துவிடு என்றுதான் அவள் சொல்ல நினைத்தாள்.

சீதா பேசும் கண்களுடன், "எனக்கு எல்லாம் தெரியும். காலையில் வரும்போதுகூட நீ நன்றாய்த் தூங்கிக் கொண்டிருக்க வேண்டும். தெரியுமா?" என்று சொல்லி, அவள் கையை வெடுக்கென்று பிடித்துக் கிள்ளிவிட்டு வீட்டுக்குள்ளே ஓடி மறைந்தாள். குமார் தன் வீட்டு வாசற்படியில் நின்றுகொண்டே நடுவாசலில் மெதுவாகப் பேசிக்கொண்டு நின்ற இந்த இரு பெண்களையும் கவலையுடன் பார்த்தான். இந்த நிமிஷத்துக்குள் சீதா நடந்ததை இவளிடம் சொல்லியிருக்க முடியுமோ என்ற கவலையில் உலகமே ஒரு வினாடி கிடுகிடுவென ஆடியதுபோல இருந்தது. சுவாமி மெதுவாகப் பின்னால் தெருக் கோடியில் ஹேமுவை நடத்தி அழைத்துக் கொண்டு வந்துகொண்டிருந்தான்.

கிருஷ்ணனும் விமலாவும் கொட்டுக் கொட்டு என்று அவர்கள் வரும்வரையில் உட்கார்ந்துகொண்டிருப்பதைக குமாரும் சுசீலாவும் கண்டனர். அவர்கள் முகத்தில் தென்பட்ட வெடுவெடுப்பை அளந்தறிய முடியவில்லை. சுசீலா இதைக் கவனியாதவள்போல, "இன்னும் சாப்பாடு ஆகவில்லையா?" என்றாள். ஒரு சமயம் பசியினால் இப்படி இருக்கிறார்களோ என்று அவள் நினைத்தாள்.

"இல்லை—" என்ற பதில் வந்தது.

ஹேமாவுக்குத் தூக்கக் கலக்கத்தினுல் அழுகை வந்தது. வாசற் படியை மிதித்ததுமே அந்த அழுகை வாயை விட்டுக கிளம்பிற்று. ஆவேசம் வந்தவள் போல விமலா வெளியே பாய்ந்து சுவாமியிடமிருந்து ஹேமாவைத் தடதடவென்று இழுத்து வந்து. "உனக்கெங்கே சினிமா வேண்டிக் கிடந்தது? தூங்கித் தொலைத்துவிட்டுப் போகாமல் ஏன் போனுய்?" என்று ஆத்திரத்துடன் அவள் முதுகில் இரண்டு அடிகள் வைத்தாள்.

சுசீலா இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. திக்பிரமையடைந்து நின்றுள். குழந்தை பலமாக அழ ஆரம்பித்துவிட்டது. கிருஷ்ணன் 'இது போதாது' என்ற ரீதியில் இந்தக் காட்சியை பார்த்துக்கொண்டிருந்தான். குமார் அங்கே நிற்காமல் கைகால் சுத்தம் செய்துகொள்ள கொல்லைப்பக்கம் விடுவிடெனச் சென்றுன். நடையிலேயே சுவாமியும் சுசீலாவும் நின்று கொண்டிருந்தனர். சுசீலாவுக்கு ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது.

"குழந்தையைப் போட்டு ஏன் வீணுக அடிக்கிருய், மன்னி!" என்றுள் வேகமாக.

"பின்னே யாரைப் போய் அடிப்பது? இதற்கென்ன சினிமாவேண்டிக் கிடக்கிறது என்கிறேன்!"

"உனக்கு நாங்கள் போனது பிடிக்காவிட்டால், பாவம், குழந்தை என்ன செய்யும்? எல்லாரும் போனேம. அதுவும் வந்தது. அதற்கென்ன தெரியும என்று அதை அடிக்கிருய்?

விமலா மேலும் அங்கே நிற்காமல், "யாருக்குத்தான என்ன தெரிகிறது!" என்று சொல்லிக்கொண்டே அவ்விடத்தைவிட்டுச் சென்றுள் இந்த வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு கிருஷ்ணன் மாறுதலின்றி அப்படியே உட்கார்ந்து கொண்டிருந்தான். இது சுசீலாவின் ஆத்திரத்தை மேலும் தூண்டிவிட்டது.

"நாங்கள் போகும்போது இவள்தான் வீட்டிலிருந்தாளே, அழைத்துக்கொண்டு போகவேண்டாம் என்று சொல்வதற்கென்ன? காதில் விழுகிறதா?" என்றுள் அவனிடம்.

கிருஷ்ணன் சுருக்கமாக, "நீங்கள் செய்வது ஒன்றும் நன்ருயில்லை!" என்றுன். பொதுப் படையில் யார் வேண்டுமானுலும் தனக்கு என்று எடுத்துக் கொள்ளட்டுமே!

சுசீலா சற்று நேரம் இந்த அடியைத் தாங்கமாட்டாது திகைத்து நின்றுள். ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவன்போல ஒன்றும் சொல்லாமல் கொள்ளாமல் மாடியிலுள்ள தன் அறைக்குச் சென்றுள் புது ஆடைகளைக் களைந்தெறிந்து வேறு மாற்றிக் கொள்ளும்போது, "எனக்குத் தெரியுமே—இந்தச் சனியன பிடித்த புடைவை ஏதாவது ஒரு சண்டையைக் கிளப்பிவிடும் என்று கூறிக்கொண்டாள். மனசில் இருந்தவேகம் தணிய பரபரப்பாக படுக்கையைத் தட்டிப்போட்டாள். போர்வையில் தூசு படிந்து கிடந்ததென்று எண்ணிக்கொண்டு உதறு உதறு என்று சொடுக்கி உதறினுள். பசி வயிற்றைக் கிள்ளியது 'பசித்தால் உனக்குப் பசிக்க வேண்டியதுதான் நான் என்னவோ சாப்பிடவே போகிறதில்லை' என்று எண்ணிக்கொண்டே மேலும் கீழுமாக நடந்து கொண்டிருந்தாள்.

திடீரென்று மேற்குப் பக்கத்து ஜன்னலுக்கு வெளியே வெளிச்சம தெரிந்தது. ஜன்னல் கதவுகளை நன்ருகத் திறந்துவிட்டு அவள் கீழே இருந்து வந்த வெளிச்சத்தை உற்றுக் கவனிககலானுள். வெறும் நிழல்கள்தான் தெரிந்தன. அங்கே நிற்பவர்களின் உருவம் சரியாகத் தெரியவில்லை. படபட்டென்று துணி துவைக்கும் சப்தம் கேட்டது. அந்த மன நிலையிலும் சுசீலாவுக்கு இதைப் பார்த்ததும சிரிப்புத்தான் வந்தது 'பகலென்ருல் அக்கம் பக்கத்தில் அக்கப் போராகிவிடுகிறது என்று கிழவன் நேரத்தை மாற்றிக்கொண்டுவிட்டார் போலிருக்கிறது' என்று எண்ணிக்கொண்டாள். 'இவ்வளவு பெரிய வீடு; பணம் இருக்கிறது என்று மூன்ருந்தாரம்; ஒரு வேலைக்காரிகூடவா இல்லாமல் போய்விடுவாள் இந்தக் காரியத்தைச் செய்ய' என்ற கேள்விகள் அவள் மனத்தில் எழுந்தன. அடுத்த கணமே, 'கிழவன் இருக்கும் போது தண்டத்துக்கு வேலைக்காரி எதற்கு என்று எண்ணுகிருளோ என்னவோ மகராஜி! காசு செலவழிப்பதில் விமலாவுக்குத் தங்கையோ அக்காவோ யார் கண்டது?' என்று



பதில் கூறிக்கொண்டாள். அவராவது கொஞ்சம் வயதானவர். மனைவியிடம் கொஞ்சம் பயப்படாமல் இருக்க முடியவில்லை. கிருஷ்ணன் என்ன, எதில் சேர்ந்தவன்? கணவன் கல்போல உட்கார்ந்திருக்க, ஒரு மனைவி குழந்தையை அடிப்பதும் அட்டஹாஸமாய்ப் பேசுவதும் இந்த அடுத்த வீட்டுக் காட்சிக்கு எந்த விதத்தில் குறைந்தது? படத்தில் தோன்றிய கதாநாயகன் விசுவம், குமார் இவர்கள் எங்கே? இந்த அடுத்த வீட்டுக் கிழவர், கிருஷ்ணனை இவர்கள் எங்கே?......

யாரோ வருகிற சத்தம் கேட்டு, சுசி வேகமாகத் திரும்பிப் பார்த்தாள். "அண்ணா உன்னைச் சாப்பிடக் கூப்பிடுகிறாள்!" என்றான் குமார் ஜன்னலைப் பார்த்துவிட்டு. சுசீ அதை மூடிக்கொண்டிருந்தாள் அதன் பிறகு அவள் படுக்கையில் உட்கார்ந்துகொண்டு சுருக்கமாக, "எனக்குச் சாப்பாடு வேண்டாம்" என்றாள்.

"சாப்பிடாமல்? இது என்ன பேச்சு சுசீ! அவள் கிடக்கிறாள், நீ எழுந்திரு அவள் செய்வதெல்லாம் அவனுக்குச் சரியென்று படுகிறதே அதைச் சொல்லு' என்றான் குமார்.

"யார் எதைச் செய்தாலும் சரிதான். எனக்குப் பசியிருந்தால்தானே நான் சாப்பிட வருவேன். சுவாமியைச் சாப்பிடச் சொல். என் பசி எப்போதோ போய்விட்டது" என்று கூறினாள் சுசீலா.

குமாருக்கு வற்புறுத்த இடமில்லை. அவன் வருத்தத்துடன் கீழே சென்றதைக் கவனித்தாள் சுசீலா. "ஏதோ தெரியாத்தனம் இருக்கலாம். ஆனால் இவனுடைய மனசு எங்கே, மற்றவர்கள் மனசு எங்கே?" என்று எண்ணினாள் அவள்.

கிருஷ்ணனே தன்னை அழைத்துப் போக வருவான் என்றும் அதற்குள் தூங்கிட வேண்டும் என்றும் கண்களை மூடிக்கொண்டாள் மாடிப்படியில் காலடியோசை கேட்டது அவள் மறுபுறம் முகத்தைத் திருப்பிக்கொண்டு படுத்தாள் கிருஷ்ணனாகத் தான் இருக்கும்? காலடியோசை மெல்ல அவளருகில் நெருங்கிவந்தது பேச்சுக் குரல் கிளம்பவில்லை நிசப்தம்.. சுசீலாவின் இருதயம் படபடத்தது. யார் அவளைத் தீண்டுகிறது?

சுசீலா திடுக்கிட்டு எழுந்து எதிரில் இருந்த சீதாவைக் கண்டதும். "நன்றாய் பயமுறுத்தினாயடி! எங்கே வந்தாய்? என்ன இது கையில்?" என்றாள்

"நான் வாசலில் வந்து பார்த்துக்கொண்டுதான் இருந்தேன். இதைச் சாப்பிடு...சூடாக இருக்கிறது-இட்டிலி!" என்று குழைவாகச் சொன்னாள் சீதா.

கிருஷ்ணன் மேலே வந்தபொழுது சுசீலா படுக்கையில் சாய்ந்தவாறு ஆழ்ந்த யோசனையில் இருந்தாள். அவள் வந்து ஒரு மாதம்போல ஆகிவிட்டது. இன்னும் எத்தனை நாள்! மறுநாளே கிளம்பிவிடுவான் என்று கூறிய சுவாமி கிளம்பவேயில்லை ஏன்? விமலாவின் துஷ்பிரசாரம் காதில் விழ ஆரம்பித்துவிட்டது. இதன் முடிவு என்ன? யோசனைக்கு விஷயம் இவைதான். கிருஷ்ணன் அவள் எதிரில் கிடந்த நாற்காலியில் உட்கார்ந்து, "இது என்னவோ நீ செய்வது உனக்கே நன்றாய் இருந்தால் சரிதான்" என்றான்

சுசீலா பதில் ஒன்றும் சொல்லவில்லை; முகத்தைத் திருப்பவுமில்லை.

"பெங்களூருக்குக் கடிதம் எழுதியிருந்தேன். பதில் ஒன்றும் வரக்காணோம் நீ இங்கே வேதனைப் படுகிறாய். இதனால்தான் நான் உன்னிடம் பேச வருவதில்லை. இதுமட்டும் நிச்சயம் நீயாகச் சம்பாதித்துக்கொள்வது இதெல்லாம் என்கிறேன்! இல்லாவிட்டால் என்ன?......" கிருஷ்ணன் பேசிக்கொண்டே போனான்.

"எனக்குத் தூக்கம் வருகிறது" என்றாள் சுசீலா.

"சாப்பிடவில்லை?"

"வேண்டாம்!"

"உன் பிடிவாதத்தினாலேயே நீ கெட்டுப் போகிறாய்!" சுசீலா படுக்கையிலிருந்து விருட்டென எழுந்து, "இது எனக்குத் தெரியும். உன்னைக் கேட்கவில்லை" என்றாள்.

"என் கண்ணெதிரே இதெல்லாம் நடக்கும்போது என்னைக் கேட்காவிட்டாலும் நான் சொல்லத்தானே வேண்டியிருக்கிறது!"

"என்ன இங்கே நடக்கிறது என்கிறாய் நீ!"

"உன் மனசுக்கே தெரியும். நான் சொல்லவேண்டியதில்லை"

சுசீலா இந்த உபத்திரவத்தின் வேதனையைத் தாங்க முடியாதவளாய்ப் படுக்கையில் மீண்டும் சாய்ந்துகொண்டாள் இரண்டு நிமிஷங்கள் பொறுத்து அவள் துடியாக எழுந்து தன் பெட்டியைத் திறந்து நூறுரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து, "இந்தா எங்களுக்காக ஏற்பட்ட செலவுக்கு இதை வைத்துக்கொள். நான் நாளை இரவு வண்டியில் ஊருக்குப்போகிறேன்" என்றாள்.

கிருஷ்ணன் கையை நீட்டி வாங்கிக்கொள்ளாததால் அதைக் கீழே அவன் எதிரில் எறிந்துவிட்டுப் படுக்கையில் படுத்துக்கொண்டாள். 'எங்களுக்கு' என்று சொன்னாள்? சுவாமியையும் சேர்த்துச் சொல்வானேன்? சுசீலாவுக்குத் தன் தவறு தெரிந்தது ஆகவே இதைப் பிரித்து வேறுபடுத்தி கூறுவதற்காக அவன் பக்கம் திரும்பி, "உன் எண்ணமும் உன் பெண்டாட்டியின் எண்ணமும் எனக்குத் தெரியும். உன் வீட்டைத்தேடி என்னமோ வந்துவிட்டேன். மரியாதையாக நாளைக்கே என்னை ஊருக்கு அனுப்பி விடு. நீ அனுப்பிவிடுவது என்ன? நானே போய்க்கொள்கிறேன். எப்படி வந்தேனோ அதைப்போல எனக்குப் போகவா தெரியாது?" என்றாள்

கிருஷ்ணனுடைய சந்தேகங்கள் என்னவோ இதனால் கொஞ்சமும் தீரவில்லை. இவள் கோபத்தில் இப்படிச் சொல்லுகிறாளோ என்னவோ! கோபம் வருவானேன். குற்றமுள்ள நெஞ்சு! இதற்கெல்லாம் அவன் பின் வாங்கிவிடுவதா என்ன?

"பெங்களூருக்கா போகப்போகிறாய்?"

பதில் வரவில்லை.

"சுவாமியும் வரப் போகிறானா?"

இதற்கும் மௌனம்.

"பேசாமல் மௌனம் சாதித்துவிட்டால் எனக்கு ஒன்றும் தெரியாமல் போய்விடாது."

சுசீலா வெகுண்டெழுந்தாள்.

"தெரியட்டுமே........நான் அதற்கெல்லாம் கவலைப்படவில்லை. நீ மனசில் என்ன நினைத்துக் கொண்டு இவ்விதமெல்லாம் பேசுகிறாய் என்பது எனக்குத் தெரியும் நான் அதற்கும் கவலைப்படவில்லை. எங்கே போக எனக்கு விருப்பமோ நான் அங்கே போவேன். யார் என்கூட வர விரும்புகிறார்களோ அவர்களை அழைத்துக்கொண்டு செல்வேன். நீ என்ன என்னைக் கேட்கிறது? நீயா என் வாழ்க்கை முழுவதும் காப்பாற்றப் போகிறாய்! ஒரு மாதம் இருப்பதற்குள் நீயும் உன் பெண்டாட்டியும் படுகிறபாடுதான் எனக்குத் தெரிகிறதே-இதோ மறுபடியும் சொல்கிறேன். இன்னும் வேண்டுமானாலும் ஐம்பது ரூபாய் கொடுத்து விடுகிறேன். உன்

கஷ்டம் இதுதானே! உன்னோடு ஒரு வார்த்தை கூட இனிப்பேச எனக்கு விருப்பமில்லை; சக்தியுமில்லை. போ!" என்றாள். அவளுக்கு இதைச் சொல்லி முடித்த பிறகுதான் ஆயாசம் அத்தனையும் திரண்டுவந்து அமுக்கியதுபோலிருந்தது. மூச்சுத் திணறிக்கொண்டே படுத்துக்கொண்டாள். கிருஷ்ணன் வாயடைத்துப் போய் செய்வது புரியாமல் உட்கார்ந்திருந்ததைக் கண்டதும். 'நீ போகிறாயா நான் போகட்டுமா? சீதா வீடு எங்கே போயிற்று?' என்றாள்.

கிருஷ்ணனுக்கு வேறு வழியில்லை. எழுந்திருந்து அப்பால் சென்றான். அவளிடம் மரியாதைக் குறைவாக நடந்துகொண்டுவிட்டதுபோல் அவனுக்குத் தோன்றியது. நாளைக்கு அவள் கணவன் முகத்தில் விழிக்கவேண்டியிருந்தால்? அதுகூட இருககட்டும். அப்பா காதில் விழுந்தால்? கிருஷ்ணன் திணறிப் போனான். மனைவியின் பேச்சைக்கேட்டு எதையோ கேட்கத் துணிந்து வந்த தைரியமெல்லாம் பறந்து போய்விட்டது. நெஞ்சில் உரமில்லாத நடையுடன் கீழே சென்றான். மன்னிப்புக் கேட்கக்கூட அவள் விடவில்லையே! 'இதையெல்லாம நீ வித்தியாசமாய் எண்ணிக்கொள்ளாதே. நான் கேட்க வந்தது தவறுதான்' என்று ஒருவார்த்தை சொல்லியிருந்தால் அவனுக்கு மனசு சமாதானமாய் இருந்திருக்கும்! ஆனால் கேவலமானது என்னவென்றால் அந்த நூறு ரூபாய் நோட்டையாவது எடுக்காமல் போயிருக்கக்கூடாதா? கை எடுத்துக்கொண்டது; நிலைமை எடுத்துக்கொள்ளச் சொல்லி விட்டது!

"அவள் கோபம் நமக்கு லாபம்! போறேளே பேசாமல். ரூபாய் கொடுத்து விட்டதால் அவளுக்கு ஒன்றும் குடி முழுகிப் போய்விடாது. இங்கே கொண்டு வாருங்கள் அதை என்னிடம்!" என்றாள் விமலா.

கிருஷ்ணனுக்கு என்னவோ அது வேதனையாகத்தான் இருந்தது. மறுநாள் அதிகாலையிலேயே எழுந்திருந்து அவன ஆபீசுக்குப் போய்விட்டான். விமலாவோ இதொன்றும் அறியாதவள்போலவே நடந்துகொண்டாள். வீட்டிலே தன்னைத் தவிர மற்றவர்கள் மேல் மாடிக்கும் கீழுக்குமாக அலைந்து சுறுசுறுப்பாக இருப்பதைக் கண்டாள். சுசீலாவின சாமான்களை எடுத்துவைத்துக் கட்டுவதில் சீதா முனைந்திருந்தாள். சுவாமி அவளுடைய தந்தைக்கு விடியற்காலையில் ஸ்டேஷனில் காத்திருந்து அழைத்துப் போகும்படி தந்தி ஒன்று கொடுத்துவிட்டு வந்தான். குமார் அவள் முன்னிலையில் சீதாவின் முகத்தில் விழிக்கவும் மாட்டாமல ஆபீசுக்குச் செல்ல மனமில்லாமல் தவித்துக்கொண்டிருந்தான்.

நிலைமை தன் போக்கில் அபிவிருத்தியடைந்து வந்தது. சுசீலா எல்லாவற்றையும் மறந்து அவனுடைய சிறந்த அன்பையும் ஆசாபாசத்தையும் கண்டு மனசுக்குள் மகிழ்ந்தாள். சீதா நடந்துகொண்ட விதமோ ஆச்சரியம் தரத்தக்கதாய் இருந்தது. கலகலவென்று பம்பரம்போல் சுழன்று வந்தாள். கடிதம் ஒன்று கிடைத்ததாகவும் அது தனக்குப் பிடிக்கவில்லை என்பதால் அவனை வெறுப்பதாகவும் இல்லாமல் எல்லாவற்றையும் மறந்துவிட்டவள்போலவும் இன்னும், ஒன்றுமே நடந்துவிடவில்லை என்பது போலவும் அவள் நடந்துகொண்டாள். சுசீலாவின் மதிப்பில் இதனால் அவள் ஒரு படி அதிக ஆதரவைப் பெற்றுவிட்டாள்.

"சுசி மன்னி-உன் தம்பியை இந்த ஹோல்டாலை இழுத்துக் கட்டச்சொல்லேன். எனக்குக் கையெல்லாம் வலிக்கிறது" என்றாள் சீதா. குமார் வாசற்படியருகில்தான் அப்போது நின்றுகொண்டிருந்தான.

"காதில் விழுந்ததா, அப்பா! இந்த ஹோல்டாலை இழுத்துக் கட்ட வேண்டுமாம்!" என்று தர்ஜமா செய்தாள் சுசீலா.

இந்தச் சம்பாஷணையில் ஹாஸ்யமோ சமாதானமோ ஒன்றுமில்லை. ஆனால் இதனால் ஒரு சௌஜன்ய நிலை ஏற்பட்டுவிட்டது. மனத் திருப்தியும் அதனால் குதூகலமும் ஏற்பட்டுவிட்டது.

"ஹோல்டாலுக்குள்ளே என்ன இப்படி நீட்டிக்கொண்டிருக்கிறது?" என்றான் குமார்.

"புஸ்தகம்போலிருக்கிறது" என்றாள் சீதா.

நேருக்கு நேராகப் பேசவில்லை என்று பெயர் இந்த லட்சணத்துக்கு. சுசீலா உணர்ச்சி வசப்பட்டாள். பாம்பின் காலைப் பாம்பு அறியும என்பது போலப் பெண்ணின் சூட்சும இயல்பை அவள் அறிந்திருந்தாள். சீதா, குமாரிடம் பேசுகிற இந்தத் தன்மைக்கு வித்தியாசமான அர்த்தம் ஒன்றுமில்லை. ஒருவனை வீணே மனத் துன்பப்படச் செய்வதை சீதா விரும்பவில்லை. ஏதோ அவனிடம் ஆதரவாகப் பேசி அவன் மனசு ஆறுதலடையச் செய்வதே அவள் நோக்கம். ஆனால் சீதாவின் பழக்கத்தில் என்னவோ சுசீலாவுக்குப் பிடிபடாத மாறுதல் ஒன்று இருக்கத்தான் இருந்தது. அது என்ன?...

அவளுக்கு ஒரு சமயம் புரிகிறமாதிரி இருந்தது மற்றொரு சமயம் புரியாமலும் இருந்தது. சுவாமி வந்துவிட்டால் சீதாவின் நடையே மாறிப் பின்னுகிறது. உடம்பிலே நாகத்தைப்போன்ற நெளிவு உண்டாகிறது பேசும்போது நாணத்தின் செம்மையெல்லாம் முகத்தில் படர்ந்துவிடுகிறது; பேச்சைக் கேட்கும்போது ஒரு பூரிப்பு ஏற்படுகிறது! இந்த லட்சணங்களெல்லாம் ஒரு கன்னிப் பெண்ணுக்கு ஏற்பட்டால் அதைத்தான் காதல் என்று சொல்வதா?.. நிச்சயம் சொல்லமுடியவில்லை. சுவாமி வந்தால் அவள் ஓடிவிடுகிறாள். அவன் இல்லாமலிருந்தால் அவளுக்கு இருப்பே கொள்ளுவதில்லை. இதெல்லாம் எதில் சேர்ந்தது?

அதுதான் புரியாத புதிர். சுசீலாவுக்கோ சீதாவுக்கோ இதை விடுவிக்க முடியவில்லை. தன் மனத்தில் சுரந்து நிற்கும் இந்த உணர்ச்சிகளுக்கு என்ன பெயர் என்பது அந்தச் சீதாவுக்கு உண்மையில் சிறிதும் தெரியாது.

"அவரைக் காணோமே அவரைக் காணோமே! தந்தி கொடுக்கவா இத்தனை நாழி?" என்று சுவாமி வருவதற்குள் எத்தனை முறை கேட்டுவிட்டாள்.



இந்தியா வந்திருந்த் எகிப்திய பத்திரிகாசிரியர்கள் பிரதிநிதி கோஷ்டி இம்மாதம் 6-ந் தேதி ராஜ்காட் சென்று காந்திஜி சமாதி மீது மலர்களையும், மாலைகளையும் வைத்து வணக்கம் செய்தது.'

"அந்தப் புஸ்தகம் சுவாமியுடையது அதை ஏன் என் ஹோல்டாலுகசுள் வைத்தாய், சீதா?" என்றாள் சுசீலா.

"அவருடையதா? தெரியவே தெரியாதே...சரி அப்படியானால் அதை எடுத்துவிடவேண்டுமே!" என்றாள் சீதா.

குமார் புத்தகத்தை வெளியில் எடுத்துப் போட்டதும், "இன்னும் ஏதாவது இநக்கிறதோ என்னமோ அவர் வகது விடடடுமே" என்றாள்.

"ஏன், நான் இல்லையா பார்த்துச்சொல்ல?" என்று மடக்கினாள் சுசீலா.

"நீதான் சொல்லேன் நாங்கள் என்ன கண்டோம்? உன் ஹோல்டாலுக்குள் பைஜாமா இருந்தால்கூட எனக்குத் தெரியாது. சொன்னால்தானே தெரியும். இப்பவே பாாத்துவிடு!" என்றாள் சீதா.

"ஏண்டி நீ வரப்போகிறேன் என்றாயே!" என்று கேட்டாள் சுசீலா.

"நான் வரத்தான் போகிறேன். ஆனால் இன்று இல்லை. இரண்டு நாள் கழித்து வருகிறானே இல்லையா, பாரேன்!"

"நானும் இதே வண்டியில் கிளம்புகிறேன், மன்னி" என்று சுவாமி கூறிக்கொண்டே உள்ளே வந்தான். ஒருவரும் இதற்குப் பதில் சொல்லவில்லை.

அன்றிரவு வண்டியில் ஏறி உட்கார்ந்ததும் சீதாவுக்கு அழுகையே வந்துவிட்டது.

"என்னை மறந்துவிடுவீர்களா?" என்று கேட்டாள். அந்தப் பன்மையில் அவர்கள் இருவரையும் நினைத்துக்கொண்டுதான் கேட்டாள் என்பது சுசீலாவுக்கு நன்கு தெரியும். இத்தனை அன்புகூட சொந்தம் என்று சொல்லிக்கொள்ளுகிற தன் மன்னிக்கு இல்லையே என்று அவளுக்கு வருத்தமாய் இருந்தது.

ஊருக்குத் தானும் புறப்படவேண்டும் என்று அழுது ஆகாத்தியம செய்துகொண்டிருந்த ஹேமாவுககு அப்பொழுது உள்ளே அடி விழுந்து கொண்டிருந்தது. அவள் காதில் விழுந்தது.

"பளீர்—. பளீர்—"

"அப்பா டிரைவர்—வண்டியை விடு" என்றாள். அவள் முன் பக்கத்து ஸீட்டில் சுவாமியும் பின்னால் குமாரும் சுசீலாவும் உட்கார்ந்திருந்தனர். டாக்ஸி ஸ்டேஷனை நோக்கி விரைநதது.

(தொடரும்)



சென்ற வாரம் சென்னை வந்திருந்த ராய்ட்டர் நல்லெண்ண தூதுக்கோஷ்டிக்கு 'ஜெமினி' ஸ்டுடியோவில் ஸ்ரீ எஸ். எஸ். வாஸன் ஓர் உபசாரம் நடத்தினர். படத்தில் கோஷ்டித் தலைவர் லேடன் பிரபுவும், ஸ்ரீ எஸ். எஸ். வாஸனும் ஸ்டுடியோவுக்குள் வரும்போது எடுத்த படம்.

ஜெமினி ஸ்டுடியோவில் 'மித்திரன்' ஆசிரியர் ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீனிவாஸனும், ஸ்ரீ எஸ். எஸ். வாஸனும் தூதுக்கோஷ்டியைச்சேர்ந்த மற்றுமிருவரும் சேர்ந்து நிற்கையில் எடுத்த படம்.



நிலைக் கண்ணாடி

விந்தியா

என்னுடைய கை மணிக்கட்டிற்கு ஜன்னற் கண்ணாடித் துகள்களால் காயம் ஏற்பட்டு நான் சில வாரங்கள் துன்பப்பட நேர்ந்தபோது, "ஆஹா! இதே கண்ணாடி வேறுவித நிலைகளில் வேறுவித உருவங்களில் —உருவங்காட்டும் கண்ணாடியாகவும், அழகிய பண்டம் பாத்திரங்களாகவும் எப்படி மனங் கவருகிறது! உபயோகப்படுகிறது?... இப்போது இது செய்யும் துன்பம் எத்தகையது?" என்று குட்டி யோசனை செய்தேன் ஒரு நாள்.

ஆனால், இந்த அனுபவத்திற்கு அப்புறம் எனக்கு வேறொரு அனுபவம் ஏற்பட்டபோது... என்னவென்பேன் என் மன நிலையை?

முகம்பார்க்கும் கண்ணாடி...அல்ல முழு உருவங் காட்டும் அழகிய நிலைக் கண்ணாடி. என் சிநேகிதி ஜானுவின் வாழ்க்கையைப் புரட்டிப் புண்படுத்தி அவளைத் துன்பத்திற்குள்ளாக்கிய வரலாறு அறிந்தபோது என் மனங்கொண்ட வேதனையை எப்படி விவரிப்பேன்?

ஒன்றல்ல, இரண்டல்ல ஆறு வருடங்கள் நடத்திய மண வாழ்க்கைக்குப்பின், நான், என் கணவருடன் என் தாய்நாடான தமிழ்நாடு வந்தேன். திருமணத்திற்குப் பின்னர் முதன் முதலாகப் பிறந்தகம் வந்திருந்தேன்.

"மறுபடியும் சந்திப்போமா?" என்று யாரைப்பற்றி நான் எண்ணற்ற தடவைகள் எண்ணியிருந்தேனோ, அவள் ஜானு, நான் அங்கு வந்த சமயத்திலேயே அவளும் தன் பிறந்தகம் வந்திருப்பாள் என்று நான் நினைக்கவேயில்லை. கணவருடன் எங்கு இருக்கிறாள், எப்படி இருக்கிறாள் என்று ஒரு தகவலும் அவளைப்பற்றி அறிந்திருக்கவில்லை, நான்

"அவளும் இருக்கிறாள் இந்த ஊரில்!"

ஓடோடிப் போனேன், அவளைக் காண்பதற்கு அவளும் என்னைப் போன்றவள்

அடங்கிப் போகாத ஆவலுடன், குரலில் பூரிப்பு எழ, "ஜானு!" எனக் கூவிவிட்டேன்

"சுசியா!...வா!" என்றாள் ஜானு அவள் அளித்த வரவேற்பு ஆழ்ந்த அன்பும் பரிவும் நிறைந்ததாகவேயிருப்பினும், இருந்த இடத்திலிருந்தே சிறிதும் சுறுசுறுப்புக் காட்டாமல் எப்படியோ அவள் அளித்த அந்த வரவேற்பு என்னமோ போல இருந்தது எனக்கு.

"என்ன ஜானுவா? துருதுருவென்ற சுபாவம் கொண்ட ஜானுவா என்னை, பல வருஷங்களுக்குப் பிறகு பார்க்கும் என்னை இப்படி உணர்ச்சி வற்றி மகிழ்ச்சியின்றி வரவேற்கிறாள்?" முகத்திலே பொலிவு அகமகிழ்ச்சிக்கு எப்படி எடுத்துக் காட்டாமோ. அதுபோலவே முக அழகின் சிதைவு மனக்கிலேசத்திற்கு அத்தாட்சியல்லவோ?"

ஒரே வினாடியில் இப்படி எண்ணிவிட்டாலும் அடுத்த வினாடி அவளழுகு ஆர்வமும் குதூகலமும் பொங்கும் வண்ணம் அமர்ந்துவிட்டேன்

"வந்துட்டேண்டி ஜானு! அப்பா! எத்தனை காலமாச்சுடிம்மா நாம் சந்திச்சு!" என்று படபடத்தேன் மகிழ்ச்சியால்.

"ஆமாம்!" என்றாள் நிதானமாக. பிறகு ஒரு விநாடி கருவட்டங்கொண்டிருந்த தன் கண்கள் வெறித்துப் பார்ப்பதுபோல குத்திட்டு நோக்கி, "ஆறேழு வருஷமாயிருக்கும்!" என்றாள்

அப்புறம் நடந்தது எங்கள் சம்பாஷணை, ஒருவித நிதானமுடன் பல பல கேள்விகள் அவள் என்னைக் கேட்டாள். ஆனால், அவள் நெஞ்சிலே சீவன் இல்லை, குரலிலே சுரத்து இல்லை இலையுதிர்ந்த மரம்போல காணப்பட்ட அவளை, "நீ ஏன் இப்படி இருக்கிறாய்!" என்று வினவ என் வேதனை மனம் உந்தியது. ஆனால் நானே மரமானேன் அந்த விஷயத்திலே.

இறுதியில் நான் சொல்லக் கூடிய விஷயங்கள் தீர்ந்துபோய் நான் கேட்கவேண்டிய விஷயங்கள் எஞ்சி நிற்கவே, துணிந்தேன். நான் கொடுத்த தகவல்களுக்கும் விடைகளுக்கும் எதிர் மரியாதை பெற்றுக்கொள்ளாமல் போய்விட, என் 'சம' உணர்ச்சி ஒப்பவில்லை 'சம்பந்தி' உணர்ச்சியைவிட அதிக தீவிரமாக இருந்த என் 'சம' உணர்ச்சிக்கு நேர்மையாகவும் தோன்றவில்லை கேட்டே விட்டேன்.

அவளும் ஒளிக்கவில்லை எதையும். தன் பேதை மனதைத் திறந்து காட்டினாள் பொன்வைக்கும் இடத்திலே பூ வைத்தாள், ஆம்!...... அவள் சொன்ன விவரம், அவளுடைய மனத்துயரிலே ஒரு பகுதியாவது குறைந்திருக்குமா அப்போது? ஏதோ அவள் மனத்துயருக்குக் காரணங் கூறினாளே தவிர ஆறுதல் என்ன அளித்திருக்கக்கூடும் அன்றைய நிலையிலே?

சொன்னாள் ஜானு. என்னைப் பார்க்க முடிந்ததில் ஆறுதல்தான் என்று ஆனால், 'நாம் இப்படிச் சந்திக்கவேண்டுமா, சுசீ!" என்றுதான் ரொம்பவும் சிறுமையும் வருத்தமும் கொண்டாள்.

"நீ வந்திருப்பதுபோல நானும் பிறந்தகம் வந்திருக்க நேர்ந்து, இந்தச் சந்திப்பு நடந்திருந்தால், அது ஒரு பாக்கியமாகவும், கடவுள் அருள் போலவும் தோன்றியிருக்கும் ஆனால் இப்போது, பிறந்தகத்தோடு கிடக்கும் என்னை நீ பார்க்க நேர்ந்தது விசேஷமாகுமா? இப்போது உனக்கும் வருத்தம் எனக்கும் தலையிறக்கம்!'' என்றாள் ஜானுவே, வெளிப்படையாக.

"என்ன நடந்தது சொல்லேன் ஜானு!'' என்று முடுக்கினேன்

''அவர் என் மாங்கல்யத்தை நிலை நிறுத்திக்கொண்டுதான் இருக்கிறார் அந்த மட்டும் நான் பாக்கியசாலிதான். சுசீ! ஆனால் இந்தப் பரந்த உலகிலே ஒரு சாண் இடம் இருந்தாலும் சேர்ந்து வாழவேண்டிய நாங்கள், மூலைக்கொருவராகிவிட்டோம்!'' என்றாள் அந்த பாக்கியசாலி முத்துக்களைக் கண்களிலிருந்து உதிர்த்துக்கொண்டே.

"அப்படியென்றால் அவர் எங்காவது சண்டையால் சேர்ந்துவிட்டு, திரும்பவேயில்லையா......அல்லது..... ஜானு..."



''சுசீ! நிஜமாகப் புரியவில்லையா? அல்லது கேட்கத் தயக்கப்படுகிறாயா?...அவரோடு வாழும் பேறு இனி எனக்கு இல்லை என்று அவராலேயே துறக்கப்பட்டுவிட்டேன்! ஆறேழு மாசம்தானாச்சு இது தெரிந்து!...ஆனால் யுகங்கள் மாதிரியிருக்கிறது சுசீ!...நீயும் நானும் பிரிந்து வருஷங்கள் ஆனாலும். அது அப்படியொன்றும் பிரமாதமாகத் தோன்றமாட்டேனென்கிறதே இப்பவும்!...நானும் அவரும் ரொம்பவும் ஒற்றுமையாய்த்தான் இருந்தோம் சுசீ! இரண்டு பேருக்கும் அப்படியொன்றும் பிரமாதமான மனத்தாங்கலே கிடையாதே இப்படி நடக்க! அதான் சுசீ! வேதனை அடங்கவே மாட்டேனென்கிறது!'' என்று விம்மினாள் அவள்.

''என்ன காரணத்தினால் இந்த தண்டனை என்பதுகூடவா உனக்குத் தெரியாது? அவர் சொல்லவில்லை?......அந்தோ, நீ சுமைவது இத்தகைய பெரும் வேதனையாலா, ஜானு!'' எனப் பதறிப்போனேன் வினவினேன் அவளை.

''தெரியும் கொஞ்சம்!...அதுவாத்தான் இருக்கும்!'' என்றாள் ஜானு விக்கின வண்ணம்.

"தெரியுமா? கொஞ்சமாவது தெரியுமா...சொல்!'' என்றேன்

''உன்னிடம் சொல்லத்தான் போகிறேன் சுசீ! நீயே சொல், யார் செய்த தவறு என்ன தவறு என்று நீயே சொல்! என்னைக்கேட்டால் சிறு வயசிலிருந்து என்னைப் பிடித்திருந்த கண்ணாடிப் பித்துதான் என்று சொல்வேன்!'' என்றாள்.

"கண்ணாடி ஆசையா?'' என்று திடுக்குற்றேன் நான்.

"ஆம்'' என்று ஜானு விளக்கிவிட்டாள் விஷயம்.

என் ஜானுவும் காலக் கோளாறு செய்த சதியால் வாழ்வு குலைந்தாள் முகம் பார்க்கும் கண்ணாடி என்றால் அவளுக்கு இருந்த ஆசை, அவளுடைய கண்ணாடிப் பித்து. அவளுடைய குடும்பத்திலே புரைசல் கிளப்பி அவளுடைய இன்ப வாழ்வுக்கு மோசம் செய்தது.

அந்த எங்கள் பள்ளி வாழ்க்கையிலே...ஒரு நாள் நடந்த அந்த விளையாட்டுச் சம்பவமும், இன்று எங்கள் கண் முன்னே கொக்கரித்த இந்தப் பயங்கர சம்பவமும் இரண்டுமே, ''கண்ணாடி''யை ஒட்டியவைதான் ஆனால்...?

அன்று...

பள்ளிக்கூட வராந்தாவில் நாங்கள் ஐந்தாறு பேர் கும்மாளமாகப் பேசிக்கொண்டிருந்தோம்.

ஆசைக்காக மூக்குக் கண்ணாடி போட்டுக்கொண்டு கண்ணைக் கெடுத்துக்கொண்டு விட்ட கோமதியை ஒட்டி ஏற்பட்டது அந்தப்பேச்சு என்பதனாலோ இந்த விபரீதம் ஜானுவுக்கு ஏற்பட்டது!

"எனக்கு மூக்குக்கண்ணாடி ஆசையில்லையடியம்மா? முகம் பார்க்கும் கண்ணாடி தாண்டிம்மா ஆசை! சின்ன வயசிலிருந்தே கண்ணாடிக்கெதிரில் நின்றால் எனக்குப் பொழுதுபோவது தெரியாது! எங்கள் மாமா வீட்டில் பெரிய நிலைக்கண்ணாடி பீரோ இரண்டு உண்டு! அதான் பழக்கம், ஆசை பிடிபட்டுப் போச்சு! இரண்டு கண்ணாடிகளை எதிரும் புதிருமாக வச்சு நடுவில் நாமாவது நின்று, இல்லை, ஏதாவது பண்டத்தையாவது வைத்துப் பார்த்தால், எவ்வளவு உருவங்கள் தெரியும். உனக்குத்தெரியுமா?......ரொம்ப ஜோராயிருக்கும்! கவனிக்க கவனிக்க சுவாரஸ்யமாயிருக்கும்!'' என்றாள் ஜானு.

"ஓஹோ, உன்னைப் பிறந்தது முதலே கண்ணாடிக்கு எதிரில் நிறுத்தி, விளையாடடுக்காட்டி பழக்கிவிட்டார்களாக்கும்! நல்லவேளைடிம்மா! கண்ணாடிக்கெதிரில் குழந்தைகளை நிறுத்தினால், ஊமையாகிவிடும் என்பார்களாம்! இப்போதே மூச்சு விடாமல் பேசுகிறவளாச்சே நீ! உன்னைச் சிறுவயசில் கண்ணாடிக்கு முன்னே பழக்கியிராவிட்டால் இன்னும் எப்படி இருந்திருப்பாயோ!'' என்று நான் சொன்னேன் பேச்சிலே கொஞ்சமும் பின்வாங்காமல்.

பக்கத்திலிருந்த சுதா, "இப்போ மழைபெய்து ஓய்ந்தமாதிரி யிருக்கு அவள் பேசி நிறுத்தினால்! அப்போ

புயல் அடிச்சு ஓய்ந்த மாதிரி இருக்கும்! அவ்வளவுதான்!'' என்று ஒரு போடு சளைக்காமல் போடவே, ஜானு உள்பட நாங்கள் எல்லோரும் சிரித்துச் சிரித்து ஓய்ந்த போது சுதாவின் பேச்சுக்கு நிதர்சனம் ஏற்பட்டுவிட்டது

மறுநாள் ஜானு பள்ளிவரும்போது தன் கண்ணாடிப் பித்துக்கு நிதர்சனம் காட்டினாள். அவளுக்குப் பாராட்டு கூறும் வகையில் "உனக்குக் கல்யாணத்திற்கு ஒரு ஜோடி கண்ணாடி பீரோ கிடைக்கட்டும்'' என்றுவாழ்த்தினோம் "நீயும் அவரும் அந்த இரண்டு கண்ணாடிகளுக்கு நடுவில் நின்றால், "நம்மைப்போல எத்தனையோ தம்பதிகள்!'' என்ற நினைவு வரும்! 'எங்களைப்போல தம்பதிகள் கிடையாது' என்ற பெருமை கூட ஏற்படும்!'' என்றாள் சுதா!

அன்று எங்களுக்கு இன்பமூட்டும் வகையில் அமைந்த 'கண்ணாடி ஆசை''ப் பேச்சு, நேர்த்தியான கண்ணாடி போன்றது. இன்றோ பலவித பூத உருவங்களைக்காட்டி நம் உருவைக் கண்டு நமக்கே அருவருப்புக் கலந்த அதிசயம் உண்டாக்கச் செய்யும் பயங்கர அதிசயக் கண்ணாடி போல இருந்தது. எங்கள் 'கண்ணாடி ஆசைப்' பேச்சின் தன்மை.

அவளுடைய மணவாழ்க்கையில் அந்த 'ஆசை' செய்துவிட்ட பயங்கர விளைவு கண்டு திகைத்து அதிசயிக்காமல், பின் எப்படி இருப்பது?

அப்புறம்—மணவாழ்க்கை ஜானுவுக்கு ஆரம்பமானபோது—

'ஆசைப்பண்டத்தை அன்புக்கணவர் வாங்கித்தருவார்! அவசியமானவற்றை அப்பா கொடுத்திருக்கிறார் அல்லவா?'' என மனம் தேறி புக்ககம் போனவள் ஜானு.

கல்யாணமாகி புக்ககம் போகும்போது கட்டாயம் நிலைக்கண்ணாடி பீரோ ஒன்று சீருடன் வேண்டும், கிடைக்கும் என்று அவள் உண்மையாகவே ஆசைப்பட்டது நிறைவேறவில்லை. புக்ககத்தாருக்கு அவசியமாகத் தோன்றக்கூடிய சீர் வரிசையையே குறைவின்றி அளிப்பதற்குச் சிரமப்பட்டாராம் நோய் வாய்ப்பட்டிருந்த அவள் தந்தை. நிலைக்கண்ணாடி கிடைப்பது தடைபட்டுப் போயிற்று. ஆனால் மனம் தேறினாள் அவள்.

கணவனுக்கு பட்டணவாசத்திலே வேலையாகி குடித்தனம் துவங்கிவந்த அந்த சுதந்திரமான இன்ப வாழ்க்கையில்தான் எங்கோ விரிந்து பதிந்துபோன கண்ணாடி ஆசை வெளிப்பட்டும், வெளிப்படாமலும் முளைத்தெழுந்து தொல்லைப்படுத்தத் தொடங்கியது.

ஒரு பொருட்காட்சிச்சாலையில் பார்த்தாளாம் அவள் அந்தப்புது தினுசு நிலைக்கண்ணாடியை அங்கேயே நிலைகாண முடியாத ஆர்வத்துடன் சொன்னாளாம் கணவனுக்கு, தன் மனம் அதிலே ஈடுபட்டதை வீட்டுக்கு வந்தும் சொன்னாள். இரவு முழுதும் அதே நினைப்புத்தான்

ஆள் உயரத்திற்கு நீண்டு நிமிர்ந்த பளபளப்பான கண்ணாடி, அதையொட்டினாற் போல, முன்பக்கம் அலங்காரக் கருவிகள் வைக்க இடம். இருமருங்கும் இரண்டு பீப்பாய்கள், வைத்தாற்போல இடம் ஒருபக்கம் பூச்செண்டு கொண்ட புஷ்பக் கூடை வைக்கலாம். மற்றொருபக்கம், திருமணப் போட்டோ வைக்கலாம் எதிரே உட்கார தனி முக்காலி, அதன்மீது கண்ணாடிக்கெதிர் உட்கார்ந்துவிட்டால் சினிமாக் காட்சிகளில் ராஜகுமாரிகளின் அலங்காரக் காட்சி தோற்றுவிடும் என்று எண்ணினாளாம்.

மறுநாள் கணவனிடம் தன் ஆசையைச் சொன்னாளாம் "பணம் வேண்டாமா! இருநூற்றைம்பது என்றானே!'' என்று. கேட்டாராம் அவர்.

ஆசையால் கவ்வப்பட்ட ஜானு "நான் ஊரிலே இரண்டு மூன்று மாசம் போய் இருக்கிறேன் குடித்தனச் செலவு இல்லாவிட்டால். அதற்குள் பணம் சேர்ந்துவிடாதா?'' என்று கூறினாள்.

"எத்தனை ஆசை!'' என்று கணவன் அறியவேணும் என்று அவள் அப்படிக் கூறியது பலனளித்தது! ஒரு கூர்ந்த பார்வை பார்த்தானாம் கணவன். எத்தனை உரம் பெற்றது அவளுடைய ஆசை என்பதை அவளுடைய முகத்திலிருந்து கிரகித்துவிட்டதுபோல், மறுநாளே கண்ணாடிக்கு ஆர்டர்' கொடுத்துவிட்டார்

கண்ணாடியை வைக்கத் தகுந்த இடம் பார்த்துப் பொறுக்குவதிலே முனைந்த அவளை, "என்ன வீட்டையே இடித்துக் கட்ட பிரயத்தனமோ?' என்று பரிகாசம் செய்தார்

கண்ணாடி வந்தது; பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டு வந்தது. அதைப்பொருத்தி நடு ஹாலில் ஒரு பக்கமாக அமர்த்தினாள் ஜானு

"விலை இருநூற்றைம்பது ஆனாலும் என்ன! என்ன அழகு. புது தினுசு! வீட்டுக்கு லட்சணமாக இது ஒன்று போதுமே! வேறே மரச்சாமான்கள் கூட வேணுமா?'' என்றாள் ஜானு.

"ஓஹோ!...அப்படியா?'' என்று மட்டும் சொன்னார் அவள் கணவர். கண்ணாடிப்பொருத்தி வைக்கும் போதுகூட வேறொன்றும் அவர் சொல்லவில்லை

சிறு வயதில் ஊன்றியிருந்து. இடைக்காலத்தில் மறைந்து கிடந்த கண்ணாடி ஆசையெல்லாம் திரும்பி விட்டது அவளுக்கு. பழைய குழந்

தைத்தன்மையை அடைந்திருந்தாள் கொஞ்சநாள் கணவன் அவளைப் பரிகாசம் செய்யத் தொடங்கியிருந்தாலும் கண்ணாடியைச்சாக்கிட்டு. ஜானு கூப்பிட்ட குரலுக்கு ஓடி வராவிட்டாலும். தான் உள்ளே காரியமாகவேயிருந்து வராதிருப்பினும். ''கண்ணாடிக்கெதிரில் இருக்கிறாயோ. ராணியம்மா! என்று கேட்பானும்.

ஜானுவும் "எனக்கு என்றைக்குமே கண்ணாடி என்றால்ஆசைதான். எங்கள் ஊரில் கேட்டுப்பாருங்கள்!'' என்றும், "புதுக்கண்ணாடியென்றால் ஒரு தடவைக்கு இரண்டு தடவை பார்த்துக்கொள்ளத்தான் தோன்றுகிறது!'' என்றும் சிரித்துக் கொண்டே சொல்வாளாம் ஆனால் கணவனின் பரிகாசப் பேச்சு நிஷ்டூரப் பேச்சாக மாறிவர ஆரம்பித்தது. அதுநாள் வரை சிடுசிடுப்புக் காட்டாத புருஷன், சுருக்சுருக்கென்று பேசி, ஏசத்தொடங்கினான்!

''ஓஹோ! எத்தனைக்கெத்தனை கண்ணாடிகள் அதிகம் இருந்தால் அத்தனைக்கத்தனை ஷோக்காயிருக்குமா?— நரகம்னு சொல்லு! சதா தன்னைத் தானே பார்த்துக்கொள்வது தன்னைப்பற்றியே நினைச்சுண்டிருக்கிறது பிறத்தியார் நினைப்பு இல்லாமல் எங்கே கண்ணாடி கண்டால் அங்கே முகத்தை நீட்டுவது எல்லாம் ரொம்ப நல்ல குணம், ரொம்ப ஸ்வர்க்கம் !......... 'தான்' என்பதுபோனால் சொர்க்கம் என்று பெரியவர்கள் சொன்னார்கள்! நீ அதற்கு நேர்மாறாகச்சொல்லு. புத்தி கெட்டவளே ?' என்று சீறினான் ஒருநாள்

"பிறத்தியார் பார்த்துமெச்சணும் உன் அழகை! நீயே பார்த்துக் கொள் புகழ்ந்துகொள். பீற்றிக் கொள் நீதான் அழகுசுந்தரி என்று!'' எனக் கடுகடுத்துக் கொண்டிருக்கிறான் மற்றொரு சமயம்.

ஒருநாள் அவனுக்குக் குடிக்கப் பாலை எடுத்துக்கொண்டு வந்து கொண்டிருந்தவள், வழியில் இருந்த கண்ணாடியை ஒரு தடவை திரும்பிப் பார்த்துவிட்டு வந்ததற்கு, "இராவேளை கண்ணாடியில் பார்த்தால் என்ன ஆவார்கள் தெரியுமோல்லியோ ? இப்போ நீ குலுக்கிண்டு மினுக்கிண்டு அழகு பார்த்துண்டு வந்தாற்போல வருகிறவா என்ன ஆவார்களோ! அப்படித்தான். என்று எரிந்து விழுந்திருக்கிறான்.

கணவனின் பரிகாசத்திற்குபயந்து ஜாக்கிரதையாக இருக்கத்தொடங்கியிருந்தாள் ஜானு. கண்ணாடியெதிரில் ஒரு நாழி உட்கார்ந்து தலை பின்னிக் கொள்ளாமல், பூமுடிய அதிகம் நேரமாக்காமல். அவன் பேச்சைத் தவிர்க்க முயன்றாள் அவள். அதனால் கண்ணாடியையும் தவிர்த்தாள். அப்படியிருக்க. அவனுடைய கடுகடுப்பு குறையாமற் போகவே,

"ஐயோ, ஏனிப்படி பேசுகிறார்? எவ்வளவோ குறைந்துவிட்டதே என் கண்ணாடிப்பித்து! முன்பு இருந்த வெறிக்கு எந்த மூலை இந்தப் பற்று?' என்ற குழப்பமும், வருத்தமும் ஏற்பட்டது

ஒருநாள் அவளைக் கூப்பிட்டு, உன் மாமா பிள்ளை கல்யாணத்திற்குப் போய் வா !'' என்று கூறி அவளை வலுவிலே பிறந்தகம் அனுப்பிவைத்தான் கணவன்

"போய் வந்தால் இப்போது தோன்றியிருக்கும் சிறு மன வேற்றுமை நீங்கிவிடும்! கொஞ்சம் பிரிந்திருப்பது நல்லது!'' என்று எண்ணமிட்ட ஜானு. தடை கூறாமல் புறப்பட்டாள்.

புறப்பட்டவளை எப்படிப்பட்டதோ. ஜானு அப்புறம் கணவனிருக்குமிடம் போகவில்லை'

"உனக்கு நீயே எப்போது உயர்த்தியோ, எனக்கு உன் உறவு வேண்டாம்!'' என்று இடித்ததாம், கணவனின் கடிதம். இவள் வந்த நாலு தினங்களுள் கடிதம் துரத்திக் கொண்டு வந்ததாம்

ஓரிரண்டு கடிதங்கள், "எனக்கு நீங்கள்தான் உயர்ந்தவர்!'' என மன்றாடிக் கடிதம் விடுத்தாளாம்: பதில் இல்லை அவற்றுக்கு

"இந்த வேலை வேண்டாமென்று ராஜிநாமா செய்துவிட்டுப் போனாரே!'' என்று சொன்னார்களாம் எழுதினார்களாம் கணவனின் ஆபீஸ் நண்பர்களும், மற்றவர்களும்.

புக்ககத்தார். "எங்களுக்கும் தெரியவில்லையே!'' என்று வேதனையுடன் எழுதியிருந்தார்களாம்!

"நீயே சொல் சுசீ! என்ன தவறு. யார் செய்தது தவறு? என்ன விபரீதம் நடந்துவிட்டது!'' என்றாள் ஜானு

நான் திகைத்திருந்தேன் 'இப்படியுமா ஒரு ஆத்மா இருப்பார்! பல காலம் அவளுடன் பழகிவிட்டு, இப்படி ஒன்றுமில்லாததற்கு மனைவியைத் துறப்பாரா?'' என்றுதான் திகைப்பு

[அடுத்த இதழில் முடியும்]

கலாமண்டபம்

சினிமாவும் ஒலிப்பதிவு செய்பவரும்

சாண்டில்யன்

இருபதாவது நூற்றுண்டின் ஆரம்பம். மேல் நாடுகளில், முககியமாக அமெரிக்காவில் குரலைப் பிடி, குரலைப்பிடி' என்ற சத்தம் பலமாகக்கேட்டது. ஆளைப்பிடிப்பதில் மட்டும் அதுவரையில் கவனம் செலுத்தி வந்தவர்கள் குரலைப்பிடிப்பதிலும் முனைந்தார்கள்.

ஆளைப்பிடித்துத் திரையில் கொண்டுவந்து நிறுத்தி நடிக்கச்செய்து பல வருஷங்களாகியும அவர்களைப் பேச வைக்க யாராலும் முடியவில்லை. இப்படி நம் மீது கோபத்தினால் பேச மறுத்த திரைப்பாத்திரங்களின் வாயைத் திறந்து குரலைப் பிடிக்க விஞ்ஞானிகள் முனைந்தார்கள். முதன் முதலாக அவர்கள் குரல் பிடித்த வித்தை சர்வ சாமான்யமானது.

கதையைத் தனியாகப் பிலிம் எடுத்து, கிராமபோன் பிளேட்டுகளில் குரலைப் பதிவுசெய்தார்கள். எந்த சமயத்தில் கதாபாத்திரம் வாயைத் திறந்தால் சொல் கிளம்பவேண்டுமோ அதற்கு சரியாகப் பிளேட்டை சுற்றவிட்டு இரண்டையும் இணைத்துப் பேசும் படமாக நமக்குக் காட்டினார்கள். இப்படி பிளேட்டில் பதிவு செய்யப்பட்ட ஒலி (பாட்டோ, பேச்சோ) தியேட்டர் பூராவும் கேட்பதற்காக ஒரு ஒலிப்பெருக்கியையும் அமைத்தார்கள். இந்த விதம் சினிமா பாத்திரங்களைப் பேச வைத்ததை ஒரே ஒரு மனிதன் மட்டும் விரும்பவில்லை.

இந்த மனிதனின் பெயர் யூஜின் அகஸ்டின் லாஸ்டே. பூர்வீகம் பிரான்ஸ் தேசம். அமெரிக்காவில் எடிஸன் விஞ்ஞான ஆராய்ச்சிசாலையில் வேலை செய்துகொண்டிருந்தார் அவர் ஒரு கேள்வி தம்மை அடிககடி கேட்டுக்கொண்டார். ஆளை பிலிமில் போடடோ எடுககும்போது குரலை மாத்திரம் ஏன் போட்டோ எடுக்கக்கூடாது?'' என்று கேட்டுக்கொண்டு அதைச் சோதனைசெய்யத்தொடங்கினார். இதற்காக ஒழிந்த வேளைகளில் பிரிக்ஸ்டனிலுள்ள

[தொடர்ச்சி அடுத்த பக்கம்]



யூஜின் அகஸ்டின் லாஸ்டே: ஒலிப்பதிவு செய்யும் முறையைக் கண்டுபிடித்தவர்

சினிமாவும் ஒலிப்பதிவு செய்பவரும்

[முன்பக்கத் தொடர்ச்சி]

ஒரு ஸ்டுடியோவில் வேலைசெய்து வந்தார். ஒலியை ஒளியாக மாற்ற முடிந்தால் அதைக் கண்டிப்பாகப் போட்டோ பிடிக்கலாம் என்ற முடிவுக்கு வந்தார். அதன் மேல் ஆராய்ச்சிகள் நடத்தி ஒலியை மின்சார அலைகளாக்கி அவற்றை ஒரு தீபத்தின் முன்னால் ஓட விட்டு அதனால் எழும்பிய தீப அலைகளை ஒரு பிலிமில் போட்டோ எடுத்தார். இப்படியாகக் கிளம்பும் ஒலி அலைகள் தான் நமது சினிமா பாத்திரங்களின் வாயைத் திறந்து அவர்களைப் பேசவும் பாடவும் வைக்க பெரிதும் உதவலாயின. இப்படி குரலைப்பிடித்த இவருக்கு 'ஒலிப் பதிவு பிதாமகர்' என்ற பெயர் அமெரிக்காவெங்கும் பரவலாயிற்று. முதன் முதலாக ஸவுண்டு பிலிம் (ஒலிப் பதிவு பிலிம்) தயாரித்த வருஷம் 1910 இந்த வருஷத்தில் அவர் அதை அமெரிக்க வியாபாரச் சட்டத்தின் கீழ் காபி ரைட் செய்தார். ஆனால் அவர் துரதிர்ஷ்டத்தை என்னவென்று சொல்வது?

அமெரிக்காவிலுள்ள சட்டத்தின்படி இவ்வித காபி ரைட் 16-வருஷகாலந்தான் நீடிக்க முடியும். அதற்குப் பிறகு எந்த ஆராய்ச்சியும் பொதுச் சொத்தாகி விடுகிறது. ஆகவே 1926 ம்வருஷத்திற்குப் பிறகு பேசும் படங்கள் அபரிமிதமாகி முதலாளிகள் கொள்ளைலாபம் சமபாதிக்க ஆரம்பித்த பின்பும் மிஸ்டர் லாஸ்டேயிக்கு தம் ஆராய்ச்சியால் காலணா கூட கிடைககவில்லை. இவரைப் பற்றி புஸ்தகம் எழுதியிருக்கும் பிரபல விஞ்ஞானி பெர்னார்ட் பிரௌன் சொல்லுகிறார். "பாவம் லாஸ்டே. பிரமாதமான ஒரு விஷயததைக் கண்டுபிடித்தார். அதனால் அவருககு ஒரு சல்லிக் காசு கூட கிடைக்கவிலலையே, மேதாவிகளின் விதி. யார் என்ன செய்யலாம்"

இந்தப்பக்கங்களில் ஒலியை ஒளியாக்கிய மிஸ்டர் லாஸ்டேயின் படத்தையும் ஒளிப் பதிவும ஒலிப்பதிவும் செயயபபட்ட பிலிமையும் பிரசுரித்திருககிறேன். ஒலியின் இரைச்சலுககுத் தகுந்தபடி ஒளி எப்படி பெரிதாயும்சிறிதாயும் பதிவு ஆகி யிருக்கிறது என்பதைப் பிலிமில் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள் ஒலிப்பதிவைப பற்றிய விஞ்ஞான முறைகளை இதற்குமேல் சொன்னால் புரியாதாகையால் பொதுப்படையான அம்சங்களைச் சொல்வதோடு நிறுத்திககொள்கிறேன்.

இனி ஒலிப் பதிவு செய்பவரின் அலுவலைப்பற்றிச் சொல்கிறேன். காமிராமானுக்கு எப்படிக கதை தெரியவேண்டுமோ அந்த மாதிரி இந்த ஒலிப்பதிவாளர் என்கிற ஸவுண்டு என்ஜினீயருக்கும் கதை நன்ருகத் தெரிநதிருககவேணடும். ஏன்? கதையின் ஒலியைப் பதிவு செய்வதில் இவர்பல விஷயங்களைக கவனிகக வேண்டியிருக்கிறது. ஒரு உதாரணத்தைக் கவனிப் போம. கதாநாயகியின் பாடடு ஒன்று பதிவு செய்யப்படுகிறது என்று வைத்துக்கொள்வோம். கதாநாயகி கதாநாயகன் வராததால் சோகத்திலிருந்தால் அந்தப் பாட்டை எப்படிப் பதிவுசெய்ய வேண்டும்? கதாநாயகன் வருவானென்ற ஆனந்தத்தால் கூத்தாடினால் எப்படிப் பதிவுசெய்யவேண்டும்? இரண்டுக்கும வித்தியாசமிருக்கிறது.

பாட்டைப்பதிவுசெய்யும்போது மைக்ரோபோனுக்கு முன் உட்



படமும் தாலும் பதிந்திருக்கும் பிலிம் துண்டு.

கார்ந்து நடிகை ஏகப்பட்ட பக்க வாத்தியங்களுடன் பாடுகிருள். வெளியிலிருக்கும் மோட்டாரில் உட்கார்ந்து 'ஹெட்போன்' என்ற கருவியைக் காதில் மாட்டிக் கொண்டு ஒலிப்பதிவாளர் பாட்டு தம் காதுக்கு எப்படி விழுகிறது என்று கேட்கிருர். சோகக் கட்டத்தில் நடிகை குரலோடு ஒரு பிடிலோ, வீணையோ மட்டும நன்ருககக் கேட்கலாம். மற்ற மிருதங்கம் டோலக். முதலிய கலாட்டாக்கள் கேட்கக் கூடாது. இந்த அமர்க்களக்கருவிகளை அடக்கும்படி உத்தரவு போட்டு ஒரு தந்தி வாத்தியத்தோடு சோக பாவம் ததும்பும்படி பாட்டை மென்மையாகப் பதிவு செய்கிருர் இதே கதாநாயகி ஆனந்தக்கூத்தாடினால் சலங்கை சத்தம், மிருதங்கம்

[தொடர்ச்சி அடுத்த பக்கம்]

சினிமாவும் ஒலிப்பதிவு செய்பவரும்

[முன் பக்கத் தொடர்ச்சி]

எல்லாவற்றையும் கிளப்பிவிட்டு பாட்டை குதூகலமாகப் பதிவு செய்கிறார். இதிலிருந்து ஸவுண்டு என்ஜினியர் வெறும் யந்திரமல்ல. அவரும் சொந்த யோசனையை வெகுதூரம் உபயோகப்படுத்தினால்தான் படம் கேட்பதற்கு நன்றாயிருக்கும் என்பதை நீங்கள் ஊகித்துக்கொள்ளலாம்.

ஸவுண்டு என்ஜினியர் ஒலிப்பதிவு கருவியைச் சரியாக உபயோகிப்பதன் மூலம் நடிகை, நடிகர்களின் குரலை எவ்வளவோ பதனப்படுத்தலாம். மெல்லியதாய்க் காதுக் கேட்காத குரல்களைப் பெரிதாகக் கேட்கும்படி செய்யலாம். மிகவும் கத்தல் சாரீரத்தை ஒடுக்கி இன்பமாகக் காட்டலாம். பாத்திரங்களின் குரல் அவர் கையிலிருக்கிறது. கதா பாத்திரங்கள் மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டிய பேர்வழிகளில் இவர் ஒருவர். குரலைக் கழுதைக் குரலாகக் காட்டினால் நஷ்டம் யாருக்கு?

சமீபத்தில் பாரிஸில் மிருணாளினி ஸாராபாய் ஆடிய இந்திய நடனத்தைப் பிரஞ்சுக்காரர்கள் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள்.

'லாவண்யா'

ஈஸ்டர்ன் ஆர்ட் புரொடஷன்ஸ் 'லாவண்யா'வில் பெரியநாயகி சில பாட்டுகளை அபூர்வமாகப் பாடியிருக்கிறார். கதாநாயகி பாகத்தை நடிக்க வைஜயந்தியை அமர்த்தியிருபபதாகத் தெரிகிறது.

வடநாடு சென்றிருக்கும் ஹிந்தி சந்திரலேகா. இருக்கிற இருப்பைப் பார்த்தால் சமீபத்தில் தென்னாடு திரும்பமாட்டார் என்று தோன்றுகிறது.

சென்னை பாரகனில் காட்சியளித்து வரும் ஜூபிடர் 'வேலைக்காரி' ராஜம்மா.

'ஆலிவர் டுவிஸ்'டுக்கு அமெரிக்காவில் தடை

ஜெர்மனியில் கல்லடி

'ஆர்தர் ராங்க்' தயாரித்த 'ஆலிவர் டுவிஸ்ட்' என்ற படத்தில் யூதர்களைப்பற்றி கேவலமாகக் காட்டியிருப்பதாக அமெரிக்க யூதர்கள் ஆட்சேபித்ததன் மேல் யுனைடெட் ஸ்டேட்ஸில் அதைக் காட்டக்கூடாதெனத் தடை விதிக்கப்பட்டது. கடைசியில் பெர்லினில் ஒரு தியேட்டரில் வெளியிட்டார்கள். அங்கு யூதர்கள் ஏராளமாகக்கூடி கல்லாலடித்தார்கள் ஒரு ஜெர்மன் கிழவி கூடையில் கல்லை வாரிக்கொண்டு போய் அடிப்பவர்களுக்கு உதவிக்கொண்டிருந்தாள் தலை தப்பினால் தம்பிரான் புண்யம் என்று தியேட்டர் சொந்தக்காரர் வேறு படத்தைக் காட்டினர்.

அமெரிக்க பாங்கி உஷாராகிறது!

சினிமாவுக்குப் பணம் கொடுப்பதில் கட்டுப்பாடுகள்

அமெரிக்காவில் லாஸ்ஏஞ்ஜல்ஸிலுள்ள பாங் ஆப் அமெரிக்கா, சினிமாப் படம் பிடிக்க பணம் கொடுக்கும விஷயத்தில் உஷாராகிவிட்டது தற்காலத்திய படங்களில் பண வசூல் திருப்திகரமாயில்லையாகையால் படம் பிடிக்க பணம் கேட்பவர்கள் சரியான ஈடுகாட்ட வேண்டுமென பாங்கி கூறிவிட்டது. "சொல்பச் செலவில் தயாராகும் படங்களுக்கு அதிக நிபந்தனைகள் போடமாட்டோம். ஆனால் ஏராளச் செலவில் படம் பிடிப்பதனால் பணம் கொடுக்கும் விஷயத்தில் அதிகக் கட்டுப்பாடுகள்தான் இருக்கும்" என்று பாங்கி அதிகாரி திட்டமாகச் சொல்லிவிட்டாராம். ஹாலிவுட்டிலேயே நிலைமை இப்படியானால் நமது ஊரைப் பற்றிக கேடகவாவேண்டும?

சினிமாத் தொழிலுக்கு நெருக்கடியா !

ஹாலிவுட் முதலாளி தைரியம் சொல்கிறார்

ஹாலிவுட்டின் பிரபல பட உற்பத்தியாளரான லெஸ்டர் கோவான் இப்பொழுது சினிமாத் தொழிலுக்கு ஏற்பட்டிருக்கும நெருககடியைப்பற்றி யாரும் கவலைப்படவேண்டாமென தைரியம் சொல்கிறார்.

"நெருககடி நெருக்கடி என்று பயமுறுத்துகிறார்களே! இதென்ன நெருக்கடி! சினிமாத் தொழிலுககுத்தான் நெருக்கடியில்லாத காலமே கிடையாதே. இது நாடகத் தொழில். இதிலிறங்கியவன் நெருக்கடிக்குப் பயப்படுவதில் அர்த்தமுண்டா? நெருக்கடிகளை இணைப்பதால் நாடகத்துக்கு எப்படி விறு விறுப்பு ஏற்படுகிறதோ அதேமாதிரி இத்தொழிலும் நெருக்கடிகளில்தான் வளரும். நெருககடியில்லாத சமயம் ஏற்பட்டால்தான் நாம் கலங்க வேண்டும். கஷ்டமிருக்கும் வரையில் கலை வளரும். பயம் வேண்டாம்" என்று அவர் அறிவிக்கிறார்.

விதிவசம்

[ஹரிசரண்]

'தொழில் விட்டால் ஜெயில், ஜெயில விட்டால் தொழில். தூ, எத்தனை நாளைககு இந்த மானங்கெட்ட பிழைப்பு! ஏன் நாமும் எல்லாரையும்போல சம்பாதித்த பணத்தை வைத்துக் கொண்டு. கொஞ்ச நாளைக்கு நிம்மதியான குடும்ப வாழ்க்கை நடத்தக் கூடாது?'

தனது தொழிலில் அலுப்புத் தட்டின ஓர் சமயம் திடீரெனறு கந்தசாமிக்கு இந்த மாதிரியான ஓர் எண்ணம் தோன்றியது.

இந்த முப்பது வருஷகாலத்தில் கந்தசாமிக்கு வாழ்க்கையின் இதர அமசங்களைப்பற்றி நினைத்துப் பார்க்கப் பொழுது இருந்தால் தானே! எந்தக் குழந்தை எநத மாதிரியான நகை போட்டுக் கொண்டு எங்கே தனிமையில் போகிறது? எநத பேர்வழி பர்ஸையும் பௌன்டன் பேனாவையும சுலபத்தில் எடுக்கும்படி ஜேபியில் போட்டுக்கொண்டு, கூட்டத்தைத் தள்ளிக்கொண்டு பஸ்ஸிலோ, டிராமிலோ ஏறுகிறான்? என்பதையே லக்ஷ்யமாகக் கொண்டிருக்கிறான்! எந்தெந்த வீட்டில் நுழைந்தால் எந்தெந்த மாதிரியான பொருள்கள் அகப்படும்? என்பதைக் கண்குத்தி பாம்பு மாதிரி பார்த்துக் கொண்டிருப்பதற்கும், அதன் பலனாய்க் கிடைத்தவைகளை எங்கெங்கே எப்படி எப்படி பேரம் செய்யலாம என்பதைபபற்றி யோசிப்பதற்கும், இதையெல்லாம் கண்காணித்து வரும் போலீஸ்காரனிடம் அகப்பட்டுக் கொண்டு செய்த காரியங்களுக்குப் பிராயச்சித்தமாக மாஜிஸ்டிரேட அளிககும் தண்டனைகளை அனுபவிப்பதறகும் தானே அவனுக்குப் பொழுது சரியாக இருந்தது! இதையெல்லாம் எதற்காகச் செய்கிறோம். ஒரு மனிதன் வாழ்க்கையில் அனுபவிககக்கூடிய அமசம் இது ஒன்றே தானா, இதர அம்சங்கள் ஏதாவது இருக்கின்றனவா என்பதைச் சிந்தித்துப் பார்க்க அவனுககு நேரம் எங்கே இருந்தது?

இப்படியாகக் கந்தசாமியின் வாழ்ககையில் முபபது வருஷ காலம் ஓடி மறைந்தது.

அன்று காத்தாயி மாத்திரம் எதிர்படாதிருந்தால் அவனுடைய வழக்கமான தொழிலிலிருந்து அவன் விடுதலை அடைந்தே இருக்கமாட்டான். வாழ்க்கையில ஒரு மனிதனுடைய பழக்க வழக்கங்களை மாற்றியமைப்பது சில சந்தர்ப்பங்களில் எதிர்பாராமல் ஏற்படும் சிறு சம்பவங்கள் தானே! அன்று காத்தாயி அந்தப் 'புண்ணியத்தை' ஏற்றுககொண்டாள.

ஜமீன்தாரின் குடும்பம் ஒன்று எக்ஸிபிஷனுக்குப் போயிருப்பது தெரிந்து கநதசாமி விரு விரு வென்று அப்படி இப்படிக திரும்பிக்கூடபபார்க்காமல் எக்ஸிபிஷனை நோக்கி நடந்துகொண்டிருந்தான் பழைய கந்தசாமியின் வேஷத்தில் இல்லை. ஒரு பிரபல மார்வாடி வேஷத்தில் தான். சென்ற வாரம்தான் ஒரு பங்களாவில் 'திருவிழா' நடத்தியிருக்கிறான் போலீஸ்காரர்கள் மூலைக்கொருவராய்ப் புலன் விசாரித்து வருகிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் பழைய கேடி கந்தசாமியின் வேஷததிலேயே சென்றால் போலீஸ்காராகள் சும்மா விடுவார்களா?

அந்த சமயத்தில்தான் காத்தாயி, தனது வருங் காலத்தை எந்த ரீதியில நிர்ணயிப்பது என்ற பிரச்னையில் மனதை ஈடுபடுத்தியவளாய் நடந்து வந்துகொண்டிருந்தாள். கந்தசாமியின் கவனமெல்லாம் எக்ஸிபிஷனில், காத்தாயியின் மனதெல்லாம் தனது வருங்கால பிரச்னையில் ஈடுபட்டிருந்தது. ஆகவே, நேருக்கு நேராக வந்த இருவரும் ஒருவர்மேல் ஒருவர் மோதிக்கொண்டனர்.

'டே! இது யாருடா இது சனியன்' என்று முகத்தை நிமிர்த்தினான் கந்தசாமி

'வழியிலே போறவங்க மேலே வந்து விழுந்ததில்லாமே சனியன் வேறயா? நன்னாத்தான் இருக்கு நாயம்!' என்று சொல்லிவிட்டு காத்தாயியும் தனது முகத்தை நிமிர்த்தினாள்.

வயது இருபது இருக்கும். மாநிறம், விசாலமான கண்கள். இளமைக்கேற்ற அங்க அவயவங்களின் எடுப்பு. ஆனால், ஏழ்மையின் பிரதிபலிப்பு.

கந்தசாமி ஒரு சிறிது தயங்கினான். அவனது வாழ்க்கையில் இந்தமாதிரியான—ஏன்-இதற்கும் மேலான அழகுள்ள பிரகிருதிகளை எத்தனையோ தரம் சந்தித்திருக்கிறான். ஆனால் அப்பொழுது அதெல்லாம் ஒரு விஷயமாகவே படவில்லை அவனுக்கு.

'யாரம்மா நீ? எங்கே போறே?' என்றான் கந்தசாமி. அவளைக் கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டே.

'நான் யாராக இருந்தால் உனக்கென்னவாம்?' என்றாள் காத்தாயி.

'ஒன்றுமில்லே, சும்மாத்தான் கேட்கிறேன.'

'சும்மா கேட்கிறவங்களுக்குப் பதில் சொல்ல நேரமில்லே அஞ்சு நிமிசம்கூடப் பொறுக்கமாட்டா அந்த மவராசி. தா, தைன்னு நிலையில் நிக்காமெ குதிப்பா' என்று சொல்லிக்கொண்டே காலைஎடுத்து வைக்க ஆரம்பித்தாள் காத்தாயி.

'எந்த மவராசி?' என்று இடைமறித்தான் கந்தசாமி

'அதோ தெரியுதே மஞ்சள் கட்டடம், அந்தப் பங்களாக்காரி தான்,' என்று ஒரு பங்களாவைச் சுட்டிக் காட்டினாள் காத்தாயி.

'அங்கே என்ன வேலை உனக்கு!

'என்ன வேலை? வேலைக்காரி தான்'

'உன் வீடு எங்கே இருக்குது?'

'ஏது எது? உன் வீடு எங்கே இருககுது? உனக்கு தாயார் தகப்பனார் இருக்கிறாங்களா? கலியாணம் ஆயுடுச்சா? புருசன் என்ன செய்யறான்? என்று எல்லா விவரமும் கேட்பேபோலி நக்கே!' என்று லேசாக சிரித்துக் கொண்டே சொன்னாள் காத்தாயி

அந்தச் சிரிப்பையும் கண்கள் குழைவதையும் பார்த்து அப்படியே சொக்கிப் போனான் கந்தசாமி

'ஏன், அதெல்லாம் கேக்கக் கூடாதா?'

கேட்டு என்ன ஆவணும்?' 'ஆக வேண்டியிருக்கத்தானே கேக்கறேன்.'

'எனக்குன்னு வீடு கீடு ஒண்ணுமில்லே அம்மா, அப்பா இறந்து போய்ட்டாங்க.'

ஆமாம் உன் புருசன்....என்று இழுத்துககொண்டே மேற்கொண்டு வாக்கியத்தை எப்படி முடிப்பதென்று தெரியாமல் திண்டாடினான் கந்தசாமி

'கலியாணமானாத்தானே புருசன்...என்று காத்தாயியும் வாக்கியத்தைப் பூர்த்தி செய்யாமலே தலையைத் தொங்கப்போட்டாள்

அதுக்குத்தானே கேட்டேன். கேட்டு எனன ஆவணுமின்னியே. தெரிஞ்சுதா இப்போ? என்று ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்தான் கந்தசாமி.

காத்தாயி பதில் சொல்லாமல் நின்றுகொண்டிருந்தாள்.

'ஆமாம், உன்பேரு என்னான்னு சொல்லலியே!'

'காத்தாயி' காத்தாயி, நீ கோபித்துக்கொள்ளா திருந்தால் நான் ஒண்ணு சொல்றேன் என்றான் கந்தசாமி.

'கோவமென்ன' என்றாள் காத்தாயி.

வந்தது வரட்டுமென்று மனதைத் திடப்படுத்திக்கொண்டு கந்தசாமி காத்தாயியின் காதில் ஏதோ இரகசியமாய்ச் சொன்னான்.

காத்தாயி பிரமித்துப் போனாள். கந்தசாமியை ஏற இறங்கப் பார்த்தாள். 'சரிதான். விளையாடறயா?' என்று நடக்க ஆரம்பித்தாள் காததாயி.

'இல்லே காத்தாயி நெசம்மா தான் சத்தியமாய்ச்சொல்றேன்' என்று அவளைப் போகவொட்டாமல் மீணடும இடைமறித்தான் கந்தசாமி.

'அடபாவி!. நீ ஒருமார்வாடி. நான் ஒரு ...' என்று மீண்டும் கந்தசாமியை ஒரு முறை தலை முதல் கால்வரை பார்த்தாள் காத்தாயி.

'பூ! தெரியுமே எனக்கு நீ ஏமாறுவாய் என்று. இதெல்லாம் ஏதோ ஒருகாரியத்துக்காக வேசம். நானும் உங்க வகுப்பைச் சேர்ந்தவன் தான்' என்றான் கந்தசாமி.

'எனக்கு நேரமாவுது' என்றாள் காத்தாயி.

'பங்களா வேலைக்கா? பூ! நான் சொலறபடி மட்டும் நடந்து கொண்டால் உன்னை ஒரு பங்களாவுக்கு எசமானியாக்குவேன் தெரியுமா? உன்னிடம் கொஞ்சம் தனியாகப் பேசனும், வா போகலாம்' என்றான் கந்தசாமி காத்தாயியும் அவளை அறியாமல் அவன் வார்த்தையில் ஒரு நம்பிக்கைவைத்து மந்திர சக்தியால் கட்டுண்டவளைப்போல் அவனைப் பின்தொடர்ந்தாள்.

* * * * *

இச் சம்பவம் நடந்த இரண்டு தினங்களுக்கெல்லாம் பீம



விலாஸ்' ஹோட்டல் முன்பு ஒரு டாக்ஸி வந்து நின்றது. அதிலிருந்து ஒரு மார்வாடியும் அவர் மனைவியும் இறங்கினார்கள். ஹோட்டல் முதலாளியிடம் சென்றார்கள்.

'பம்பாயிலிருந்து வருகிறேன். ஜவுளி வியாபாரி என் பெயர் கோகுல்சந்த். குடும்பத்துடன் தங்கவேண்டும். ஒரு மாதத்துக்கு ஒரு அறை வாடைகைக்கு வேண்டும்' என்றார் மார்வாடி.

முதலாளியும் பெயர், தொழில் விவரங்களையெல்லாம் குறித்துக்கொண்டு ஓர் அறையை வாடகைக்கு விட்டார்.

மறுநாள் மார்வாடியும் அவர் மனைவியும் கன குஷியாக ரூமில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

'இந்தப் போலீஸ் பசங்க நம்ம கிட்டே இனி என்ன செய்யமுடியும்னு கேக்கறேன். நெசம்மா சொல்றேன் காத்தாயி! உன்னைப் பார்த்தா அசல் மார்வாடிச்சி மாதிரியே இருக்கு' என்றான் மார்வாடி என்று சொல்லிக்கொண்டு இங்கே வந்து தங்கியிருக்கும் கந்தசாமி.

'நீங்க மாத்திரம். அசல் மார்வாடிதான். என்ன வேசப் பொருத்தம்?' என்றாள் காத்தாயி.

காத்தாயி. நிசம்மா சொல்றேன். இவ்வளவு ரூபாயையும் வைத்துக்கொண்டு இத்தனை நாள் நான் நடுங்கிச் செத்தது எனக்கல்லவோ தெரியும். நாம் இனி மார்வாடிகளாகவே இருந்துவிட வேண்டியதுதான். அறுபது ஆயிரத்துக்கு ஒரு பங்களாவை விலைக்குப் பேசிக்கிட்டிருக்கேன். அது முடிஞ்சதும் அங்கே போய் 'ஜம்' என்று காலத்தைக் கழிக்க வேண்டியதுதான் உன்னை ஒரு பங்களாவின் எசமானி ஆக்குகிறேன் என்று அன்று சொன்னேனே பார்த்தியா? 'இனி நம்மைக்கடவுளால்கூட அடையாளம் கண்டுபிடிக்க முடியாது' என்று கந்தசாமி தனது பழைய பிரதாபங்களையும வருங்காலத்தையும்பற்றி காத்தாயியினிடம் 'சவுல்' அடித்துக்கொண்டிருக்கையில், அறையின் கதவை யாரோ தட்டினார்கள்.

'யார் அது?' என்றான் கந்தசாமி.

'யாருமில்லை. கொஞ்சம் கதவைத் திறவுங்கள்' என்று பதில் வந்தது.

'சொன்னால்தான் திறக்கமுடியும்'.

'நான்தான் ஹோட்டல் முதலாளி.'

'என்ன இந்நேரத்திலே?'

'ஒன்றுமில்லை. ஒரு விஷயம் பேசவேண்டும்.'

கந்தசாமி எழுந்துவந்து கதவைத் திறந்தான். (மார்வாடி வேஷத்துடன்.)

ஒரு போலீஸ் ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர், ஸப் இன்ஸ்பெக்டர், மூன்று கான்ஸ்டபிள்கள், ஹோட்டல் முதலாளி ஆகியோர் வெளியே நின்றுகொண்டிருந்தார்கள்.

கந்தசாமி அசந்துவிட்டான். இருந்தாலும் சமாளித்துக்கொண்டு கொஞ்சம் மிடுக்காகவே நின்றான்.

'கோகுல் சந்த் என்பது நீங்கள் தானா?' என்று கந்தசாமியைப் பார்த்துக் கேட்டார் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்.

'ஆமாம்' என்றான் கந்தசாமி.

'பம்பாயிலிருந்துதானே வந்திருக்கிறீர்கள்?'

'ஆமாம்'.

'அங்கே ஜவுளி வியாபாரம் நடத்திக்கொண்டிருந்தீர்கள், இல்லையா?'

'ஆமாம்.'

'இப்பொழுது இங்கே எதற்காக வந்திருக்கிறீர்கள்?'

'வியாபார விஷயமாகத்தான்.'

சர்க்கிள் இன்ஸ்பெக்டர் தனது ஜேபியிலிருந்து ஒரு புகைப் படத்தை எடுத்துப் பார்த்தார்.' 'ஆதே பேர்வழிதான், சந்தேகமே இல்லை' என்று ஒரு தரத்துக்குப் பத்துதரமாகப் பார்த்து மனதைத் திடப்படுத்திக்கொண்டார்.

'அவனேதான்' என்றார் சப் இன்ஸ்பெக்டரும்.

பம்பாயை விட்டு இங்கே வந்து விட்டால் ஏமாற்றிவிடலாம் என்று பார்த்தாயா? நீங்களெல்லாம் ஒரு நாள் இல்லாவிட்டாலும் ஒரு நாள் அகப்பட்டுக்கொண்டேதான் ஆகவேண்டும்பா, கிளம்பு போலீஸ் ஸ்டேஷனுக்கு என்றார் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்.

கந்தசாமி ஒன்றும் புரியாமல் விழித்தான்.

கோகுல் சந்த் என்ற பேர்வழி பம்பாயில் பல கள்ளமார்க்கெட் வழக்குகளில் அகப்பட்டுக்கொண்டு இருப்பதோடல்லாமல், கள்ளத்தனமாக இரண்டு லக்ஷம் ரூபா மதிப்புள்ள தங்கத்தைக் கொண்டு வந்த குற்றத்தின் படி அகப்பட்டுக்கொண்டு தலை மறைவாக இருந்து வருவதும், தன் போலவே அவன் இருப்பதும் கந்தசாமிக்கு எப்படித்தெரியும்?

'சரி! தான் கோகுல் சந்த் அல்ல. எல்லாம் போலி வேஷம்' என்று சொல்லி மார்வாடி வேஷத்தைக் களைந்து கந்தசாமியாகக் காட்சி யளிப்பதற்கு ஆசை உண்டா?

தெய்வமே என்று தனது விதியை நொந்து மறு பேச்சு பேச வகையில்லாமல் போலீஸ்காரர்களைப் பின் தொடர்ந்தான் கந்தசாமி.

அட்டைப் படம்

★

"அல்லி இலையின் மீது பையன் உட்கார்ந்துகொண்டு மீன் பிடிப்பதாவது-ஊம், முழு அபத்தம்" என நீங்கள் எண்ணலாம். ஆனால். இந்த விசித்திரத்தை உண்மையென அமெரிக்க சர்க்கார் விவசாய ஸ்தாபனம் நிரூபித்துள்ளது. பிரத்தியேகமாக இம்மாதிரியான அல்லி இலைகள் தனிக்குளம் ஒன்றில் 'உற்பத்தி' செய்யப்படுகின்றனவாம். இலையின் அகலம் என்ன தெரியுமா- 53 அங்குலங்கள் இந்த இலை பையனைத் தாங்குவதுடன். அவன் பிடிக்கும் மீன்களையும் தாங்கக்கூடுமாம்.

அன்புள்ள கீதாவுக்கு

12

கவிகள் வர்ணனையில் வருகிறதே அந்தமாதிரி சந்திரனைப் போன்ற வட்டவடிவமானதல்ல. கொஞ்சம் நீண்ட முகம்தான் ஆனால் குதிரைமுகம் என்றும் சொல்லி விடமுடியாது அதாவது அந்த நீண்ட வடிவம அழகைக்குறைத்துவிடவில்லை அந்த விழிகள் மான்களினுடையதைப் போன்றதோ இல்லையோ தெரியாது. ஆளை விழுங்கும கண்கள் அது மாத்திரம் நிச்சயம். ஒரே ஒரு கடைக் கண் பார்வைபோதும். இநத ஆண் ஸமூகம் முழுவதும் அப்படியே தவித்துத் திண்டாடிவிடும. அதில் கொஞ்சம்மையும் தடவிக்கொண்டு வந்துவிட்டால், அனைவரும் மந்திர சக்தியால் கட்டுண்டதுகள் போல வைத்த கண்ணை எடுக்காமல் தவித்துப் பாகாய் உருகிவிடும். முல்லைச் சிரிப்பாவது, ரோஜாச் சிரிப்பாவது, முத்துக்கள்போன்ற அந்தப் பல் வரிசைகளைக் காட்டி, தாடையின் இரு புறங்களிலும் 'குழி' விழும்படி குழையக் குழையச் சிரிக்கும்போது நம்மைக்கூட என்னவோ செய்துவிடுகிறமாதிரி இருக்கும. நெற்றியின் இரண்டு பக்கங்களிலும் தவழ்ந்து விளையாடும் அந்த இரணடு சுருள் மயிர்கள் அவளுக்கென்று ரிஜிஸ்தர் செய்யபபட்ட ஒரு 'டிரேட் மார்க்கோ' என்று சந்தேகப்படும்படியாய் தனிப்பட்ட ரீதியில் இருக்கும். அந்தமாதிரி வருவதற்கு எந்த தைலத்தை உபயோகிக்கிறாளோ, எந்த தினுசில் வெட்டிவிடுகிறாளோ தெரியாது. பார்ப்பதற்கு அவ்வளவு அழகாக இருக்கும். கன்னங் கரேலென்று தலை நிறைய மயிர். அதிக பருமனுமில்லை. ஊசிமாதிரி ஒடிந்து விழுந்துவிடுகிற சரீரமுமில்லை. நடுத்தரமாக இருக்கும். அதிக உயரமுமில்லை. ரொம்ப குள்ளமுமில்லை. கழுத்தில் ஒரு வடம் செயின். வலது கையில் இரண்டு வளையல்கள். இடது கையில் தொளை போட்ட காலணா அளவுக்கு ஒரு கெடியாரம். காதில், பளிச்சென்று டால் வீசும் சிறிய வைரத்தோடு. 'சோளிபேட்டர்ன்' ஜாக்கெட், சில தினங்கள் சுவேத (வெள்ளை) வஸ்திரம், சில தினங்கள் அழகிய கெட்டிக் கரைப் புடவை, காலோடு கால் ஒட்டிக்கொள்கிறமாதிரி மெல்லிய பாதரக்ஷை.

என்ன. கவிதா பிரவாகம் பெருக்கெடுத்தோடுகிறதே என்று பார்க்கிறாயா? வஸந்தாவுடன் ஆஸ்பத்திரியில் அட்மிட செய்யப்பட்டிருக்கிறதே—பக்கத் தகத்து பத்மஜா—அவளைத்தான் சொல்கிறேன்.

பத்மஜாவுக்கு வயது 18 இருக்கும். பி.ஏ வகுப்பில் படிக்கிறாள். இன்னும் கல்யாணம் ஆகவில்லை. அவளுடைய பெற்றோர்களுக்கு பத்மஜா ஒரே பெண். செல்லத்துக்குக் கேட்க வேண்டுமா? எதுவும் அவள் இஷ்டம்.

பத்மஜா வந்துவிட்டாளென்றால் வீடே கலகலவென்று இருக்கும் ஹாஸ்யம் ஹாஸ்யமாகப் பேசி எல்லோரையும் குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைப்பாள். கள்ளங்கபடமே தெரியாது எல்லோருடனும் ஸகஜமாகப் பழகுவாள். நல்ல கெட்டிககாரி. நல்ல சமத்து.

'எல்லாம் சரிதான் ஸார். கல்யாணப் பேச்சை எடுததால் பிடி கொடுத்து வார்த்தை சொல்ல மாட்டேனென்கிறதே. அரசியலில் கலந்துகொள்ளப் போகிறதாம். சமூகசேவை செய்யப்போகிறதாம. மனதில் எதையோ நினைத்துக்கொணடு என்னமோ கன்னாபின்னாவென்று பதில் சொல்லிக்கொணடிருக்கிறது.' என்பார் எங்கள் மாமனாருடன் பத்மஜாவின் தகப்பனார்.

'இதோ எங்காத்தில் ஒன்று (வஸநதா) இல்லையோ? அதுவும் இப்படித்தான் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறது என்னமோ, இந்தக் காலத்துப் பசங்களின் போக்கே விசித்திரமாகத்தான் இருக்கிறது, என்பார் மாமனார்.

'கலியாணமே செய்துகொள்ளாமல் இருந்துவிடடாலும் பரவாயில்லையே. சொன்ன வார்த்தையையாவது காப்பாற்றின மாதிரி இருக்குமே. அப்படியும் இநக் காதுகள். அழகிய யௌவனமெல்லாம் கழிந்து கிழடு

தட்டுகிற சமயத்தில் 'ரிஜிஸ்டர் விவாகம் என்று முன்பின் தெரியாத எவனாவது ஒரு கிழவனைக் கலியாணம் செய்துகொண்டு, பிறந்தகத்தையும் புக்ககத்தையும் துறந்து பலவித கஷ்டங்களுக்கு ஆளாகுங்கள். தீர்க்காலோசனை கிடையாது' என்பார் இவர்.'

'இருக்கட்டும், இருக்கட்டும். எந்த மட்டில் போய்நிற்கிறதோ நிற்கட்டும்.' என்று சொல்லிக்கொண்டே எழுந்துபோவார் பதமஜாவின் தகப்பனார்.

எதற்காகச் சொல்கிறேனென்றால், மாமனார் மாமியார், அகமுடையான் என்ற நிர்ப்பந்தம் ஒன்றும் கிடையாதா? வீட்டிலும் கண்டிப்பவர்கள் கிடையாது. மனம்போனபடி திரிந்துகொண்டிருக்கிறதுகள்.

ஒரு உத்ஸவமோ, டிராமாவோ, சினிமாவோ, சங்கீதக் கச்சேரியோ, எதுவும் இதுகள் இல்லாமல் நடைபெறவே பெறாது. எங்காவது ஒரு விசேஷம் என்றால் கும்பலாக டிரெஸ் செய்துகொண்டு கிளம்பிவிடுங்கள். இப்படித் தான்தோன்றியாய்த் திரிகிறதுகளா? இதுகளைப்பார்த்துவிட்டு நாடோடியாய்த் திரியும் ஆண்கள் கோஷ்டியொன்று இதுகளைச்சுற்றிச் சுற்றி வந்து 'காதல் கீதம்' பாடும். அதுகளுடைய அசட்டுத்தனத்தைப்பார்த்துவிட்டு இதுகள் சிரித்துக்கொண்டே போய்க்கொண்டிருக்கும். இந்தச்சிரிப்பை அதுகள் தப்பர்த்தம்செய்துகொண்டுவிடுங்கள்.

இந்த ரீதியில் ஏற்பட்ட தவறுதான் பத்மஜாவுக்கு கோபாலன் கடிதம் எழுதினதும்.

பத்மஜா, கள்ளங்கபடம் இல்லாமல் எல்லோருடனும் ஸகஜமாகப பழகிக் கொண்டிருக்கிறாளா? இதைப்பார்த்துவிட்டு கோபாலன் தப்பர்த்தம் செய்துகொண்டுவிட்டான். மேலே நீர் பூத்திருக்கிறது. உள்ளே தணல் காய்ந்து கொண்டிருக்கிறது என்று தெரியாமல் நடந்துகொண்டான். சுரீரென்று சுட்டுவிட்டது.

இது கோபாலனுக்குப் பெரும் கோபத்தை உண்டுபண்ணிவிட்டது. 'அப்படியா ஸமாசாரம்! ஆகட்டும் விட்டேனா பார் உன்னை? இதற்குச் சரியான படி சூடு போட்டு வைக்காவிட்டால் என் பெயர் கோபாலனல்ல' என்று அப்பொழுதே தீர்மானித்துவிட்டானாம்.

எப்படியிருக்கிறது வேடிக்கை! கல்லூரியில் படிக்க வரும் பெண்களுக்குக் காதல் கடிதம் எழுதிப் போட வேண்டியது. அதற்கு இணங்காவிட்டால் 'விட்டேனா பார்' என்று சவால் விட வேண்டியது! நல்ல உலகம்! நல்ல படிப்பு!

அப்புறம் 'இவர்' மாமனாரிடம் சொன்னதைச் சொல்கிறேன் கேள்.

அதே கல்லூரியில் அதே வகுப்பில் காஞ்சனா என்று ஒரு பெண்ணும். அதனுடைய 'குலம்' கோத்திரம்' யாருக்கும் தெரியாதாம். தகப்பனார் கிடையாது வயதான தாயாரும் அதுவும் ஓரிடத்தில் இருந்து வந்தார்களாம்.

காஞ்சனாவுக்கு வயது 19 இருக்குமாம் பார்ப்பதற்கு மூக்கும் விழியும் நன்றாக இருக்குமாம். காஞ்சனா வருகிறாளென்றால் கல்லூரிப் பசங்களுக்கெல்லாம் ஒரே குஷிதானாம். அவளுடைய

நடையே ஒரு அலாதியாம். குலுக்கி மினுக்கி, அந்தக் கண்களை நாலா பக்கங்களிலும் பார்த்தாளானால், படிப்பு ஒன்றுதான் தங்கள் உலகம் என்று குடுமி வைத்துக்கொண்டுவரும் அப்பாவிப் பசங்கள் கூட ஒரு க்ஷண நேரம் இன்னதென்று சொல்லத் தெரியாமல், இந்த உலகத்தையே மறந்து தவித்துத் திண்டாடுங்களாம் இதுகளின் 'பாடே' இப்படியிருந்தால் 'மைனர்'களின் போக்கைப்பற்றிக் கேட்கவேண்டுமா? ஒரே கலாட்டாதானும்.

கோபாலனுக்கும் காஞ்சனுவுக்கும் ரொம்ப சினேகமாம்.

இதென்ன, வஸந்தா பத்மஜா, காஞ்சனு ஒரு பிள்ளை எத்தனை பேருடன்தான் சினேகம் செய்யுமாம். என்று கேட்கிருயா?

அதுதான், முன்னேறிவரும் இந்த நவயுகத்தின் விசித்திரம். ஆனுல் எழுதும் காதல் கடிதங்களிலோ, 'நீதான் என்னுடைய உலகம். ஸகலமும் நீதான்! என்றுதான் எழுதுங்கள். இந்த மாதிரி எத்தனையோ பேருக்கு எத்தனையோ கடிதங்கள்! முன் காலமா, அசடுகள்' காலாகாலத்தில் கல்யாணத்தைப் பண்ணிக் கொண்டு, குடும்பம், குடும்பம், என்று 'ஏகபத்னி' விரதம் அனுஷ்டிப்பதற்கு? இது முன்னேறிவரும் உலகம் பார்!

நானும் வேண்டாம் வேண்டாம் என்று பார்க்கிறேன். எப்படியோ பழங் காலத்துப் பழக்க வழக்கங்கள் குறுக்கே வந்து நடு நடுவே இந்தமாதிரி எழுதும்படி நேர்ந்துவிடுகிறது. ஒன்று சுத்த பழம் பசலியாகவே இருந்துவிட வேண்டும். அல்லது தீவிர 'சீர் திருத்த வாதி'யாக இருந்துவிட வேண்டும். 'இரண்டுங் கெட்டானுக' இருந்தால் இப்படித்தான்.

கோபாலனுடன், தனது உயிரையே அர்ப்பணம் செய்துவிட்ட மாதிரி சினேகம் செய்துவந்த காஞ்சனு திடீரென்று ரங்கராஜன் என்ற வேருெரு பையனுடன் சினேகம் வைத்துக் கொள்ள ஆரம்பித்துவிட்டாள். கோபாலன் முதலில் இதை அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லையாம். காலேஜில் படிக்கும் பசங்கள் அப்படித்தான் எல்லோருடனும் சகஜமாகப் பழகுங்கள். இந்தப் பழக்கமெல்லாம் வெறும் பேச்சோடு மட்டும் தான் இருக்கும். காதல் என்ற ரீதியில் பழகுகிற பழக்கம் யாராவது ஒருவனுடன்தான் இருக்கும். ஆகவே காஞ்சனு, ரங்கராஜனுடன் பழகும் தோரணை காதல் ரீதியில் இராதென்று நினைத்தானும். ஆனுல் போகப்போகக் கவனித்துக்கொண்டு வந்ததில் தான் நினைப்பது தவறு என்று நினைக்கும்படியான தகவல்கள் சில இவன் காதுகளுக்கு எட்டினவாம்.

உடனே அவ்வளவுதான்! காஞ்சனுவுக்கு இறுதி எச்சரிக்கை செய்து ஒரு கடிதம் எழுதினுனும். இனியும் ரங்கராஜனுடன் பழகினுல் விபரீதத்தில் தான் வந்து முடியும் என்று அதில் எழுதியிருந்தானும்.

மறுநாள் காஞ்சனு கொலை செய்யப்பட்டிருக்கிருள். அவளுடைய மேஜையின்மேல் கோபாலன் எழுதிய கடிதம் இருந்ததாம். அது போலீஸ்காரர்கள் கையில் அகப்பட்டு விட்டதாம்.

மற்றவை அடுத்த கடிதத்தில்.

உன் அன்புள்ள,

ரமா.

மெய்விளங்கிய அன்பர்கள்

பெரியபுராணப் பூஞ்சோலையில்

பி.ஸ்ரீ.

45

நந்தனாரும் திருப்பாணாழ்வாரும்

★

'கடினமான நிலத்தைப் பிளந்து உழுது பயிரிடும் உழவன் பக்கத்திலும் கற்களை உடைத்துப் பாதை அமைக்கிறவன் பக்கத்திலும் இருப்பான் அவன். அவர்களோடு வெயிலிலும் மழையிலும் தன்பொன்னுடை (பீதாம்பரம்) புழுதிபடியக் கலந்திருப்பான்!' என்கிறார் வங்க நாட்டுக் கவீந்திரரான ரவீந்திரநாத தாகுர் தமது கீதாஞ்சலியிலே. மேலும் இத்தகைய பகவானை நோக்கி 'பரம ஏழைகளும் மிகமிகத் தாழ்ந்தவர்களும் பிறரால் கைவிடப்பட்டவர்களும் இருக்கும் இடமன்றோ உன் திருவடி நிலை?' என்கிறார் இக்கவியரசர்.

இக்கருத்தை ஒருவாறு வெளியிட்டிருக்கிறார் அழகிய மணவாள தாசர் என்ற திவ்யகவி பிள்ளைப் பெருமாளையங்காரும் தமது திருவரங்கப் பெருமாளை.

அற்றவர்சேர் திருவரங்கப்பெருமாள்

அதாவது வேறு கதி இல்லாதவர்கள் யாவரும் வந்து அடையும் அல்லது அடையக்கூடிய ஸ்ரீ ரங்கநாதன்—என்று குறிப்பிடும்போது.

கவி ரவீந்திரரும் திவ்யகவி பிள்ளைப் பெருமாளையங்கார் முதலானவர்களும் மேலே சொன்னபடி வெளியிட்டிருக்கும் உண்மையை எவ்வளவு நன்றாக விளக்குகின்றன நந்தனார் கதையும் திருப்பாணாழ்வார் கதையும்!

நந்தனாரைப்போல் 'ஹரிஜன'த் தொண்டர் திருப்பாணாழ்வாரும் ஆழ்வாரின் பெயரே இவர் பாணர் வகுப்பைச் சேர்ந்தவர் என்று காட்டிக் கொடுக்கிறது நந்தனார் 'பறையர்' வகுப்பைச் சேர்ந்தவர். இருவகுப்பினரும், 'இழிகுல'த்தவராகக் கருதப்பட்டனர் இந்த இரண்டு வகுப்புகளும் காலப்போக்கில் தாழ்ந்தும் தாழ்த்தப்பட்டும் இருக்கவேண்டும்.

தமிழ்நாடு பொதுவாக மகோன்னத நிலையில் இருந்த காலத்திலும் இந்த வகுப்பினர் ஊர்களுக்கு வெளியே ஒதுக்குப்புறமாயக் குடியிருந்தார்கள் நாட்டில் செல்வம் பொங்கிப் பொழிந்த காலத்திலும் இவர்கள் பரம ஏழைகளாய்க் கஷ்ட ஜீவனம் செய்து வந்தார்கள்

பாணர்களுக்குப் பசி தீர்ப்பதையும் அக்காலத் தமிழ் அரசர்கள் தங்களுடைய முக்கியமான கடமைகளில் ஒன்றாகக் கொண்டிருந்தார்கள் (ஏனென்றால் பாணர்கள் யாழ்கொண்டு பாடுவதிலும் ஆடுவதிலும் பழக்கமுள்ளவர்கள்) இந்த வகுப்பினரின் இதயப்பசி தீர்க்கும் விஷயமாகவும் ஒரு காலத்தில் ஒருவிதமாகச் சைவ வைஷ்ணவ சமயங்கள் கவலைகொண்டன. கவனம் செலுத்தின—என்று ஊகிக்கலாம். இம்முயற்சிகள். அங்கே ஒரு நந்தனார் இங்கே ஒரு திருப்பாணாழ்வார் இங்கே ஒரு நம்பாடுவார், அங்கே ஒரு நீலகண்ட யாழ்ப்பாணர் என்றபடி சில பக்தர்களைத்தான் தோற்றுவித்தன; குறித்த வகுப்புகளைப் பொதுவாக முன்னேற்றம் அடையச் செய்துவிடவில்லை.

எனினும் நந்தனார். திருப்பாணர் முதலானவர்களின் கதைகளும் பக்தியனுபவங்களும் தற்காலத் தமிழர்களான நமக்கும் வழிகாட்டத்தக்க சில உண்மைகளை வெளியிடக்கூடும். நந்தனாரும் திருப்பாணரும் எத்தனையோ கஷ்டங்களுக்கும் வசதிக்குறைவுகளுக்கும் இடையே எவ்வளவு உயர்ந்த லட்சியத்தை மனக்கண்முன் வைத்துக்கொண்டு வெற்றி கண்டார்கள்!

ஒரு சமயம் நந்தனாரையும் திருப்பாணாழ்வாரையும் ஒப்பிட்டு ஒரு நண்பரிடம் பேசிக்கொண்டிருந்தபோது அவர் 'நந்தனார் செய்த அக்னிஸ்நானத்தைத் திருப்பாணாழ்வாரும் மானஸிகமாயாவது அனுபவித்துத்தான் இருக்கவேணும்' என்றார். அதற்கு நான் 'அக்கினி ஸ்நானத்தை நந்தனாரும் மானஸிகமாகவே அனுபவித்திருக்கக்கூடும்' என்று பதில் சொன்னேன் சுந்தரமூர்த்திநாயனார் காலத்திலும நம்பியாண்டார் நம்பி காலத்திலும் நந்தனார் அக்கினிப் பிரவேசம் செய்த கதை வழங்கியிருக்குமென்று தோன்றவில்லை என்றும், சேக்கிழார் பெருமானின் காலத்தை ஒட்டித்தான் நந்தனார் நெருப்பிலே மூழ்கிய கதை தோன்றியிருக்கக்கூடும் என்றும் சொன்னேன். பழைய நந்தனாரின் கதை திருப்பாணாழ்வாரின் கதைபோல் இருந்திருக்கக்கூடுமென்று நண்பரிடம் கூறினேன்

நந்தனாரும் திருப்பாணரும் இறைவனின் அருளில் அசையாத நம்பிக்கை கொண்டவர்கள் பேராசை' கொண்டவர்கள ஸ்ரீ ரங்கநாதனின் அருள்பெற்றுத் திருப்பாணர் முனிவாகனராய்—அதாவது லோகசாரங்க முனிவர்தோள் மீது—ஸ்ரீரங்கத்தில் ஆலயப்பிரவேசம் செய்தார் என்பது ஸ்ரீவைஷ்ணவ குருபரம்பரைக்கதைகள் ஒருமுகமாய்ச் சொல்லும் கதை ஏறக்குறைய இதே ரீதியில் நம்பியாண்டார் நம்பியும் 'அம்பலத்தான் அருள் பெற்று

நாளைப்போவான்.... தன் புன் புலை போய் மூவாயிரவர்கைகூப்ப முனி' ஆனதாகக் கூறுகின்றார்.

இறையருளும் இந்த அடியார்களின் பக்திவிசுவாசமும் தான். 'தாழ்குலத்தினரென்றுகருதப்பட்ட நந்தனாரையும் திருபாணரையும் மறைவரும் வணங்கும் முனிவராக்கிவிடுகின்றன. இத்தகைய சரித்திர விதையிலிருந்துதான் நந்தனாரின் திவ்யசரித்திரமும் சுந்தரமூர்த்தி நாயனாரின் திருத்தொண்டத் தொகைக்குள் முளைகாட்டி நம்பியாண்டார்நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியில் தளிரோடிப் பெரிய புராணத்திலே வளர்ந்து இலை வீசுகிறது; கோபால கிருஷ்ண பாரதியாரின் சரித்திரக் கீர்த்தனையிலே மேலும் வளர்ந்து காண்கிறது

ஆழ்வார், நாயன்மார்களின் காலத்திலும் பிறப்பால் உயர்வு தாழ்வு கருதுவது வழக்கமாயிருந்தபோதிலும் பக்திப் பெருந் தீயில் வேற்றுமைகளெல்லாம் வெந்து நீறாகிவிட்டன ஸ்தூலமாகவும் அக்கினிப பிரவேசம் செய்தால்தான் ஞானப் பிறவி கிடைக்கும் என்ற கொள்கை அந்தப் பெரும் பக்தி யுகத்தில் இருந்திருக்கவேண்டிய அவசியமில்லையென்பதற்குத் திருபபாணாழ்வாரின் கதையே ஒரு சான்றாகும். சிவநேசர்களிலும் திருநீலகண்ட யாழ்ப்பாணர் முதலானவர்களின் கதைகளை ஆராய்ந்து பார்த்தாலும் என்னுடைய அபிபபிராயம் உறுதிப்படுமென்றே தோன்றுகிறது

இது சரியென்று கருதப்பெற்றால், நந்தனாரைச் 'சைவத் திருப்பாணாழ்வார்' என்றும், திருபபாணரை 'வைஷ்ணவ நந்தனார்' என்றும் சமரச நோக்குள்ளவர்கள் மதித்து மகிழக்கூடும். இருவரும் 'சேரி' வாசிகள்; இருவருள்ளத்திலும் 'சேரி' இடம் பெறவில்லை இருவரும், சேக்கிழார் பெருமானின் அருமையான தமிழ் வாக்கிற்கு இணங்க,

சிறந்த பெருங் காதலினால்
செம்மைபுரி சிந்தையர்

சில சில்லரை அம்சங்களில்கூட இவ்விரு பெருந் தொண்டர்களின் கதைகளினிடையே ஒற்றுமை காணலாம். திருபபாணர் தூரத்திலே ஸ்ரீரங்கநாதனின் சன்னிதியை நோக்கி நின்று பாடிக்கொண்டிருந்தாரென்றால், நநதனார் திருப்புன்கூர் முதலான சிவக்ஷேத்திரங்களை யடைந்து சன்னிதிக்கு எதிரே நின்று பிரார்த்தித்துக்கொண்டிருந்தார் திருப்பாணர் யாழ்கொண்டு பாடினாரென்றால், நந்தனார் சிவாலயங்களிலுள்ள பேரிகைக்கும் யாழுக்கும் வீணைக்கும் தோல், வார், நரமபு முதலியன கொடுத்து உதவி வந்தார் என்று பெரியபுராணம் தெரிவிக்கிறது.

சிதம்பர தரிசனம் நந்தனாரின் பக்திப் பெருநோக்கு. ஸ்ரீரங்கதரிசனம் திருப்பாணரின் பக்திக காதல்.

அப்பதியின் மதிற்புறத்தின்
ஆராத பெருங்காதல்
ஒப்பரிதாய் வளர்ந்தோங்க
உள்ளுருகிக் கைதொழுதே

[அப்பதி—அந்தச் சிதம்பரம் ஆராத—அடங்காத] என்று சேக்கிழார்சுவாமி உள்ளுருகி உரைக்கின்றார் நநதனாரின் சிதம்பர பக்தியை. இத்தகைய பக்திக்காதல் திருப்பாணருக்கும் ஸ்ரீரங்கத்தை நோக்கி வளர்ந்தோங்கியதென்றும், இவரும் உள்ளுருகித் தொழுது பாடிக்கொண்டிருந்தாரென்றும் ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரைக கதைகள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீ ரங்கநாதரும் தில்லை நடராஜரும கனவில் வருவதாக இரண்டு கதைகளும் கூறுகின்றன நடராஜர் தில்லைவாழ் அந்தணர்களின் கனவிலும் வருகிறார். நந்தனார் கனவிலும் வருகிறார். ஸ்ரீ ரங்கநாதர் அந்தணரான லோகசாரங்க முனிவர் கனவில் மட்டும வருகிறார் நடராஜர் நந்தனார் கனவில இளநகையரும்பி வந்தார் ஸ்ரீ ரங்கநாதர், திருப்பாணரைக் காயப்படுத்திய கலலெறியைத் தாமும் அனுபவித்து இரததம் வடிய வநதார். லோகசாரங்க முனிவர் கனவிலே

இத்தனை ஒற்றுமைகள் பெரிய புராண நந்தனார் கதைக்கும் ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரைத் திருப்பாணர் கதைக்கும் இடையே காணப்படுகின்றன இபபடியே 'நந்தனார் சரிததிரக் கீர்த்தனை'யில் வரும் நந்தனாரின் பக்தியனுபவங்களுக்கும் திருப்பாணர் கதையிலும் பாடல்களிலும இப்பாடல்களின் வியாக்கியானங்களிலும் பிரஸ்தாபிக்கப பெறும் பகதியனுபவங்களுக்கும ஒற்றுமையுண்டு.

பெரியவன் யார் ?

'பெரியவன் யார்?' என்ற கேள்விக்குக கீர்த்தனை ஆசிரியர் ஆதனூர் வேதியன் வாயிலாக விடை கூறுகிறார்.

பாருக்குள் வீடுகள்,
மாடுகள், ஆடுகள்,
பணமிருந் தால் அவன்
பெரியவன் ஆவனோ ?

என்ற கேள்வி அன்றும் இன்றும் உள்ள முதலாளி வர்க்கத்திற்கே ஒரு பெரிய கேள்விதான் சாதிச் செருக்கு உள்ளவர்களுக்கும் இது ஒரு பெரிய கேள்வி நல்லவர்களான நந்தனார் போன்ற பகதர்களே பெரியவர்கள் என்று காட்டுகிறார் கோபால கிருஷ்ண பாரதியார்.

இதே கருத்தைத்தான் ஸ்ரீவைஷ்ணவ ஆசிரியர்களும் திருபபாணர் கதையில் வற்புறுத்துகிறார்கள்

காண்பனவும் உரைப்பனவும்
மற்றொன்(று) இன்றிக்
கண்ணனையே கண்டுரைத்த
கடியகாதல்—
பாண்பெருமாள்

என்று ஸ்ரீவேதாந்ததேசிகர் போற்றுகிறாரே, இந்தத் திருப்பாணர் போன்ற பகதர்களையே பெருமாளுககுச் சமானமான பெரியோர் என்று வைஷ்ணவ உலகம் போற்றுகிறது.

சிதம்பரம் கோவிலைக கண்டதுமே நநதனார் சித்தம் உருகிப் பக்தி வெள்ளமாக

ஐயா உன் சன்னிதியோ ?—காண
ஆசைகொண்டு வந்தேன் நேச
முடன்.

என்கிறார்

வருகலாமோ ஐயா ! உன்தன்
அருகில் நின்று கொண்டாடவும்
பாடவும் நான்
வருகலாமோ ஐயா !

என்று பெருமானையே கேடகிறார்.

'கேள்வி முறைஇல்லையோ? நாதா!'
என்றே தலைகுனிந்தார்:-என்தன்
வேதனையைக் கண்டு, ஆதரிக்கும்
தெய்வம் கிடையாதோ ?

என்றும் கேடகத் துணிகின்றார். இது திருப்பாணாழ்வாரின் பக்தித் துடிபபும்தான்

இந்த இருபெரும் பக்தமணிகளும் இன்றைய நமககும் உயர்ந்த லட்சியத்தைக காட்டுகிறார்கள்

வேதனையைக்கண்டு, ஆதரிக்கும்
தெய்வம் கிடையாதோ ?

என்ற கூக்குரல் இன்றைய சமுதாய இதயத்திலிருந்தும் கிளம்புகிறது ; ஊர் எட்ட, உலகு எட்டக் கேட்கிறது 'தெயவம் கிடையாது' என்று முரட்டுத்தனமாய்ச் சொல்லிவிட்டால் போதுமா ?



[சென்றவாரத் தொடர்ச்சி]

மூர்த்தி:—காசியில் எம். எஸ். சி படிக்கும் மாணவன்.

ஜானகி:—அவன் தாய்.

ருக்குமணி:—மூர்த்தியின் நண்பன் மகாலிங்கத்தின் தங்கை.

மூர்:—நானும் போகட்டுமா? வண்டி வரக்காணுமே...

ஜா:—காசிம் இருந்திருக்கமாட்டான். அதோ ஏதோ வண்டிச் சத்தம் வழிமறிக்கலாம்!

மூர்;—யாராவது உட்கார்ந்திருந்தால் அதில்?...மறிக்க முடியுமா?

ஜா:—சரி...போய்க்கூப்பிடு நீயே, ஒரு வண்டி!... ஆமாம்... மாலதிக்குக் கொடுத்திருக்கிறரே இரண்டு. புத்தகங்கள்...அவள் மாமா...பெட்டியிலேயா...பையிலேயா? எதிலே வைத்திருக்கிறுய்?

மூர்;—அந்தப் பையில்தான்!...(சிரிக்கிறுன்)

ஜா:—அவள் படிப்பு எப்படியிருக்காம் அங்கே?

மூர்:—எனக்கென்ன தெரியும்? (சிரிக்கிறுன்),

ஜா:—இந்த ஊரிலே பி ஏ இல்லையா? பி எஸ் சி. இல்லையா? அத்தனை தூரம் ஒரு பெண் போகாவிட்டால் என்ன?

மூர்:—அவள் அத்தை அங்கே பெண்கள் கல்லூரியில் புரொபஸர் அதனுல்தான் நல்ல பங்களாவில் சுகமாக இருக்கிறுள் அங்கே......

ஜா:—நீ போய்ப் பார்த்திருக்கிறுயா அங்கேயே?

மூர்:—போகாமலென்ன? அனுமதியோடுதான்!...... பெருந்தொல்லை, (சிரிக்கிறுன்) அந்த அல்லி அரசாணி ராஜ்யத்தில் நுழைகிறதற்கு! அதோ......ஜட்கா......

ஜா:—கூப்பிடு பலக்க!

மூர்:—யாரோ உள்ளே இருக்கிறுப்போல் இருக்கே!

ஜா:—அதோ, நம் வாசலிலேயே நிற்கிறதே!

மூர்:—யாரோ இறங்குகிறுர்கள்—ஆ!......அதோ...... ருக்கு!

ஜா:—ருக்மணியா?......வாம்மா! மூர்த்தி புறப்படும் நேரமாச்சு! நீ இன்னும் கிண்ணிகளைக் கொண்டு வரவில்லையே என்று ரொம்பக் கவலையாப் போச்சு! நல்ல வேளை வந்தாய்.

மூர்:—அம்மா, நான் போய் இந்த வண்டியையே பேசி விட்டு நிறுத்திவைக்கிறேன் (வெளியில் செல்கிறுன்)

ஜா:—பார், உனக்காகவே இவள் வண்டி கொண்டு வநதாற்போலாச்சு! (ருக்குமணி நுழைகிறுள்)

ஜா:—எங்கே கிண்ணிகள்?—வண்டியில் மறந்து வைத்துவிட்டாயா என்ன?

ருக்:—இல்லை மாமி!......கடைசியில் யோசனை செய்தோம்—அனுப்பவேண்டாம் என்று விட்டாள் அம்மா. இந்த மேஜை விரிப்புத்தான் அனுப்புகிறேம் அண்ணுவுக்கு— (சிரிக்கிறுள்)

ஜா:—நீலத்துணியில் இந்த ரோஜாப்பூ வேலை ஜோராயிருக்கே! யாருடைய வேலை? உன்னுடையதுதானே?

ருக்:—அதனுல்தான் தாமதம் மூன்று நாளாக இரவும் பகலுமாய்ப் போட்டேன். இப்போதான் அரைமணி முன்னே முடிந்தது. வண்டியில் ஏறுமுன் ஒருவார்த்தை சொன்னுன் லிங்கம்—மேஜை விரிப்பைப்பற்றி! உங்க பிள்ளை மூணுநாள் தாமதமாகப் போவதால்தான் என் அதிர்ஷ்டம், எப்படியோ இதைப்போட்டு முடிக்கவும் முடிந்தது கனமென்று மறுக்கமாட்டீர்களே! (சிரிக்கிறுள்)

ஜா:—அழகுதாண்டி! இது ஒரு கனமா? மறுக்கவும் முடியறதா நண்பர்கள் வேண்டுகோளை! மூர்த்திக்குத் தன் சாமான்களைவிட பிறத்தியாருக்காகத் தூக்கிச் செல்லும் மூட்டைதான் அதிகம் ஒரு பை நிறைய!

ருக்:—கோபாலய்யர் தந்த தேங்காயெண்ணெய்தான் மறுத்துவிட்டீர்களாம்! அதனுல்...

ஜா:—அதனுல் கோபமாக்கும் அவருக்கு!

ருக்:—கோபமில்லை இப்போ அந்த சீசாவை நேராக சென்ட்ரல் ஸ்டேஷனுக்குக் கொண்டு போய். அங்கே உங்கள் பிள்ளை உட்காரும் ரயில் பெட்டியில் பெஞ்சுக் கடியில் வைத்துவிடப் போகிருராம்! எப்படிக் கொண்டு போகமாட்டான் பார்க்கலாம் என்கிருர்.

ஜா:—அட பிராமணு!

ருக்:—அப்படியேதான் செய்யப் போருராம்! புறப் பட்டுவிட்டார்!

ஜா:—ஓஹோ அப்படியா? மூர்த்தியிடம் சொல்லி வைக்கிறேன் அவன் அப்பா ஸ்டேஷனிலிருந்து வரும் போது. அவரண்டை கொடுத்தனுப்பிவிடச் சொல்கிறேன்! பார்ப்போம் ஒரு கை! கோபாலய்யர் கைக்கே எண்ணெய் திரும்பிவிடும் ராத்திரி ஏழு மணிக்குள்! உம். அவர் பிள்ளை காசி ஆயுர்வேதக்காலேஜில் படிக்கிருனே, தலையில் சொட்டை விழுந்திருக்காமோ இங்கிருந்து 'ஸ்பெஷல்' தேங்காயெண்ணெய் அனுப்ப!

ருக்:—ஓரியண்டல் காலேஜில் ஸம்ஸ்கிருதம்னு படிக்கிறது அந்த வைதிகம்! ரொம்பக் கெட்டிக்காரனும்! சொட்டை கூட விழுந்திருக்கலாம்! மாலதியின் மாமாவும் இரண்டு பெரிய புஸ்தகங்கள் அவளுக்காக ஸ்டேஷனுக்குக் கொண்டு வந்து கொடுக்கப் போகிருரென்று பேச்சு.

ஜா:—இன்னும் இரண்டா?...இங்கே இரண்டு கொண்டு வந்தாரே!

ருக்:—அப்படியானுல் அதுவாகத்தான் இருக்கும். இங்கேயே கொண்டு வந்திருப்பார்,

[மூர்த்தி வருகிருன்]

மூர்:—அம்மா. வண்டி பேசியாச்சு! புறப்படட்டுமா?

ஜா:—சரி. இவன் கையிலிருக்கிறதையும் எடுத்து வை—எங்கே கொடும்மா என்னிடம் ரொம்ப அழகாயிருந்துதுடி?... (வாங்கப் போகிருள்)

மூர்:—அப்படியானுல் இதை அழகாக பெட்டியில் வைத்துத்தான் எடுத்துப்போகவேண்டும்! (வாங்கப் போகிருன).

ஜா:—இப்போ போய்ப் பெட்டியைத் திறப்பானேடாப்பா வண்டிக்காரன் பார்க்கணுமா பெட்டிக்குள்ளிருக்கிற சாமான்களை! காசிம்கூட இல்லை....யாரோ புது ஆள் எங்காவது சந்துபொந்துக்குள்ளே வண்டியை ஓட்டி கொள்ளையடிச்சால்?

ருக்:—இவ்வளவு பயமா, மாமி. உங்களுக்குப் பட்டணத்து ஜட்காக்காரர்களைப்பற்றி!

மூர்:—ஆனுல் ஹோல்டாலுக்குள் புகுத்திவிடுகிறேன். (வாங்கிக்கொள்கிருன்).

ருக்:—கசங்கிவிடாதா அப்படிச் சுருட்டினுல்? கித்தான் பையிலேயே வைத்தால் பத்திரக்குறைவா என்ன?

ஜா.—அதைத்தான் நானும் கேட்கிறேன் இதோ, இங்கே கூடத்து மூலையில் இருக்கிறது.

மூர்:—சரி. அம்மா டிபன் செட்டை கொண்டு வந்து விடுகிருயா போய்?

ஜா:—ஆமாண்டாப்பா!... மறந்தே போய்விட்டேன். சமையற்கட்டுலேன்னு இருக்கு! (போகிருள்)

மூர்:—கிண்ணிகள் எங்கே? பெட்டியில் அதுக்காகவே இடம் விட்டிருக்கிறேன் (திறக்கப்போகிருன்.)

ருக்:—கிண்ணிகள் எதுவும் இல்லை (சிரிக்கிருள்)

மூர்:—ஏன்?

ருக்:—அதெல்லாம் என் பாசாங்கு இந்த மேஜை விரிப்பைக் கொடுப்பதற்காக! நன்ருயிருக்கா இது!

மூர்:—பேஷாக! ஆனுல் மகாலிங்கத்தின் மேஜைக்கு இதன் அளவு சின்னதாயிருக்கும்போலிருக்கே!

ருக்:—உங்கள் மேஜைக்குச் சரியாயிருக்குமா? (சிரிக்கிருள்)

மூர்:—ஹாஸ்டல் மேஜைகளெல்லாம் ஒரே அளவு தானே இருக்கும்! (சிரிக்கிருன்)

ருக்:—அப்படித்தான் நானும் கேட்டேன் அண்ணுவை! உங்கள் மேஜை கொஞ்சம் சின்னது என்ருள் அதனுல்தான் உங்களுக்காகபோட்டேன் இந்த அளவுக்கு இதை!

மூர்:—அப்படியா?...சரி, எடுத்துக்கொள்கிறேன் சந்தோஷமாக.

ருக்: போய் வைக்கட்டுமா கூடத்துப்பைக்குள்! (நகர்கிருள்).

மூர்:—அந்தப்பைக்குள்ளா? வைத்தால், காசிக்கு வராது டேபிள் கிளாத்!

ருக்:—ஏன்?

மூர்:—அந்தப்பைக்குள்ளே இருக்கிறதெல்லாம் சிநேகிதர்களுக்காக எடுத்துப் போகவேண்டிய சாமான்கள் அதைக் கொண்டுபோகவேண்டாம் என்ருள் அம்மா.

ருக்:—இங்கேயே வைத்துவிட்டா போகப் போகிறீர்கள்?

மூர்:—ஆம். மாதுருவாக்கிய பரிபாலனம் செய்வதற்காக!

ருக்:—ஐயையோ! கொடுத்தவர்களுக்கெல்லாம் ஏமாற்றமாகி விடுமே!

மூர்:—காசியிலிருக்கும் விதவிதக் கல்லூரி மாணவர்களுக்கும் தான் ஏமாற்றம்! என்ன செய்கிறது! அம்மா வீம்பாய் இருக்கிறாள்.

ருக்:—முதலில் ஒப்புக்கொண்டு அப்புறம் எடுத்துப் போகாமல் இருப்பது கேவலமில்லையோ?

(கணீர் என்ற ஓசை கேட்கிறது)

மூர்:—அம்மா டிபன் செட்டைக் கீழே போடடுவிட்டாள்போலிருககு!

ருக்:—கொட்டியிருக்குமே வறுவல் கிறுவலெல்லாம். நான் போகட்டுமா ஒத்தாசைக்கு! (நகர்கிறாள்)

மூர்:—இரு. இங்கேயே, கொஞ்சம் பேசுவோம்! நீ இப்போ இங்கே வந்தது ரொம்ப சந்தோஷம் எனக்கு.

ருக்:—எனக்கும்தான்! ஆனால் இந்தமாதிரி பையை வைத்துவிட்டுப் போய்விட்டால் அப்புறம்......

மூர்:—அவசரத்தில் நான் மறதியாகப் பையை வைத்துவிட்டுப் போய்விட்டதாகப் பாவனை—அப்புறம் அம்மா, நாளைக்கு அந்தந்த சாமான்களை அவரவர்களிடம் பட்டுவாடா செய்துவிடுவாள். இதுதான் எங்கள் 'பிளான்!'

ருக்:—அது பெருந்தன்மைதான். ரயிலில் கெட்டுப் போய்விட்டது என்று சொல்லி நாமே வைத்துக் கொண்டுவிடாமல் (சிரிக்கிறாள்)

மூர்:—அவ்வளவு அற்பத்தனம் செய்வோமா? (சிரிக்கிறான்)

ருக்:—பெரிய மூட்டையாகச் சேர்ந்துவிட்டதாக்கும் அதான். பாவம் மாமிக்குக் கோபமாயிருக்கும்!

மூர்:—என்ன செய்கிறது? கொண்டுபோனால் நல்ல உபகாரம்தான்!...ஆனால் வழியில் கெட்டுப்போனால் தொல்லை தர்மசங்கடமென்னுதான் அம்மாக்குப் பயம்! மூட்டை அப்படியொன்றும் பிரமாதப்பெரிசுமில்லை இதோ நீயோ. பாரேன்......

ருக்:—ஒரு பைதானே!

மூர்:—ஆம்...இது தான்! (வெளி வருகிறான்)

ருக்:—சரி. இந்த மேலஜ விரிப்பையும் அதில் வையுங்கள்!

மூர்:—அப்புறம்...

ருக்:—உங்கப்பாவுக்குக் கோபம் இல்லையே. காசிக்கு மூட்டை கொண்டுபோவதுபற்றி!

மூர்;—இல்லை. ஆனால் அம்மா சொல்வதும் நியாயம் தான் என்றே எண்ணுகிறார்.

ருக்:—அவ்வளவு தானே! சரி. நான் துணிந்துவிட்டேன் உங்கள் மானத்தைக் காக்க! (வலதில் போகிறாள்)

மூர்:—சரி, சீக்கிரம் செய்...ஏதோ...

ருக்:—இதோ ஒரு நிமிஷம்!...இது ஒரு மூட்டையா, கனமா? (வலதில் ஓடுகிறாள்.)

மூர்:—வண்டிக்காரா! இந்தாப்பா—வா! சீக்கிரம் மூட்டைகளை ஏற்று! நாழியாச்சு! (ஹோல்டாலுடன் வெளியில் போகிறான்)

வண்டிக்காரன் குரல்:—வந்துட்டேன் சாமி! இதோ!

மூர்:—பத்திரம்—நடு ரோட்டு மண்ணில் வைக்காதேப்பா படுக்கையை!

குரல்:—இது தெரியாதுங்களா சாமி. எனக்கு!

மூர்:—(உள் நுழைந்து) அம்மா! எங்கே? ஏன் தாமசம்! (பெட்டியை மெல்ல நகர்த்துகிறான் வாசற் கதவுப் பக்கம்.)

ருக்:—இதோ, நானும் பிடிக்கிறேன் பெட்டியை.

மூர்:—வேண்டாம் ருக்கு. வளைகள் உடையப்போறது. எங்கேயோ போய் வளைகாப்புக்காரிபோல் அடுக்கிக் கொண்டு வந்திருக்கயே. பாவம்! (சிரிக்கிறான்.)

ருக்:—அங்கலாய்ப்பும் நினைவும், நான் மூணுநாள் கஷ்டப்பட்டு ஒரே பிடிவாதமாகப் போட்ட டேபிள் கிளாத் மேலேயும், வலியெடுத்துப்போன கைமேலேயும் இருக்கட்டும்! எவ்வளவு கஷ்டப்பட்டுப்போட்டேன் தெரியுமா?...

மூர்:—தெரியும் காரணம்! நான் இன்றைக்கு ஊருக்குப்போய் விடுவதால்!

ருக்:—போய், இந்த நவம்பர் முதல் அடுத்த ஏப்ரல் வரைக்கும் இந்த ஊரை மிதிக்கமாட்டீர்கள். என் நினைவு எப்படியிருக்கும், தினமும் மாலதியைப் பார்த்துக்கொண்டே இருந்தால்! அதற்காகத்தான்......

மூர்:—அவள் பி. எஸ் சி; நான் எம். எஸ் சி; ஒரே கிளாஸ் அல்ல நாங்கள்! அந்தக் கறுப்பியும் குள்ளியும் என்னை என்ன செய்துவிடுவாள், ருக்கு?

ருக்:—அடிக்கடி அவளை அவள் ஹாஸ்டலில் பார்க்கும் சுதந்திரம் உங்களுக்குத்தரணுமென்று மாலதியின் அப்பா உங்கள் பெயரை அப்ளிகேஷனில் குறித்திருக்கிறாராம்...நீங்கள் வாரம் தவறாமல் அவளைக் கண்டு பேசி வந்தால்...

மூர்:—அதனால்?...

ருக்:—என் நினைவு நாள்தோறும் உங்கள் மனதில் எழட்டும் என்றே இதைப் போட்டேன். அதோ, மாமி!

மூர்:—சரிதான். தினமும் உன் நினைவாக இருந்தால் நான் படிச்சு வாழ்ந்தாற்போல்தான்!

[ஜானகி வருகிறாள்]

ஜா:—தூக்கை எடுக்கிறேன் கிண்ணுன்னு விழுந்துடுத்து ஆணி கழன்று! உம்... இந்தா பிடி.

ருக்:—அதானா மாமி சத்தம்? கொட்டிப் போச்சா சாதம்?

ஜா:—நல்ல வேளை சாதம் கொட்டல்லே.

மூர்:—இன்னும் கொஞ்சம் அடைச்சு வச்சிருப்பாள் முறுக்கு?

ஜா:—ஆமாம். அதனால்தான் கொஞ்சம் தாமசம்! (சிரிக்கிறாள்) என் மனசை அவன் எவ்வளவு நன்னாஅறிஞ்சுண்டிருக்கான் பார்த்தயாடீ ருக்கு! உம், ஊருக்குப போறான், வந்து இன்னும் ஒரு மாசம்கூட ஆகல்லே!...

(குரலில் கம்மல்)

மூர்:—அதுக்காக அழுவானேன் அம்மா நீ! இதோ, காவேரிப் பாட்டிக்குச் செய்ததுபோல சாஷ்டாங்க நமஸ்காரம் செய்கிறேன் உனக்கு!

ஜா:—(கண்களைத் துடைத்துக்கொண்டு) மகராஜனாயிருப்பா! பணமெல்லாம் பத்திரம்! போய்ச் சேர்ந்ததும் கடிதாசும் போடு!

மூர்:—உம் அப்படியே. கையில் என்ன இன்னும் முறுக்கு? வழியில் தின்கணும்னு சடடைப் பையில் திணிக்கவா? (சிரிக்கிறான்.)

ஜா:—இல்லே ருக்குவுக்காக! இந்தாம்மா! (கொடுக்கிறாள்)

ருக்:—நான் வீட்டில்தான் போய்த் தின்பேன், எல்லாருக்கும் சொல்லிவிட்டு.

ஜா:—உன் இஷ்டம்!

மூர்:—ருக்குமணிக்கு நமஸ்காரம் சொல்லக்கூடாதே நான்! என்ன சொல்லட்டும்? ஜெய் ஹிந்த்!

ருக்:—ஜெய் ஹிந்த்!

மூர்:—சரி, போய் வருகிறேன் அம்மா! கடிதம் போடுகிறேன்! (வலதில் மறைகிறான்)

ருக்:—நான் வீட்டுக்குப் போகணுமே மாமி! எப்படிப் போகிறது? எனக்கு வண்டியில்லையே! (சிரிக்கிறாள்)

ஜா:—அதே வண்டியில் போகிறேன் என்கிறாயா?

ருக்:—அதெப்படி முடியும்? வண்டி நிறைய சாமான்கள் இருக்கே பெட்டி, படுக்கை, 'டிபன் செட்', கித்தான் பை......

ஜா:—என்ன, கித்தான் பையா? எது, கூடத்திலிருந்ததே அதா?

ருக்:—ஆமாம்! நான் கொண்டுவந்த மேஜை விரிப்பை அதுலே வைக்கச் சொன்னேளே! காசிக்குப் போகவேண்டாமா அந்தப்பை?

ஜா:—யார், மூர்த்தியா எடுத்துக்கொண்டு போனான் வண்டியில் வைக்க?

ருக்:—எல்லாத்தையும் அவரே வைக்கும்படி விடுவேனா!—நானும் ஒத்தாசைக்குப் போனேன் பையை நான்தான் வச்சேன்.

ஜா:—அவனுக்கு ஒத்தாசையா நீ செய்தது! தொல்லைன்னா!

ருக்:—நிஜந்தான் மாமி. கஷ்டம்தான் பாவம், உங்களுக்கும் முறுக்குசசுற்ற எத்தனை சிரமம்? நான் செய்த குற்றத்துக்குத் தண்டனை இந்த முறுக்குகளை வாபஸ் வாங்கிக்கொள்கிறீர்களா? (சிரிக்கிறாள்) ஆனால் நான் தரமாட்டேன்!

ஜா:—போடீ பைத்தியமே! என் எதிரேயே தின்னுன்னுதான் தண்டனை விதிப்பேன்! உம், கடைசியில் நான் நினைசசதுக்கு மாறாபபோச்சு! என்ன செய்யறது!

ருக்:—எட்டுக் குடும்பமோ, பத்துக குடும்பமோ சந்தோஷப்படுகிறது என்று நாமும் சந்தோஷப்படலாம் மாமி!

ஜா:—நாலு வேஷ்டிகள், இரண்டு புஸ்தகம், இங்க், பொருவிளங்காய் உருண்டைகள். பத்தான் செருப்பு, ரூபாய் எண்பது. தேங்காயெண்ணெய், ஏழாச்சு, இன்னும்

ருக்:—நான் கொண்டுவந்த மேஜை விரிப்பு! எட்டாவது! (சிரிக்கிறாள்) அஷ்ட லக்ஷ்மி!

ஜா:—பிறருக்கு சநதோஷம்னா எனக்கும் சந்தோஷம்தான் ஆனால், பாவம் அவனுக்குத்தான் கஷ்டம்!—அவனும் ஒபபுக்கொண்டான் நான்சொன்னதுக்கு! அப்புறம் எப்படி மாறித்து அவன் மனசு?

ருக்:—நான் தான் காரணமாயிருக்கலாம், பையை நானே கொண்டுபோய் வைத்துவிடடதனால்!

ஜா:—ஆனால், எப்படி ஒபபினான்? நான் கொண்டு போக வேண்டாம்னேன்! சரின்னானே! நிச்சயமாயிருந்தானே!

ருக்:—நானும் பைக்குள்ளேயே மேஜைத் துணியை வச்சேன்—அதனால்தானோ என்னமோ எல்லாத்தையுமே......(சிரிக்கிறாள்)

ஜா:—சரிதான்! தெரிஞ்சுதுடி!—வருகிற சித்திரையிலோ, வைகாசியிலோ, இரண்டுபேருக்கும் முடிச்சுப் போடவேண்டியதுதான்! (சிரிக்கிறாள்)

ருக்:—போங்கோ, மாமி!

ஜா:—எங்கே போகட்டும்? தட்டானிடம் தாலிக்குச் சொல்லவா? (சிரிக்கிறாள்)

ருக்:—காசிக்கு மூட்டை பெருகினபபோலவே, யோசனையும் வலுத்துப்போச்சே மாமி! (சிரிக்கிறாள்)

[திரை]



நாமொன்று நினைக்க...!

ய. மகாலிங்க சாஸ்திரிகள் எம். ஏ., பி. எல்.

முத்துசாமி தன் கல்யாண பிரஸ்தாபத்தை முதலில் ஏதோ ஸ்வப்னத்தில் கேட்பதாக நினைத்தான் அவனுக்கு ஸ்ரீமான் வேங்கிட சுப்பையரிடம் தான் போய் வந்த பிறகு தன்னிடத்திலேயே ஒரு அவநம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. நான் பெரிய இடங்களில் போய் பழக லாயக்கில்லாதவன். ஐயர் அவர்களின் உயர்வு எவ்வளவு? என் தாழ்வு எத்தகையது? ஏதோ சரி சமனாக நின்று பேச்சுக்குப் பேச்சு எதிர்த்து உரையாடிவிட்டு வந்துவிட்டேனே! நான் போன காரியம் என்ன? நான் பேசினதையெல்லாம் பேசியிருக்க வேண்டிய அவசியம் என்ன! அவர் என்னை வாயைக் கிண்டி வேடிக்கை பார்த்திருக்கிறார் அதை நான் உணராமல் அவருடைய பால்யத் தோழன்போல் மிக்க உலகானுபவம்பெற்ற பழைய பெருச்சாளிபோல் பெரிய பெரிய அபிப்பிராயங்களையெல்லாம் ஆழ்ந்த ஆலோசனையினால் கடைந்து எடுத்துவிட்டவன்போல் உறுதியும் உதாசீனமும் தொனிக்கும் வகையில் வாயில் வந்ததை எல்லாம் உளறிக் கொட்டி விட்டேனே! அவர் என் மூடத்தன்மையைப் பார்த்து மனதில் எவ்வளவு சிரித்துக் கொண்டாரோ!......''

முத்துசாமி ஐயர் கேட்ட கேள்விகளையும் அவைகளுக்குத்தான் உரைத்த பதில்களையும் பதினெட்டாவது முறையாக ஞாபகப்படுத்திக் கொண்டான். ஒவ்வொரு தடவையிலும் அவனுக்கு வேங்கிட சுப்பையர் அழுத்தமான மனோபாவத்துடன் கேள்விகள் கேட்டதாயும், தான் அவரிடம் தகாத தற்பெருமையுடன் வம்பளந்து அசடு வழிந்து விட்டதாயும் அவன் நினைத்து நினைத்து வெட்கித் தன்னையே நொந்துகொண்டான்.

தான் வயதுவரம்புதாண்டிக்கீழ்ப் படிப்புப படித்ததால் வெறும் தடியனாய் படிப்பில் அக்கரை செலுத்தாமல் காதல் கடிதம் வரைவதி காலத்தைச் செலவிடுவதாக அவர் குத்திக் காண்பித்ததுதான் அந்த ஸம்பாஷணையின் ஸாரம் என்று அவனுக்குத் தோன்றிற்று. தன்னுடைய பதில்களால் தான் காதல் கடிதம் எழுதும் தூர்த்தனென்றே அவர் முடிவு செய்திருப்பாரென்றும். அதன் பலனாக ஹெட்மாஸ்டர் மூலம் தனக்குத் தக்க தண்டனை விதிக்கப்படுமென்றும் அவன் எதிர்பார்த்திருந்தான் ஐயர் அவர்களை நேரில் சந்தித்துப் பேசியும் உள்ளத்தை உள்ளபடி சொல்லிவிடத் தீர்மானித்திருந்தும் ஒன்றும் சொல்லச் சந்தர்ப்பம் ஏற்படாமல் விபரீதமான அர்த்தம் செய்து கொள்ள இடம் அளிக்கும் வகையில் வார்த்தைகளைப் பேசிவிட்டு வந்தது பெரிய துரதிர்ஷ்டமென்று அவன் துக்கித்தான். சர்மாவின் பிரஸ்தாபத்தை ஸம்பாஷணையில் புகுத்தச் சந்தர்ப்பம் ஏற்பட்டபோதுதான் ஹிதோபதேசக் கதையை உதாரணமாய் எடுத்துக் கூறி மேலே விவரிக்கப் போகும் முன் அதற்கு மேல் பேச இடம் கொடுக்காமல் ஐயர் மூட்டுக்கட்டை போட்டுப் பேச்சை வேறு வழியில் திருப்பியது ஏன் என்று அவனுக்கு விளங்கவில்லை

“அந்த சம்பாஷணை முழுவதுமே கடிவாளம்பிடித்தசாரதிபோல் அவர் என்னை இங்குமங்கும் திரும்ப விடாமல் தட்டி ஓட்டிக்கொண்டு போனார் என்பது நிச்சயம் கடைசியில் நான் தான் அந்தக்காதல் கடிதம் எழுதினவன் என்ற முடிவுக்கு அவர் வந்தார் என்பதற்கு அவருடைய பிந்திய சில வார்த்தைகள் சந்தேகமில்லாமல் அத்தாக்ஷியாகின்றன அவ்வார்த்தைகள் நான் குற்றவாளியானாலும் அவர் என்னை மன்னித்துவிடக் கூடும் என்பதை உணர்த்துபவை போல் காணப்பட்டன அப்போதாவது நான் ‘குற்றமிருந்தாலல்லவா மன்னிப்புப் பெருந்தன்மைக்குப் பொருத்தமாகும், ஆறுதல் தரும்; இல்லாக் குற்றத்தைக் கற்பனை செய்துகொண்டு மன்னிப்புக் கொடுக்க முன் வருவது வஞ்சகமாகும் நல்லோர் மனத்தைப் புண்படுத்தும் சதியாகும்!' என்று ஏன் சொல்லியிருக்கக்கூடாது? அப்படி என் மட்டில் உள்ள நீதியை எடுத்துரைக்காமல் ஏதோ மேதாவித்தனமாய் பொது நீதி நுட்பமுரைப்பவன்போல் நான் பேசிய வார்த்தை, நான் மட்டும் காதல் துறையில் குற்றவாளியல்ல, உங்கள் வீட்டுப் பெண்ணும் அதில் கூட்டாளியாவாள் என்று பொருள்படும் வகையில் அமைந்து விட்டது ஐயர் அவர்கள் என் பேரில் கொண்ட தப்பு அபிப்பிராயத்தை எப்படி மாற்றுகிறது? தும்பைவிட்டு வாலைப பிடிக்கும் மடமை அல்லவா இது ஹெட்மாஸ்டரிடம் சொல்லிப்பார்க்கிறேன். ஐயர் என்னைப்பற்றித்தான் கண்டறிந்தபடி ஹெட்மாஸ்டரிடம் உரைப்பாரேயானால் இவர் ஒன்பது பெண்களின் மத்தியில் நானிருக்க இனி ஒருக்கணமேனும் சம்மதிப்பாரா? ஏது! இந்தப்பரீக்ஷை எழுதுவதற்குள் நமக்கு எவ்வளவு விக்னம்!—''

முத்துசாமி தனக்குக் கிடைக்கும் எந்த ஸ்தானமும்—எந்த ஆச்ரயமும்—கண்டம் நிறைந்ததாகவே இருப்பதைப்பற்றி நினைக்கலானான். கத்திமுனையில் தாண்டவமாடுவதும், கம்பியின்பேரில் நடப்பதும், மண் குதிரையை சவாரி செய்து ஆறு கடப்பதும் தனக்கு அடிக்கடி பிரும்மனால் சோதனைக்காகவே விதிக்கப்பட்டு வருவதாக அவன் எண்ணினான் தன்னுடைய தற்கால நிலையை தான் சமாளித்து வருவது பற்றி அவன் நினைக்கும்போது அவனுக்கு மயில் வாஹனத்தில் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி வீற்றிருப்பது தக்க உதாரணமாய்த் தென்பட்டது அதில் சுலபமாய் எதிர்பார்க்கக்கூடிய நொடிப்பிற்குத்

தான் இலக்காகப் போவதை அவன் நிச்சயம் செய்து கொண்டான் முத்துசாமி காவ்ய நாடகங்கள் படிக்காதவனா? நல்ல ரஸிகனல்லவா? காவ்ய நாடகங்களில் ஸ்திரீ ரத்னங்களின் ரூபலாவண்யம் சித்திரிக்கப்பட வில்லையா? அவர்களின் லீலாவிலாஸங்கள் வருணிக்கப்பட வில்லையா? சிருங்கார பாவங்களின் வெளி இங்கிதங்களான கடாக்ஷம் முதலியவற்றின் தன்மையை அவன் அறியாதவனா? பச்சைக் குழந்தையா! கல்யாணமாகிற வயதில் பத்துக் கன்னிகைகளை வீட்டிலும் வெளியிலும் தினம் பார்த்துக் கொண்டிருப்பவன் தனக்கு விவாஹத்திற்குரியவளைப்பற்றிச் சிந்திக்காமலிருக்க முடியுமா! இருந்தாலும் ஒரு பேச்சிற்கு இடமில்லாமல் எல்லோரும் உத்தமன் என்று கொண்டாடும் ரீதியில் அவன் நடந்து கொண்டதற்குக் காரணம் அவனுடைய சீலம் அவன் ஸத்குலத்தில் பிறந்த நற்சீலன் வினயசம்பத்தைப் பிறவி பாத்தியதையுடன் அடைந்து ஆண்டுவருபவன் புலன்களை சீரிய வழியே நடத்தும் பண்புடைய சாரத்யவீரன் இயற்கையிலேயே தகாத எண்ணத்தைத் தவிர்த்துத் தூய்மையையே நிரந்தரமாய் நாடும் சுத்த மனமுடைய ஸாத்விகன் கவர்ச்சியினால் அவன் உள்ளம் கொள்ளைகொண்டு போகப்படமாட்டாது தனிமை அவன் தளர்ச்சிக்குக் காரணமாகாது இன்பம் நெறியுடன் ஒற்றுவிளங்காவிட்டால் அவனுக்குச் சுவைதர வல்லதாகாது துன்பம் நன் நடத்தைப் பாதையில் பதிந்து கிடந்தாலும் அவனை தைரியமிழக்கச் செய்யாது அழுக்கு அவனை அணுகாது ஒழுக்கம் அவனைக் கைவிடாது இழிவான சேர்க்கை அவனுக்கு தெய்வகதியால் ஏற்பட்டாலும் அவன் சாம்பல் பட்ட கண்ணாடி போல் தெள்ளிய திருமேனியுடன் வெளி வருவான்

இளம்வயதில் விவேகியான முத்துசாமி தாமரையிலையில் நீர்துளி போல் வாழ்க்கையில் ஒட்டாமல் உறைந்து வந்தான்

அவன் செல்லத்தைத் தனிமையில் சந்தித்துப் பேசவேண்டிய அவசியம் ஏற்பட்டதிலிருந்து அவளுடைய மனோநிலைமையில் சிறிது சிறிது மாறுதல் ஏற்பட்டுவந்ததை அவன் ஊகிக்காமலில்லை ஆனால் அந்த ஊகத்தை ஆதாயமாய் வைத்துக்கொண்டு அவன் அதற்கு மேல வடடிக்கணக்குப் போடவில்லை. 'கஃ காம: ஸங்கல்ப:' என்று 'பிரச்னோத்தர மாலிகை' சொல்லுகிறது முத்துசாமி ஸங்கல்பத்தை வேரிலேயே அறுத்துவிட்டான். ஸங்கல்பத்திற்கு அவன் இடம் கொடுத்திருந்தால் பல வேர்கள் ஓடி அவனைக் கட்டி வீழ்த்தியிருக்கும் “ப்ரமதி புவனே கந்தர்ப்பாக்ஞா விகாரிச யௌவனம் லலித மதுராஸ்தே தே 'பாவா: க்ஷிபந்தி தீரதாம்.'' என்று பவபூதி மஹாகவி சொன்னதுபோல், ஒரு யுவனின் மனதைப்பற்றியிழுக்க நாலாபக்கங்களிலும் வசீகரமான இன்பக்காக்ஷிகள் உலகத்தில் நிறைந்திருக்கின்றன அவற்றை மனதில் புகுந்துகொள்ள விட்டுவிட்டால் பின்பு அவை படுத்திவைக்கும்பாடு சொல்லவொண்ணாது. தர்மம், நீதி, வினயம் இவைகளின் நியதிக்கு உள்பட்டு நடக்கும் அப்பியாஸத்தைச் செய்திருந்தால் சஞ்சலங்களை வெல்லும் உதாசீன புத்தியை உள்ளப் புரட்சிக்குப் பேரணையாக நிறுத்தி மோஹம், மயக்கம், ஆவேசம் இவைகளைத் தடுத்துக்கொண்டு துல்யமான வாழ்க்கை நடத்தலாம். ஸர்வகாலத்திற்கும் ஸர்வ லோகத்திற்கும் பொருத்தமானதும், ஹிதமானதுமான உபதேச மொழி ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரால் வழங்கப்பட்டிருக்கிறது பெரியோர்களின் சாஸ்திர விதிகள் ஒரு மனுஷ்யனால் அபேக்ஷிக்கப்படும் பெண்டுகள், பிள்ளைகள் உறைவிடம் உணவு, வஸ்திரம், ஆபரணம் இன்னும் இது போன்ற எதுவும் விரும்பத்தகாததென்று தடுக்கவில்லை ஆனால் அதை அந்த சுக போகங்களை அடையவும் அனுபவிக்கவும் சில சில அவசியமான வரம்புகளைமட்டும் ஏற்படுத்தியிருக்கின்றன. அந்தக் கட்டுப்பாடுகள் விஷயத்தில் கூட ஒருவனுக்கு த்வேஷம் ஏற்படுமேயானால் எல்லாம்வல்ல இறைவன் தக்கபடி அதற்குப பதில் சொல்லுவான்

“பண்பு'' என்பதே வரையரைகளினால் சீர்படுத்தபபட்ட அனுஷ்டான முறைதான் அதுவே சுத்தமானதும் உண்மையானதுமான சுகத்திற்கும் ஆனந்தத்திற்கும் உத்திரவாதியாகிறது எந்தக்கலைக்கும் அவ்விதப்பண்புதான் ஜீவநாடியாயிருக்கிறது கட்டுப்பாடுகள் நிறைந்தவைதான் கலைகளுக்குள்ள ஆசாரங்கள் ஒழுங்கு நெறி உருபுகள் ஒன்றுக்கொன்று கீழ்ப்படிநது ஒருமைக்குத் தங்கள் பன்மையை அர்ப்பணித்துக்கொள்வது உண்மை ஒன்றையே குறிக்கோளாய்க் கொள்ளுதல் இவைகள்தான் உறுதியையும் அழகையும். ஆனந்தத்தையும் பிறப்பித்து மானிட உலகத்தை ஸ்வர்க்கமாய்ச் செய்கின்றன

பண்பு, பயிற்சியினால்தான் உண்டாகும். பயிற்சிக்கு அடக்கம் திட நம்பிக்கை, கீழ்ப்படியும் தன்மை, பொறுமை, தளரா ஊக்கம், தடை

களினால் பாதிக்கப்படாமை, குறுக்கிடும் போலிப்பயன்களினால் சஞ்சலமின்மை இவை அவசியம். உயரிய, அரிய பலன்களை ஒரு நாள் முயற்சியினாலாவது, வெறும் வாய்ப்பேச்சினாலாவது அடையமுடியாது பல காலப்பயிற்சி ஒன்றே அப்பண்பைத்தரக்கூடியதாதலால் நம் முன்னோர்கள் சாஸ்திரக்காரர்களின் மூலம் ஒருவன் பிறந்தது முதற்கொண்டே அவனுக்கு அப்பயிற்சியைத் தரக்கூடிய பற்பல விதிகளைச் சிறிது சிறிதாக பளுவில்லாமல் அனுஷ்டிக்க கூடிய வகையில் ஆக்கித்தந்திருக்கிறார்கள். "ஸம்ஸ்காரம்" என்ற பதமே பண்புக்குரிய சீர்ப்படுத்தல் என்ற பொருள்படும். இந்தப்பண்பு ஒரு ஜன்மத்திலல்ல! பல ஜன்மங்களில் ஒரு தலை முறையிலல்ல, பல தலை முறையாய் அனுஷ்டிக்கப்படும் சீர்ப்படுத்தும் ஸம்ஸ்காரங்களால் படிப்படியாக மேன்பட்டதாகிறது வாழ்க்கைப் பண்புகளில் இல்லற வாழ்க்கைப் பண்பே முக்கியத்துவம் பெற்றதாகையால், ஸம்ஸ்காரங்களுக்குள் விவாஹ ஸம்ஸ்காரமே முக்கிய ஸ்தானம் பெற்றிருக்கிறது.

இந்த ஸம்ஸ்காரத்தின் சுத்தியினால் வம்ச சுத்தி ஏற்படுகிறது. சுத்த வம்ச ஸந்ததிகள் ஆத்மோத்தரணம், குலோத்தரணம், லோகோத்தரணம் என்ற மூன்று க்ஷேமங்களுக்கும் காரணமாகும் யோக்யதையுள்ளவர்களாகிறார்கள்.

முத்துசாமி அத்தகைய யோக்யதையைப் பரிபூர்ணமாய் பிறவியினாலும், ஸஹவாசத்தினாலும் பயிற்சியினாலும் பெற்றிருந்தவனாதலால், ஒரு ரிஷி குமாரன் குருகுல வாசம் செய்வதுபோல் அவன் ஆசார்ய கிருஹத்திலிருந்து வித்யாப்பியாசம் செய்து வந்தான்.

பிரும்மசரிய தர்மத்தில் சிரத்தையுள்ள அவன் கிருஹஸ்தாச்ரமத்தைப்பற்றிய சிந்தனைகளுக்கு இடம் கொடுக்கவே இல்லை ஆதலால், ஹெட்மாஸ்டர் தன்னைக் கண்டிக்கவோ தண்டிக்கவோ செய்யாமல் தன் ஜாதகத்தை ஸ்ரீமான் வேங்கிட சுப்பையருக்கு அனுப்பியதையும், கல்யாண பிரஸ்தாபம் செய்ததையும் பார்த்து முத்துசாமி ஆச்சரியத்திற்குள்ளானான்.

தன்னைக் கண்டனை தண்டனைகளுக்கு உள்படுத்தி 'வீட்டைவிட்டுப்போ? என்று ஹெட்மாஸ்டர் சொல்லியிருந்தால் அதை முத்துஸ்வாமி வரவேற்க தயாராக விருந்தான். அப்படி ஒன்று



மில்லாமல், தான் காதல் கடிதம் எழுதினதாகப் பொய்யாக அனுமானிக்கப்பட்டதையே ஊர்ஜிதம் செய்வதுபோல் பிரஸ்தாப கன்னிகையைத் தனக்குக் கொடுக்க நிச்சயித்தது. தனக்குத் தான் எதிர்பார்த்ததைவிடக்கடுமையாக விதிக்கப்பட்ட ஒரு தண்டனையாக அவனுக்குத் தோன்றிற்று. ஸ்ரீமான் வேங்கிட சுப்பையர் தான் காதலித்ததால் தோஷம் பட்ட கன்னிகையை தனக்கே கொடுப்பதைவிட வேறு வழியில்லை என்று தீர்மானித்தார் போலும் என்று நினைத்து அவன் மனக்கிலேசமுற்றான். **ஸ்ரீ காளிதாஸர் கண்வரைப்**பற்றிக் கூறிய வாக்கியம் அவனுக்கு ஞாபகத்திற்கு வந்தது.

பிடிக்கப்பட்ட திருடனிடம் அவன் திருடிய பண்டத்தைத் திருப்பிக்கொடுத்து "சரி நீயே எடுத்துப்போ" என்று சொத்து உரிமைக்காரன் சொன்னதுபோல் இந்த மனப்பான்மையில் செல்லத்தைத் தனக்குக்கொடுக்க அவர்கள் நிச்சயித்திருந்தால் அந்த நிச்சயம் யதார்த்தமில்லாத ஊகத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது அவனுக்கு வெறுப்பாயிருந்தது 'காதல் கடிதம் நான் எழுதவில்லை. அதை அறிந்தும் செல்லத்தை எனக்குக் கொடுப்பீர்களா' என்று கேட்டுவிட்டால் தேவலைப்போல் அவனுக்கு ஆத்திரமாக விருந்தது. ஆனால் ஹெட்மாஸ்டர் பேச்சுவார்த்தைகளிலிருந்து ஸ்ரீமான் வேங்கிடசுப்பையர் அவரிடம் அந்தப் பாழாய்ப்போன கடிதத்தைப்பற்றிச் சொல்லியிருப்பார் என்றே நினைக்க முடியவில்லை அப்படியிருக்கும்போது தானாக அதைப்பற்றி எப்படி மறுப்பு வாதத்தைத் தொடர்வது என்று அவன் கலங்கினான். சாருதத்தன் வஸந்தஸேனையின் நகைகளைத் திருடிக் கொண்டு அவளைத் தான் கொலை செய்ததாக ராஜச்யாலனால் நியாயாதிகாரியின் முன் குற்றம் சாட்டப்பட்டுக் குற்றத்தையும் நம்பத்தகுந்தவைபோலுள்ள பொய்ச்சாக்ஷியங்களினால் ருசுப்படுத்த முயன்றபோது நிராசையால் குற்றத்தை ஒப்புக்கொண்டதுபோல் 'சரி அப்படியே நான் செய்ததாக வைத்துக் கொள்ளுங்கள்' என்று கூறி தண்டனையை ஏற்றுக்கொண்டதுபோலாகும் தான் தன் தலையில் சுமத்தப்பட்ட அந்தக் கடிதமெழுதிய குற்றத்தை அங்கீகரித்து செல்லத்தைப் பெற்றுக்கொள்வது என்று அவன் நினைத்தான். இந்த எண்ணங்களினால் உதித்த குழப்பம் கொஞ்சம் தெளிந்தபின் அவன் தனக்கு அதற்குள் எதற்கு விவாஹம் என்று சிந்திக்கலானான். ஆனால் யாருமே அவன் சம்மதத்தைக் கேட்க நினைத்ததாய் தெரியவில்லை யாருமே அவனுக்கு ஆக்ஷேபனை இருக்கும் என்று எள்ளளவும் சந்தேகித்ததாகத் தோன்றவில்லை. செல்லத்தின் அபிப்பிராயத்தை மட்டும் தெரிந்துகொண்டிருப்பார்கள் போலிருக்கிறது என்று அவன் மனதில் ஒரு எண்ணம் உதயமாயிற்று. காந்திமதியைப்போல் செல்லம் அன்று தன்னை வரவேற்காததிலிருந்தும், ஒளிந்திருந்து தன்னையே கவனித்துக் கொண்டிருந்ததிலிருந்தும் கொஞ்சநாளாகவே அவன் பள்ளிக்கூடத்தில் கண்ணில் பட்டபோது கூட நாணத்தின் அறிகுறிகளுடன் தனக்கு எதிர்படாது மறைந்து வந்ததிலிருந்தும் அவன் செல்லத்தின் ஹ்ருதயம் தன் விஷயத்தில் அபிமுகமான ஒரு மாறுதலை அடைந்திருந்ததாக ஊகித்தான் அந்தக் காதல் கவிதைக்குத்தான் கர்த்தா என்ற பிரமையும் அவளுடைய தாஸனாக நான் காத்திருப்பதாய் அவளுக்குப்



தொடர்ச்சியாக 15 தினங்கள் வரை தீக்குழம்பைக் கக்கிக்கொண்டிருந்த எரிமலையின் பா மே மேலே தோன்றுகிறது. சென்ற மாதம் 9-ந் தேதி நியூஸிலந்திலுள்ள 'கௌரோ' என்ற இம் மலையின் தோற்றத்தை பிரபல விஞ்ஞானிகள் பார்வையிட்டார்கள். விமானத்திலிருந்து எடுத்த படம்.

போதித்திருக்கிறது போலும் என்று நினைக்க அவனுக்குச் சிரிப்பு வந்தது. 'நளன் இந்திரனுக்காக தமயந்தியிடம் தூதுசென்றான் தமயந்தி நளனையே காதலித்தாள் இந்திரனை உபேக்ஷித்தாள் அதைவிட இது விநோதம். இந்தக் கடிதம் யாரால் யாருக்கு அனுப்பபபட்ட தூதன்? அதன் மூலம் நான் செல்லத்தைக் காதலிப்பது நிர்ணயமாகி விட்டது? பிறகு என்னைக் கேட்பானேன்? ஆதலால்தான் என் சம்மதத்தைப் பற்றிய சந்தேகமே ஒருவருக்கும் ஏற்படவில்லைபோலும்!' 'ஸ்ரீமான் வேங்கிட சுபபையர் அன்று சம்பாஷணையின் இறுதியில் சில காதல் கடிதங்கள் வரவேற்கப்படலாம் அப்போது அவற்றைக் குற்றமென்று கருதுபவர்கள் இருக்கமாட்டார்கள் அல்லவா" என்று கேட்டதன் மூலம் "உன் மனுவை அனுமதிக்க எங்களுககு ஆக்ஷேபணையில்லை என்று தெரிவித்துக் கொண்டார். அதற்கு என் வாயில் வந்த பதில் வாக் தேவதையின் பிரேரணையினால் தோன்றியதுபோல் அமைந்ததே ஒழிய என் சிந்தனையை அநுசரித்து உதயமானதாகவே சொல்லமுடியாது. நான் என்ன சொன்னேன்! 'தன் வீட்டுப் பெண்ணின் போக்கை அறியாத சுற்றத்தார் அக்காதல் கடிதத்தைக் குற்றமாக எடுத்துக்கொள்ளலாம்" என்றேன் இதனால் செல்லத்தின் ஹ்ருதயத்தை நான் அறிந்தே தான் அதற்கு அனுகுணமாகக்காதல் கடிதம எழுதினேன் என்று தீர்மானித்துக்கொள்ளக்கூடும் அல்லவா! என் வார்த்தையைக் கேட்டு அவர் சிரித்தார் அந்த சிரிபபிற்கு என்ன அர்த்தம்? "எல்லாம் நான் அறிவேன்" என்று அர்த்தம்! உண்மையில் பார்த்தால் ஒரு பிரமைக்கு இன்னுமொரு பிரமை ஆதாரம். உலகமே இப்படித்தான் நடக்கிறது! சரி: எப்படியோ கல்யாணம் வந்து சேர்ந்தது. பிராப்த காலம் வந்தால் யாரை விடும்?

முத்துசாமி சிந்தனை அலைகளில் புரண்டு புரண்டு ஒரு மாதிரியாகக் கரை வந்து சேர்ந்தான் வர வர முதலில் தோன்றிய ஆக்ஷேபங்கள் ஆழத்திற்குச்சென்றன கொதிப்பு ஆறி வந்தது. நெரடல்கள் ஒத்துப் போய்விட்டன. குழப்பம் தெளிந்தது. செல்லத்தின் முகம் சிந்தனை வானத்தில் சந்திரன்போல் பிரகாசிக்க ஆரம்பித்தது அவன் உள்ளம் ஸமுத்ரம்போல் பொங்கிற்று

'செல்லத்தை வேண்டாமென்று சொல்லமுடியும்? 'லக்ஷ்மியை பிரார்த்திப்பவன் லக்ஷ்மியை அடையலாம் அல்லது அடையாமலிருக்கலாம் லக்ஷ்மியே ஒருவனைப் பிரார்த்தித்தால் அவனுடைய பிரார்த்தனையை நிராகரிப்பவன் ஒருவன் உண்டா?"

சிவராமன் முத்துசாமியைப் பார்க்க வந்தபோது முத்துசாமி மாப்பிள்ளையாகவே தன்னைத் தீர்மானித்துக்கொண்டான்.

பரீக்ஷை முடிவு சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்து அந்த நிர்ப்பந்தம் நீங்கியதும் மாப்பிள்ளையாகவே திரும்பிவரும் பொருட்டுத் தன் தாயார் இருக்கும் ஊருக்குப் புறப்பட்டுச் சென்றான்.

(தொடரும்)

சிறு விளம்பரங்கள்

புண்ணாகி வலிக்கும் காலா?

உலக புகழ் பெற்ற இந்த ஜாம்பெக் உபயோகியுங்கள்

இவ்வற்புதமூலிகை மருந்தாகிய ஜாம்பெக், களைப்பு, வலி; புண், வீக்கம் இவற்றிற்கு நிவாரணமளித்து புண்ணாகிய காலை குணமாக்கி உமது கால் ஆரோக்கியமாக விருக்கச் செய்யும். கெட்டி சருமத்தையும் ஆணிகளையும் ஜாம்பெக் மிருதுவாக்கி சுலபமாக அகற்றப்பட உதவும். மிருகக் கொழுப்பு இல்லாததற்கு உத்தரவாதம்.

சரும நோய்கள் காயங்கள் பூச்சி கடிகள். புண்ணாகி வலிக்கும் காயங்கள் தசை வலி, தேக குளிர்ச்சி இவற்றிற்கு சிறந்தது.



Zam-Buk

சமனமுட்டி குணமாக்கும் கிருமிநாச மருந்து.

ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா & கம்பெனி
பி. டி மதராஸ்.

ஜோதிஷ வித்வான்

V. S. சேஷாத்ரியாச்சாரியார்

45, பரோடா தெரு,
தியாகராய நகர், சென்னை 17.

ஒரு ஜாதகம் விவரமாகப் பார்க்க ரூ. 5.
எதிர்காலத்தைப்பற்றிய மூன்று கேள்விகளுக்கு ரூ. 2
மேல் கேள்வி ஒன்றுக்கு அணா 12.
ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை,
ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 8.
பிறந்த ஊர், தேதி, மணி தேவை
வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

★

CREAM

ஓர் அருமையான வாசனை க்ரீம் சுத்தமானது. கெடுதலற்றது பயமின்றி உபயோகிக்கலாம். உடனே பலன். வேரிலிருந்து மயிரை உதிர்த்துவிடும். நீண்டகாலம்நிற்கும்.

பவுடர் தேவையானால்.

மேரி டெப் பவுடர்ஸ் கேளுங்கள்

க்ரீம் ஒரு டியூப் ரூ. 1/15. ஒரு ஜார் ரூ 1/8
பவுடர் ஒரு பாட்டில் ரூ. 1/4 .

மேரி அன்டாய்னெட் டி பாரீஸ் தயாரிப்பு

ஸோல் டிஸ்டிரிபியூட்டர்ஸ்:
SARDESAI & COMPANY
Beaumon Chambers, Medows St., Fort BOMBAY.

குகன்
சோப்புகள்

சுதேசி தயாரிப்பு
சலவைக்கு மிகவும் சிறந்தது.

குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

சிறு விளம்பரங்கள்

ரேடியோ இஞ்சினியர்களாக

நிகரற்ற சந்தர்ப்பம் !!!

★

நூற்றுக்கணக்கான மாணவர்கள் பயிற்சி பெறுகிருர்கள். தபால் மூலம் தமிழில் சோதனைப்பாடங்களுடன் கற்பிக்கப்படும். விவரமறிய 2-அணு ஸ்டாம்புடன்.

எழுதவும்.

Radio Institute Of Science,
ARIYALUR — TRICHY Dt.

ஆனந்த குஸுமாகர லேகியம்.

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டுவருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத் தளர்ச்சி, பசியில்லா திருத்தல், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு பித்தம, காசம் க்ஷயம்போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக்கூடியது பத்தியமில்லை

20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி, பி, பார்சலில் தேவையுள்ளோர் தபால் செலவு அணு-14 முன் பணம் அனுப்பி பெறறுக்கொள்ளலாம், விவரமான காட்லாக் இனம்.

மலையாள மெடிகல் ஹால் (Regd.)
189, வக்கீல் புது தெரு
Post Box No. 27. — மதுரை.

ஆபீஸ் ஸ்தாபிதம் : 1924.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்கமெடல்கள் பரிசு பெறறவர். ஒரு வருஷ பலன் எழுத ரூபா 5. ஆருடம் மூன்று கேள்விகளுக்கு ரூபா 2. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

பண்டித காழியூர்

ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
தபோ நிதி, தியாகராய நகர்,
மதராஸ் 17.

வைத்தியரத்ன யு, ராமநாத சாஸதிரிகளின்

ஸித்தமகரத்வஜம்
(தங்கம சேர்ந்தது.)

அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும். திட சாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம. 30 மாத்திரை சீசா 1-க்கு ரூ. 7.

ஸ்ரீ தன்வந்திரீ கவசம்

இதில் வசீகரண மூலிகை பிரதி ஸரஸ்வத்ரம் ஸ்ரீதன்வந்தரீ யந்திரம், இவைகளை மந்திர பூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருப்பதால் ஸகல விதமான பலன்கள் அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. கவசம் 1-க்கு ரூ. 3. (கேட்லாக் இனம்) ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

ஆனந்த பற்பொடி ஒர்க்ஸ், மதராஸ் 4.

அறிவிப்பு

★

மாயவரத்தில் எமது ஜவுளிக்கடையை 10-3-49 முதல் காவிரியாக்குடி லாட்ஜ் காபி கிளப்புக்கு எதிர்புறம் மாற்றப் பட்டிருக்கிறபடியால் அன்பர்களனைவரும் விஜயம் செய்து வேண்டியவற்றை வாங்கிஆதரிக்க கோருகிறேன்

V. S. ராமஸ்வாமி
(S/o. V. N. S. Iyer.)

Prop :
ஸ்ரீகாமகோடி வஸ்த்ராலயம்
பட்டமங்கலத் தெரு,
மாயவரம்.

●

H.O. சுப்பிரமணிய விலாஸ்
பெரிய தெரு. கும்பகோணம்.

சகல விதமான பட்டு ச நூல் ஜவுளிகளுக்த
கைராசியும் நம்பிக்கையுமுள்ள
புதிய ஜவுளிக்கடை
ராம்ராஜ்யா ஹால்
N.R. ராமசந்திர செட்டி & கோ. கடைவீதி...சேலம்

குடும்ப வைத்தியம்

...குச்சாமாமா...

குழந்தைகளுக்கு வயிறு உப்புசமும், இரைச்சலோடு தண்ணி தண்ணியாய் பேதியாவதும்; பேதியானதும் வயிற்று உப்புசம் குறைவதும் பின் கொஞ்சங் கொஞ்சமாக மறுபடியும் வயிறு உப்பி மேற்சொன்ன விதமே வயிறு கழிவதுமாகி அதனால் குழந்தை மெலிந்து பலஹீனப்பட்டு வருமேல்—உப்பிலாங்கொடி என்னும் பச்சிலைக்கொடியை வாங்கி (பச்சிலைக் கடையில் கிடைக்கும்) கொஞ்சம் நசுக்கிக் கஷாயம செய்யவும கஷாயம கொதிக்கும்போது—அடுப்பில் எரிந்து கொண்டிருக்கும் கொள்ளிக் கட்டையை எடுத்து ஒருதரம் மேற்படி கஷாயத்தில் தோய்க்கவும். மேலும் கொஞ்சநேரம் இக்கஷாயம் கொதித்தபின் இதை வடிக்கட்டி ஒரு பாலாடை அளவாக தினம் 3, 4 வேளை உள்ளுக்குக் கொடுக்கவும். மேலே சொன்ன உப்பிலாங்கொடியையே குழந்தையின் இடுப்பில் அரைஞாணைப்போல் கட்டிவைப்பதும், அந்த கொடியைக் குழந்தையின் காலில் பாடகம் போலும், கையில் கங்கணம்போலும கட்டி வைப்பதும் நலம், வலது கையிலும. இடதுகணுக்காலிலும் அதேபோல இடது கையிலும் வலது கணுக்காலிலுமாக மாற்று பாகங்களில் கட்டிவிடுவது நமது பாட்டிமாரின் முறை. நெல்பொரியை ஒரு மெல்லிய துணியில் கிழியாகக் கட்டி, ஜலததிலிட்டு, வேகவிட்டு கிழியை எடுத்துக் களைந்துவிட்டு, வேகும்போது, மெல்லிய துணியின் வழியாய் ஜலத்தில் சேர்ந்து கிடைத்த பொரியின் சத்தை கூடியுள்ள கஞ்சியை கல்கண்டைக கொஞ்சம் கூட்டிக குழந்தைக்கு ஆகாரமாகக் கொடுப்பது மிகவும் நலம். இது வயிற்றின் போகதை நிறுத்துவதுமாத்திரமல்லாது அத்துடன் ஒருவேளை வாந்தியும இருக்குமானாலும் அதையும் நிறுத்தும்.

ஆகார முறை

மற்றும் மேற்படி பொரிக்கஞ்சியில், வேணடுமானல் கொஞசம் வெள்ளாட்டின் பாலையும் சேர்த்துக் காய்ச்சிக் கொடுக்கலாம்.

தாய்ப்பாலை மட்டும் ஆகாரமாய்க் கொண்ட குழந்தைகளானல், தாயுங்கூட பத்யமான ஆகாரத்தை உடகொண்டு அஜீரணம வராதபடியும் சரீரத்திற்கு வாயு அதிகமாகாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அதிகமாய்ப் போகும் வயிற்றுக் கழிவை நிறுத்துவதால், சரீரத்தில் அனுரோகயகரமான சில விஷ குணமுள்ள கழிவுப் பொருள்கள் சரீரததில் நிறுத்தப்படுவதால், சிற்சில உபத்திரவங்கள் ஏற்படக் கூடும். இவற்றைத் தடுப்பதற்காக வயிற்றுப் போக்கை நிறுத்துவதற்கான மருந்துகளைக் கொடுககும் பார்லி கஞ்சி முதலான ஆகாரங்களைக் குழந்தைக்குக் கொடுத்து, மூத்திரம் தாராளமாகப் போகும் வண்ணஞ் செய்துகொள்ள வேண்டியது அவசியம்

வசம்பு என்னும் கடைச்சரக்கை வாங்கி, அதன் மேல் தோலைச் சுரண்டிக் களைந்து சிறு சிறு துண்டுகளாக நறுக்கி இலேசாக நசுக்கிப் பின் சட்டியிலிட்டு வறுக்க, தீயந்து சாமபலாகும். இதைப் பின்னுமொரு தரம் கல்விலிட்டுப் பொடி செய்து சேகரித்து வைத்துக் கொளளவும். இது குழந்தைகளின் பல்வேறு பிணிகளுக்கு உபயோகமாகும். வசம்பிற்கே "பிள்ளை வளர்ப்பான்" என்று ஒரு பெயருமுண்டு இதனால், வசம்பு, குழநதைகளின் வியாதிகளில் எவ்வளவு உபயோகமானதும் முக்கியமானதுமான மருந்தென்று ஊகிக்கலாம். மேற்படி வசம்பின் சாமபலில் வேளைக்கு ஒரு நெல்லிடையாக தினம் 3, 4 வேளை தாய்ப்பாலிலோ, தேனிலோ குழைத்துக் கொடுக்க, குழந்தையின் வாந்தி, இருமல் அஜீரணம், வயிற்றுப் போக்கு இவை குணமாகும். நன்ருய்ப் பசியுண்டாகி ஆகாரமுண்ணும் இந்த வசம்பின் சாம்பலையே, வயிற்றின்மேல் வெந்நீரில் குழைத்துப் பற்றிட, குழந்தையின் வயிற்றுப்புசம் குறையும். மற்றும், மூத்திரம் தடைப்பட்டு நின்றிருந்தால்தானே வெளியாய்ப் போகும் வயிற்றில் நிறைந்து நிற்கும் காற்று வெளியேபோய்,

வயிற்றுப்புசம் குறைந்து சோகம் நீங்கி சுறுசுறுப்புண்டாகும்.

குழந்தைகளுக்கு வயிற்றில் மப்பு சேருவதாலோ, மற்றும், சளி கட்டுவதாலோ ஏற்படும் சுரமும் குணமாகும்.

சாதாரண காலத்திலும், குழந்தைகளுக்கு எண்ணெய் குளி கழிந்தவுடன் வாரத்திற்கிருமுறையாக இந்த வசம்பின் சாம்பலைக் கொடுத்து வருவதால் அனேக பிணிகள் தடைபடும்.

மருந்து புகட்ட வழி

மிகவும் சிறிய குழந்தைகளாயின், இம்மருந்தை விழுங்கத் தெரியாமலிருக்கலாம் அப்போது குழந்தை பாலுண்ணும்போது வாயிற் கொள்ளுமிடத்து இந்த வசம்பின் சாம்பலை, தேனிலோ, நீரிலோ, தாய்ப்பாலிலோ குழைத்து முன் கூட்டியே பூசி வைத்து குழந்தையை பாலுண்ணச் செய்வதால் மருந்தும் ஊட்டியதாகும. குழந்தைகளுக்கு மருநதூட்ட இளந்தாய்மாருக்கு இது ஒரு சுலபமான வழி.

அதிவிடயம் என்ற கடைச் சரக்கின் கஷாயத்தையும் குடிப்பிப்பதால் வயிற்றுப் போக்கு நிற்கும்.

ஓமத்தையோ, குராசானி ஓமத்தையோ சட்டியிலிட்டு வறுத்து அதில் ஜலம் விடடுக் காய்ச்சி எடுத்த கஷாயத்தையும் கொடுப்பதால் வயிற்றுப் போக்கு நிற்கும்.

வயிற்றில் மந்தம் ஏற்பட்டு அதனுல், புளிப்பு நாற்றத்துடன் வெளுத்தும் மாவு கரைத்தூற்றியதுபோலும் உள்ள வயிற்றுக் கழிவும் வாயிலும் புளித்த நாற்றமும் உள்ள குழந்தைகளுக்கு முன் சொன்ன அதிவிடயம், கோரைக் கிழங்கு, கருங்காலிக்கட்டை இவற்றின் கஷாயத்தைக் கொடுக்கலாம். இக்குழந்தைகளின் தாயார்-பாலில் வெள்ளைப்பூண்டின் பருப்பு ஒன்றைக் கூட்டிக் காய்ச்சி, பூண்டை எடுத்து களைந்துவிடடு பாலைமட்டும் குடிப்பதால் அத்தாயின் பாலையுண்ணும குழந்தையின் வயிற்றுக்கோளாறு மாறும.

—



அமெரிக்காவில் நவின சாதனங்களுடன் வீடுகளுக்கு மேஜை, நாற்காலி முதலியவை தயாரிக்கின்றனர். படத்தில் காணப்படும் ஸோபா, நாற்காலிகள், 'கப்போர்டு' முதலியவற்றைத் தனித்தனியாகப் பிரித்தும் உபயோகிக்கக்கூடியவை.



மேஜை விரிப்புகள், நாற்காலி, ஸோபா மீது அற்புதமான கலர் துணிகளில் உறை தைத்துப் போட்டிருப்பதைக் காட்டும் படம்.



படுக்கையறையில் மெத்தை போட்ட கட்டில்கள். மரத்தின் வர்ணம், அறையின் இயற்கையமைப்புக்கு ஏற்றவாறு செய்யப்பட்டுளது. தற்கால மோஸதரில் அமைந்த இதை அமெரிக்கக் குடும்பத்தவர் மிகவும் விரும்புகின்றனர்.

விமலாவின் தம்பி

'மாழ'

அமலன் பத்து வயது சிறுவன் சுறுசுறுப்பு மிகுந்தவன் எப்பொழுதும், ஏதாவது செய்வான் ஒரு நாள் அவன் கடை வீதியிலிருந்து வந்து கொண்டிருந்தான். கையிலே ஒரு மொந்தை- அதிலே எண்ணெய் சில சிறுவர்கள் கிட்டிப்புள் ஆடிக்கொண்டிருந்தனர். புள் ஒரு முறை வேகமாகப் பறந்தது. 'லொட்' என்ற சப்தம்! அதை தொடர்ந்து 'தொப்' என்றும், 'ஐயோ, அம்மாடீ!' என்றும் ஓசை.

பாவம் அமலன் தூக்கி வந்த மொந்தைக்கு அடி! எண்ணெய் எதிர்பாராமல் தரையிலே கொட்டியது அவன் 'ஓ' என்று ஓலமிட்டான். சிறுவர்கள் அவனை இன்னும் கேலி செய்தனர்.

"ஐயோ! என் சின்னம்மா பொல்லாதவள் ஆச்சே. ஏற்கெனவே பேய்-எடுத்ததற்கு எல்லாம் அடிப்பாள், 'கன்னத்திலே இடிப்பாள்' "எண்ணெய் பாழானது. என் தப்பு இல்லை" என்றால் எங்கே கேட்கப் போகிறாள் ஐயோ. அம்மா என்னை ஏன் பெற்றாயோ? இன்று என்ன தண்டனை வருமோ!" என்று அழுதபடி போனான் அமலன்.

வீட்டை நெருங்க நெருங்க அவன் உடல் பதறியது. துக்கம் இமயமலைபோல வளர்ந்தது, அதனை அடக்க முயன்றான் எரிமலை போலக் குமுறியது உள்ளம் மூலை திரும்பினால் வீடு!

ஒரு பெண் தலைவிரி கோலமாக ஓடி வந்தாள் "அக்கா!" என்று அவளைக் கட்டிக்கொண்டான் அமலன். அழுது தீர்த்தான்; எண்ணெய் மொந்தையின் முடிவையும் கூறினான் அவள் பெயர் விமலா.

தம்பீ! நாம் தாயார் இல்லாத பிள்ளைகள் சிற்றன்னை வீட்டின் சர்வ அதிகாரி! நமக்கு ஏது சுதந்திரம். அவர் அடித்தாலும் நியாயம் ஏற்பது கடமை! இன்று என்னைத் தேங்காய் அரைத்துக் கொடுக்க ஏவினாள் குழவிக்கல்லைத் தூக்கினேன், முடியவில்லை திட்டினாள் சித்தி. தலைவிதியை எண்ணி செய்யலானேன் தம்பீ! இதோ பார்! கல் என் கையின்மேல் விழுந்தது, விரலுக்கு அடி-வீங்கிவிட்டது இனி நாம இங்கிருப்பது தகாது. இந்த விரிந்த உலகில் நமக்கும் இடம் உண்டு. வா, போவோம். நம் துன்பத்தைத் தொலைத்து விடுவோம்."

இருவரும் எங்கெங்கோ சென்றனர் காட்டில் அலைந்தனர் அமலன் களைத்துவிட்டான். தாகம் அவன் நாக்கைப் பிடுங்கியது. அருகே ஒரு பொய்கை. அதிலே தண்ணீர் குடிக்கக் குனிந்தான், அங்கே ஒரு வேடன் ஓடி வந்தான். "தம்பீ! அதைக் குடிக்காதே. குடித்தால் சிங்கமாக மாறிவிடுவாய், என் பேச்சை நம்பு" என்றான் வேடன்

கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை, அமலன் மிக வருந்தினான். மெல்ல நடந்தான் சற்று தூரத்தில் ஒரு தடாகம். தண்ணீர் பால் போலத் தெளிந்திருந்தது. அமலன் நீர் குடிக்கக் குனிந்தான். "தம்பீ! தண்ணீரைக் குடிக்க எண்ணாதே. பருகினால் புலியாக மாறிவிடுவாய். திரும்பிப்போ" என்றது ஒரு குரல். கரையிலே ஒரு பெரிய ஜடாமுனியின் பதுமை. அதே கூறியது அவ்விதம.

மேலும் சென்றனர். தொலைவில் ஒரு குட்டை. அதிலே கலங்கிய நீர் 'இதையாவது குடிப்பேன்' என்று எண்ணினான் அமலன். விமலா கரையில் இருந்தாள். அமலன் நீரை அள்ளி எடுத்தான். விமலா ஒரு புதர் பக்கம் போனாள். அடுத்த விநாடி "ஐயோ தம்பீ!' என்று ஓடி வந்தாள் விமலா. எடுத்த நீரை குடிக்கலானான் அமலன்.

"தம்பீ! இந்தத் தண்ணீர் குடித்தவர் மானாய் மாறிடுவாராமே. பாழும் விளம்பரப் பலகை புதற் மறைவிலே உள்ளதே. ஐயோ நான் என்ன செய்வேன் என்று விமலா துடித்தாள் அமலன் வயிறு நிறையக் குடித்தான் ஆனால் பாவம். அவன் உரு மறைந்தது; மான் உரு நிறைந்தது. அழகான மான்- புள்ளிமான்தான்! தம்பியை விடவா மானை விரும்புவாள் விமலா? ஆனால், மான்குட்டியை விட்டுவிட முடியுமா?

"அக்கா! என் முட்டாள்தனத்தை மன்னித்துவிடு நல்ல காலம் பிறக்கும், என்னையும் அழைத்துப்போ" என்றது மான் குட்டி. அது பேசியதைக் கேட்டு விமலா மகிழ்ந்தாள். மெல்லிய கொடிகளால் கட்டி, மானை நடத்திக்கொண்டு போனாள்.

காட்டின் மத்தியிலே ஒரு பெரிய வீடு. அதனுள் யாரும்

இல்லை. பாழ்பட்டுக் கிடந்தது. விமலா அதைச் சுத்தம் செய்தாள். வசிக்க ஆரம்பித்தாள். நடுக்காட்டில் மனிதர் தொந்தரவு ஏது? ஆனால் மிருகங்கள் உண்டு 'கதவை சாற்றித் தாழ்ப்பாள் போட்டால் போச்சு' என்பது அவள் தைரியம்.

"அமலா! நீ வெளியே வரக்கூடாது. நல்ல புல்லும், தண்ணீரும் தருகிறேன். நீ எப்போதும் வீட்டிலேயே இரு. என் தங்கச் சங்கிலியை உன் கழுத்தில் போடுகிறேன். மாலை கட்டி உனக்குக் கொடுக்கிறேன். இருவரும் ஆனந்தமாக இருப்போம்" என்றாள் விமலா. குதூகலமாக மூன்று ஆண்டுகள் கழிந்தன.

"அக்கா! நான் காட்டில் சற்று தூரம் விளையாடி விட்டு வருகிறேன், அனுமதிப்பாயா?" என்றது மான். மான் சற்றுப் பருத்து அழகாக வளர்ந்திருந்தது நல்ல வலுவும் இருந்தது.

"போய் வா! நான் கதவைச் சாற்றி இருப்பேன். கூப்பிடு—திறப்பேன். ஜாக்கிரதை! சீக்கிரம் வந்துவிடு" என்றாள் விமலா.

மான்குட்டி குதித்து ஓடியது காட்டைக் காண்பதிலே ஒரு குதூகலம். வீட்டிலே அடைபட்டு அவதிப்பட்டதல்லவா? இங்கும் அங்கும் துள்ளித் திரிந்தது திடீரென சில நாய்கள் குரைத்துக்கொண்டு வந்தன. குதிரை ஓடி வருவதும் கேட்டது சில சேவகர் வேட்டைக்கு வந்தனர். அவர்களுடன் ஒரு வீரன். அவன் அரசனாகத்தான் இருக்கும் எல்லோரும் மானைக் கண்டனர்.

அடே! அது யாரோ வளர்க்கும் மான். கொன்றுவிடாதீர்கள். உயிருடன் பிடியுங்கள் என்றான் அவன். பணியாளர் துரத்தினர். மான் அவர்களிடம் சிக்கவில்லை. கண்ட இடத்தில் ஓடி இழுக்கடித்தது கடைசியாக வீட்டுக்கு ஓடிவந்தது.

"அக்கா! கதவைத்திற" என்றது கதவு திறக்கப்பட்டது மான் உள்ளே சென்றது: கதவு பழையபடி மூடிக்கொண்டது இதனை ஒரு சேவகன் கண்டான், திரும்பி ஓடினான்.

"ஏன் இப்படி ஓடி வந்தாய்? ஏதாவது ஆபத்தா?" என்று விமலா வினவினாள்.

'நேரமாகிவிட்டதே! என்று ஓடி வந்தேன், ஒன்றும் இல்லை'' என்று மான் சொன்னது. வேட்டைக்காரர்களைப் பற்றி அடியோடு மறைத்துவிட்டது.

விமலா மானுக்கு இளம் புல்லும, தெளிந்த நீரும் தந்தாள் தானும் உணவு உண்டாள் இருவரும தூங்கிவிட்டனர்.

மறுநாள் மான் மறுபடி வெளியில் செல்ல வேண்டிற்று அன்றும் விமலா சம்மதித்தாள் மான் துள்ளி ஓடியது வேட்டை ஆட்களைக் காண-ஓட்டங் காட்டி அலைய வைக்க.

"அடேய்! நீங்கள் இந்த மானை எங்கு சென்றாலும் துரத்துங்கள்: ஆனால், ஒரு தீங்கும்செய்யக் கூடாது" என்று வேந்தன் உத்தரவிட்டான் சிப்பாய்கள் மானைத் தொடர்ந்தனர். மன்னன் ஒரு பக்கம் போனான்



"அக்கா, அக்கா! கதவைத் திற". விமலா ஓடி வந்து திறந்தாள். என்ன ஆச்சரியம், உள்ளே மான் நுழையும் என எண்ணினாள் ஆனால், அரசன்—ஒரு புது மனிதன் நுழைந்தான்.

"பெண்ணே! பயப்படாதே! நான் உனக்கு ஒரு தீங்கும் புரிய மாட்டேன். அரண்மனை அரசியாக இருக்க வேண்டிய நீ, ஆரண்யத்திற்கு ஏன் வந்தனை? உன் மான் பேசும் சக்தி பெற்றிருக்கிறதே,எப்படி?சொல்.அவன் பேச்சு தீங்கு தரவில்லை; இன்பம் தந்தது விமலா தன் வரலாற்றை விளக்கினாள்.

"பெண்ணே! நீ விரும்பினால் என்னுடன் வா நான் உன்னை மணந்துகொள்கிறேன்" என்றான் அரசன்.

"அக்கா!" என்று கூவிக் கொண்டு மானும் ஓடி வந்தது. சேவகரும் வந்தனர் எல்லாருக்கும் பெருமூச்சு-பெரும் வியப்பு.

விமலா நகரம் சேர்ந்தாள். சிற்றன்னைக்கு ஆள் அனுப்பி அழைத்து வரச் செய்தாள். விமலாவைப் பிரிந்த பின் சிற்றன்னையை எல்லோரும் திட்டினர்; அவள் மனம் திருந்தினாள். விமலாவைக் காண ஆவல் கொண்டு ஓடி வந்தாள். பெருந்தன்மையைப் பாராட்டினாள்: அமலனின் கதையை அறிந்து அழுதாள். அவள் கண்ணீர்த் துளிகள் மானின்மேல் விழுந்தன என்ன விந்தை! மான் உரு மாறியது சிற்றன்னை மடியில் அமலன் படுத்திருந்தான்.

நல்ல நாளிலே-சுப வேளையிலே அரசன் விமலாவை மணந்தான். தன் நினைவாக மான் பதுமை ஒன்று பரிசளித்தான் அமலன். விமலா அதனைப் பெற்றுக்கொண்டு களிப்பால் கண்ணீர்விட்டாள்!

தந்தி விலாசம் : "கோகுல்" ஸ்தாபிதம் 1909 டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்ச்: மன்னார்குடி.)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்
பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு
முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

"விஜய ரக்ஷணி"

(மூலகா யந்திர தாயத்து)



இந்த கவசத்தை அணிவதால் கிரஹ சாராதி தோஷம் நீங்கும். ஆரோக்யம், குடும்ப க்ஷேமம், கலியாணம, வியாபார லாபம், பகை சமாதானம் உத்யோக உயர்வு. அதிகாரி விஸ்வாஸம, வியாஜ்ய வெற்றி, பண நிலைமையில் சௌகரியம், மற்றும் ஸகல வழியிலும மேன்மையுண்டாகும். மாணவாகளுககுப் பரீக்ஷை பாஸாகும். குழந்தைகளுக்கு பாலகிரஹ தோஷம் நீங்கி, ஆயுராரோக்யமுண்டாகும. ஜனன விவரம அல்லது பெயர், சுமார் வயது, விலாஸம் குறிபபிடடு எழுதினால கவசம் தயார் செய்தனுப்பப்படும.

விஜய ரக்ஷணி கவசம் 1-க்கு ரூ. 7—8—0
விஜய ரக்ஷணி பிரத்யேக ரக்ஷை 1-க்கு ரூ. 72-8-0
தபால் செலவு தனி.

ஆரூடம் - ஜாதக பலன்

பண நிலைமை, தொழில மாறுதல், லாப நஷ்டம, காதல், கலியாணம், குடும்பம், ஆரோக்யம், படிப்பு அதிருஷ்ட நாள், எண், நிறம், மறறும் முக்யவிஷயங்களும எழுதியனுப்பப்படும். ஜனன கால விவரம அல்லது முழுப்பெயர், சுமார வயது, செய்யும தொழில், கடிதம எழுதும் நேரம் தேவை. ஒன்று முதல் 5 எதிர்கால கேள்விகளுக்குப பதில எழுத ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் ரூ. 6. குழந்தைக்கு ஜாதகம கணித்து ஆயுள், படிப்பு, முகய யோகாம்சம சுருக்கமாக எழுத ரூ. 5. நடக்கும் ஒரு தசைக்கு புக்திவாரி பலன் ரூ. 10. வி. பி. செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
ஹனுமதுபாளி, திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

Estd: 1920

சேலம் மூன்று தாமரை

பீடிகளை உபயோகித்து சந்தோஷமடையுங்கள்

S.A.H.

Rgd. No. 2221.

Prop: S அஹமத் உசேன்,
கோட்டை, சேலம். S.I.R.

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory House Mount Road, Madras. Editor : C. R. Srinivasan B. A.

இந்த பெயர் . . .

ஸோஜ்மல்ஸ்

வைர நகை வியாபாரிகள்.

உங்கள்

நகைகளுக்கு

கௌரவம்

அளிப்பவை

313, நேதாஜி ரோட்,
மதராஸ்.